# புதுப்பித்தல்

திருச்சபையின் வாழ்வில் தெய்வீக
வடிவமைப்பைக் குறித்த ஒரு கருத்தாய்வு

*உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமா–னது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக...* (எபேசியர் 3:10)

டுவைட் ஸ்மித்

Published by Saturation Church Planting International
Syracuse, New York, U.S.A.
Printed in the U.S.A.

Unless otherwise noted, Scripture quotations are from the Holy Bible, English Standard Version®, © 2001 by Crossway Bibles, a publishing ministry of Good News Publishers. Used by permission. All rights reserved.

Scripture quotations marked MSG are from The Message, © 1993, 1994, 1995, 1996, 2000, 2001, 2002. Used by permission of NavPress Publishing Group.

Italics in quotations are the emphasis of the author.

© 2017 Saturation Church Planting
All rights reserved

ISBN-13: 978-0-xxx
For additional information please visit www.spcglobal.org, e-mail info@scpglobal.org, or write to 620 W Genesee Street, Syracuse, New York, 13204, U.S.A.

# உள்ளடக்கம்

முன்னுரை 4

**பகுதி 1**

**திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கம்**

1. நாம் நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறோம் 6
2. திருச்சபையின் நோக்கம் என்ன? 14
3. திருச்சபையானது தன்னுடைய வெற்றியை எப்படி அளவீடு செய்ய வேண்டும்? 22
4. நம்முடைய வாழ்க்கையில் உக்கிராணத்துவம் 31

**பகுதி 2**

**திருச்சபைத் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக ஆயத்தப்படுத்துதல்**

5. இயேசு தம்முடைய திருச்சபைக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்தார் 44
6. திருச்சபைத் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் 51
7. அமெரிக்கத் திருச்சபை இப்போது என்ன செய்ய வேண்டும்? 61

பிற்சேர்க்கை 1: தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துதல் 70

பிற்சேர்க்கை 2: உலகத்தின் பிற இடங்களில் தொலைநோக்கோடு நம்முடைய நோக்கத்தைப் பரப்புதல் 72

குறிப்புகள் 79

# முன்னுரை

நான் 2010ஆம் ஆண்டு வெளியிட்ட *Renovation: Divine Design in the Life of the Church* என்ற புத்தகத்தின் குறிப்பிடத்தகும் மாற்றங்களைப் பெற்ற மேம்படுத்தப்பட்ட பதிப்பாக இந்தப் புத்தகம் இருக்கிறது. தேவன் தம்முடைய திருச்சபைகளின் மீதும், அதை வழிநடத்துபவர்கள் மீதும் கொண்டுள்ள நோக்கத்தைத் தரிசித்துப் பார்க்க இந்தச் சுருக்கப்பட்ட பதிப்பு உதவிகரமாக இருக்கும். அதோடு கூட நான் முதல் பதிப்பை எழுதும்போது தலைமைத்துவம், சீஷத்துவம் மற்றும் தேவன் தம்முடைய மக்களின் மீது கொண்டிருக்கும் நோக்கம் போன்ற தலைப்புகளை மிகவும் விரிவாக எழுதியிருக்கிறேன். ஆனால் இப்போது இந்தத் தலைப்புகளை இன்னும் விரிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இந்தத் தலைப்புகளில் புத்தகங்களை நான் தனித்தனியாக எழுதியிருக்கிறேன்[1]. இந்தப் புத்தகம் திருச்சபையின் வாழ்வைக் குறித்த தெய்வீக வடிவமைப்பைக் குறித்ததாக இருக்கும் என்று நம்மால் கூற முடியும்.

கடந்த வருடங்களில் இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் இளம் ஆண்கள் மற்றும் பெண்களின் மீது தாக்கம் விளைவிக்கும்படியாக எனக்குக் கிடைத்த வாய்ப்புகளைக் குறித்து நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த இளம் வாலிபர்கள் இப்போது முதிர்ச்சி பெற்று தேவனுடைய வடிவமைப்பை வெளிப்படுத்தும் திருச்சபைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் Saturation Church Planting என்று நாங்கள் அழைக்கும் அமைப்பை வழிநடத்துகிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தின் மக்களைக் கொண்டு சுவிசேஷத்தின் பிரசன்னத்தை எல்லா இடங்களிலும் செறிவூட்டிக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றி. பல ஆண்டுகளுக்கு முன்பு தேவன் என்னுடைய இருதயத்தில் கொடுத்த பாரத்தின் நிறைவேறுதலாக நீங்கள் இருக்கிறீர்கள்: இந்த உலகத்தில் சுவிசேஷத்தைப் பரப்பும் பணியைத் தங்களுடைய சொந்த நகரங்கள், தேசங்கள் மற்றும் அதற்கும் அப்பால் கொண்டு செல்லும் பக்தியுள்ள தலைவர்களைக் கொண்டு தலைமுறையைக் கட்டியெழுப்புதல்.

டுவைட் ஸ்மித்

மார்ச் 2, 2017

பகுதி 1

# திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கம்

# 1

# நாம் நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறோம்

அமெரிக்கத் திருச்சபை வழிதவறிச் சென்றுகொண்டிருக்கிறது. கடந்த சில வருடங்களாக நாம் இரண்டாயிரம் வருடங்களாகக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் நம்பிக்கையான நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கடைசிக் கட்டளையை "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி..." (பார்க்க, மத்தேயு 28:19) மறந்துவிட்டோம் அல்லது கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டோம் அல்லது அந்த அழைப்பை இழிவுப்படுத்தியிருக்கிறோம். தேவனுக்காக ஊழியம் செய்த அந்த ஆண்கள் மற்றும் பெண்களின் வழியில் நடக்காமல் இன்றை மேற்கத்திய திருச்சபையானது கிறிஸ்துவிடம் மக்களை இழுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேனொழுகப் பேசும் தலைவர்கள், ரசிகர்களைக் கொண்டிருக்கும் இசைக் குழுக்கள், பெரிய கட்டிடங்கள் மற்றும் சமுதாய நிகழ்வுகளின் மூலமாகச் செயல்படும்படியாக அவைகளைத் தேடிக்கொண்டிருக்கிறது.

நான் இதை "வந்து பாருங்கள்" மாதிரி என்று அழைக்கிறேன். நம்முடைய காலகட்டத்தில் இருக்கும் திருச்சபையானது மக்கள் கூடிவரக்கூடிய இடமாக இருக்க வேண்டும் என்று தன்னைப் பார்க்கிறது. மற்ற பெரிய சபைக்கூட்டங்களைக் காட்டிலும் தங்களைப் பெரிதாகக் காட்டிக்கொள்ள நினைக்கிறது. ஆனால் நாம் இன்று செய்யும் காரியங்களே நம்முடைய தேசத்தின் வரலாறாகின்றன. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் திருச்சபையில் நாம் கட்டியெழுப்பியுள்ள வடிவமைப்புகள் வேதாகமரீதியானவைகளாக இருக்கின்றனவா?

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய மனைவி பேட்டியும் நானும் Saturation Church Planting (SCP) என்ற ஊழியத்தை ஆரம்பித்தோம். நாங்கள் வைத்திருந்த செய்தி புதியதல்ல. வேதாகமத்தின் மையக் கதைக்களத்தின் இறையியல்ரீதியான நீட்டிப்பாகவே அது இருந்தது – பாவிகளாகிய மக்களை மீட்டு, அவர்களுக்கென்று தாம் கொண்டிருந்த ஆதி நோக்கத்திற்குச் சீரமைக்கும்படியாகத் தேவன் ஒரு இரட்சகரை அனுப்பினார் என்பதே அந்த மையக் கதைக்களமாகும். அந்தச் செய்தியானது திருச்சபைத் தன்னைக் குறித்து இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாகப் புரிந்துகொண்டிருந்ததின் வரலாற்றுரீதியான நீட்டிப்பாகவும் இருந்தது.

வேதாகமத்தில் காணப்படும் கதைக்களம் மிகவும் எளிமையானது. அது ஆதியாகமத்தில் துவங்குகிறது. அங்கு தேவன் ஆணையும் பெண்ணையும் தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார் என்பதை நாம் வாசிக்கிறோம். ஆதியாகமத்தில் கூறப்பட்டிருப்பதைப் பார்த்தோமானால் முதலாவதாக தேவனோடு உறவுமுறை கொள்ளும்படியாக மனுக்குலம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக தேவன் அவர்களைச் சிருஷ்டித்து வைத்திருக்கும் இடத்தில் அவர் சிருஷ்டித்த எல்லாவற்றிற்கும் உக்கிராணிகளாக இந்த உலகத்தில் அவருடைய பிரதிநிதியாக இருக்கும்படியாக அவர் மனுக்குலத்தை வடிவமைத்திருக்கிறார். ஆனால் அவர்கள் இதில் தோற்றுவிட்டார்கள். அவர்கள் தோல்வியுற்றதிலிருந்து தேவன் அவர்களுடைய மறுசீரமைப்பைத் தம்முடைய கைகளில் எடுத்துக்கொண்டார். இந்தக் கதைக்களமே வேத வசனங்கள் முழுவதிலும் பரந்து காணப்படுகிறது. தேவனுடைய இரக்கத்தின் மூலமாகவும், இயேசுவின் மூலமாகச் செயல்படுத்தப்பட்ட ஒன்றுபடுதலின் மூலமாகவும், ஆவியானவரின் மூலமாகவும் தேவன் சிருஷ்டிப்பின்போது தாம் கொண்டிருந்த ஆதி வடிவமைப்பைச் சீரமைக்கும்படியான இலக்கை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிருபையாகக் கொடுத்திருக்கிறார்: அவரோடு கொண்டிருக்கும் உறவுமுறை மற்றும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவது[2]. இந்த உலகத்தின் முடிவு நீதியை நிலைநிறுத்துவதில் இருக்கிறது. அது வெறுமனே சிலரில் மட்டும் நிகழ்வதில்லை அது புதிய உலகம் முழுவதும் இருக்கப்போகிறது. அதில் நீதியே ஆளுகை செய்யும். மக்கள் தேவன் தங்களுக்காகக் கொண்டிருக்கும் வடிவமைப்பில் வளர்ந்து முதிர்ச்சியடைவார்கள்.

ஆதாம் மற்றும் ஏவாளை சிருஷ்டித்தபோது தேவன் வடிவமைத்த ஆதி வடிவமைப்பிற்கு ஆண்களையும், பெண்களையும், சிறுபிள்ளைகளையும் சீரமைக்கமுடியும் என்பதே சுவிசேஷத்தின் மைய செய்தியாக இருக்கிறது: நமக்குப் பதிலாகக் கடைசி ஆதாமாகிய தம்முடைய குமாரனின் மரணம், அடக்கம் மற்றும்

உயிர்த்தெழுதலின் மூலமாக அவரோடு கொள்ளும் *உறவு* மற்றும் அவரைப் *பிரதிநிதித்துவப்படுத்தல்* ஆதாவது நாம் அவர் மற்றும் அவருடைய ராஜ்யத்தின் பயனுக்காகச் சீரமைக்கப்படுதல். அதோடு இயேசுவில் தேவன் கொடுத்த இரக்கத்தின் செய்தியின் மனிதரூபமாக நம்முடைய வாழ்க்கையின் எல்லா இடங்களிலும் பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தினமும் வழிகாட்டும் வழியில் உக்கிராணிகளாக இருத்தல். மனுக்குலத்தின் பாவகரமான நிலையைச் சுகமளிக்கும் வல்லமையைச் சுவிசேஷம் பெற்றிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக நம்முடைய வாழ்க்கை இருக்கிறது.

இதற்கு முன்பிருந்த பல தலைமுறை தேவ பிள்ளைகள் புரிந்துகொண்டதைப் போல தேவன் தொலைந்துபோன ஆண்களையும் பெண்களையும் தம்மிடம் மீட்டு அவர்களைத் தம்மோடு உறவுகொள்ளும்படியாகவும், தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் படியாகவும் சீரமைக்கும் இலக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே மீட்கப்பட்ட அவருடைய திருச்சபையாகிய நாம் இந்த ஊழியத்தின் தாசன்களாக இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையின் மூலமாக நாம் தேவனோடு தினமும் உறவில் இருக்கும்போதும், நாம் பூமியில் இருக்கும்போது நம்முடைய தனிப்பட்ட மற்றும் விசேஷமான அழைப்புகளில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்போதும் நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். அவரில் சீரமைப்பைப் பெறும்படியாக மற்றவர்களைக் கவர்வதற்கு நாம் அவரால் பயன்படுத்தப்படுகிறோம். இதைத் தான் நாம் SCPயில் எல்லையெங்கிலும் சுவிசேஷத்தை அறிவித்தல் என்று கூறுகிறோம் – எல்லா வீடுகளிலும், வேலை செய்யும் இடங்களிலும், சமுதாயங்களிலும், நகரங்களிலும், தேசங்களிலும் சுவிசேஷத்தைத் தேவனுடைய பிள்ளைகளின் மூலமாக அறிவித்தல்.

எபேசியர் 3:8–11 வசனங்களில் தேவன் தம்முடைய மக்களுக்காகக் கொண்டிருந்த இந்த நோக்கத்தைப் பவுல் அறிவிக்கிறார்: "இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." இயேசுவில் தேவன் செய்த அற்புதமான செயல்களுக்கு நித்தியமே பார்வையாளராக இருக்கிறது. ஆவிக்குரிய ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இதைக் காண்பிப்பதற்கு அவர் தற்போது திருச்சபையையே கருவியாகப் பயன்படுத்துகிறார். இந்த உலகப்பிரகாரமான செயல்கள் நேரத்தின் மீது கவனம் செலுத்துவதில்லை, அவை நித்தியத்தின் மீது கவனம் செலுத்துபவையாக இருக்கின்றன. அவை தேவனுடைய நித்திய நோக்கத்தில் வேரூன்றி இருக்கின்றன.

எங்களுடைய ஊழியமான SCPயில் நாங்கள் திருச்சபையைக் குறித்துப் பேசும்போது திருச்சபையை எப்படி செயல்படுத்த வேண்டும் என்ற மாதிரியை நாங்கள் மறுபடியும் கண்டுபிடித்து செயல்படுத்துவதில்லை அதற்குமாறாக வேத வசனங்களின் கதைக்களத்தைத் தடுமாறிச் சென்றுவிட்ட தலைமுறைக்கு காண்பிப்பதையே தேடுகிறோம். இது நம்மைக் குறித்தது கிடையாது. இது தேவனையும் அவருடைய மீட்பின் செயல்களையும் குறித்தது. எனவே திருச்சபை என்பது தேவனுடைய மீட்பின் செயல்களை வெளிப்படுத்தவும், அவருடைய சிருஷ்டிப்பில் மீதமிருப்பவர்களுக்குச் சுவிசேஷத்தில் இரட்சிப்பை அளிப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் தற்போதையக் கருவியாக இருக்கிறது.

நாம் தலைமைத்துவத்தைக் குறித்துப் பேசும்போது வழிதவறிச் சென்றுவிட்ட தலைமுறைக்குத் தலைமைத்துவம் என்பது ஒரே நோக்கத்திற்குத்தான் இருக்கிறது என்பதை நினைவுப்படுத்துகிறோம்: தேவனுடைய வடிவமைப்பிற்குள் முழு சரீரமாகத் திருச்சபையையும் அதனுடைய தனிப்பட்ட உறுப்பினர்களையும் முழுமையாகவும், உண்மையோடும் கொண்டுவருவது.

நம்முடைய உலகத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தை யுக்தியோடு செயல்படுத்திப்பார்க்கவேண்டும் என்று நாம் பேசும்போது தாங்கள் அழைக்கப்பட்ட இடங்களில் ஊழியம் செய்யும்படியாக விசுவாசத்தோடு தேவனைப் பின்தொடந்த பிற தலைமுறைகளிடத்திலிருந்து கற்றுக்கொண்டதை இவர்களுக்கும் எடுத்துரைக்கிறோம் என்று அர்த்தம்.

மறுபடியுமாக, இந்தப் போதனை எனக்குப் புதியதல்ல. இந்த உக்கிராணத்துவத்தில் நான் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் பங்கெடுத்துவிட்டேன், ஏற்கெனவே எங்களுக்கு முன்பாகச் சென்ற தேவபிள்ளைகள் நாங்கள் அவர்களிடத்திலிருந்து கற்றுக்கொண்ட மூன்று தலைமுறைகள் வரை எனக்குத் தெரியும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக கென்னித் ஸ்டார்சான் போன்றவர்கள் எல்லையெங்கிலும் சுவிசேஷத்தை அறிவித்தலைக் குறித்துப் பேசியிருக்கிறார்கள். ஒரு திருச்சபையானது ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் தன்னுடைய முயற்சிகளைச் செய்யும்போது இந்த உலகத்திற்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பணியை நாம் முடித்துவிட்டோமா? என்ற கேள்வியைக் கேட்பார். அவர் பல காரியங்களைக் கற்றுக்கொண்டார், பல காரியங்களைச் செய்தும்முடித்தார். ஆனால் அவர் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க விரும்பினார். அவருடைய அடுத்தத் தலைமுறையானது இந்த அனுபவத்தை நிராகரிக்கவில்லை. அவர்கள் அதிலிருந்து கற்றுக்கொண்டு, தங்களுடைய பங்களிப்பிலும் இன்னும் அதிகமாகக் கற்றுக்கொண்டார்கள்.

என்னுடைய வாழ்க்கையில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் டோனால்டு மெக்காவ்ரான் போன்றவர்களால் சிந்திக்கவும் கற்றுக்கொள்ளவும் தூண்டப்பட்டிருக்கிறேன். இவர்கள் மக்களுடைய இயக்கங்களைக் குறித்து விசுவாசிகள் சிந்திக்க வேண்டும் என்று அழைக்கப்பட்டவர்கள். இந்த உலகத்தில் எத்தனை மக்கள் இருக்கிறார்கள் என்றும் அதில் எத்தனைப் பேர் சந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இயேசுவைப் பின்பற்றபவர்கள் சிந்திக்கும்படியாக ரால்ப் வின்டர் அழைக்கப்பட்டார். ஒவ்வொரு சிறிய இடத்திலும் திருச்சபையை ஸ்தாபிப்பதின் மூலமாக சுவிசேஷத்தை எல்லையெங்கிலும் மக்களுக்கு அறிவிப்பதைச் செய்துவிடமுடியுமா என்று தேவனுடைய மக்களுக்கு ஜிம் மான்ட்கோமெரி சவால் விட்டார். இன்னும் பலர் தங்களுடைய தனித்துவமான கேள்விகளை இதோடு சேர்த்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலிருந்து எல்லாவற்றையும் கற்றிருக்கிறேன்.

கடந்த நாற்பது வருடங்களில் இயேசு கிறிஸ்துவின் திருச்சபையானது உலகம் முழுவதிலும் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு முன்பாக, இந்த உக்கிராணத்துவத்தில் நான் என்னுடைய சொந்த பயணத்தைத் துவங்கும்போது சுவிசேஷத்தின் பாத்திரமானது பாதியாகக் குறைந்துவிட்டது என்று பலர் நினைத்தார்கள். ஆனால் இன்று நான் பல தலைமுறைகள் கண்ட கனவுகள், பதிலளித்தல், தியாகம் செய்த காரியங்களை: உலக அளவில் அதிகமான ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவிற்குள் வருவதைப் – பார்க்கும் தலைமுறையின் ஒரு பங்காக அது இருப்பதை நினைத்து மனமகிழ்ச்சியடைகிறேன். நாம் அந்தத் தரிசனத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்!

என்னுடைய வாழ்நாளில் பெரிய கூட்டங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் இயக்கங்கள் இன்றைய ஆசீர்வாதத்தை ஏற்படுத்தும்படியாகத் தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவிசேஷத்தைக் குறித்து 1966ஆம் ஆண்டு பெர்லின் நகரில் நடந்த மாநாட்டினால் பல சபை ஸ்தாபிக்கும் இயக்கங்கள் துவங்கப்பட்டன. எல்லா தேசங்களிலும் சபை ஸ்தாபிக்கவேண்டும் என்பதற்கான யுக்தியைத் தன்னைத் தேடும்படியாக இந்த மாநாடு தூண்டியது என்று டான் ஊழியங்களின் ஜிம் மான்ட்கோமெரி கூறியிருக்கிறார். 1970கள் மற்றும் 80களில் நிகழ்ந்த லாவுசன்னே கூட்டங்களின் மூலமாக இந்த உலகம் முழுவதிலிருந்தும் பல ஆண்களும் பெண்களும் அழைக்கப்பட்டு இந்த உலகத்தைக் குறித்த ஒரு புதிய உணர்ச்சியைக் கிறிஸ்துவின் சரீரத்தில் ஏற்படுத்துவதைக் குறித்த சிந்தனையை எழுப்பி அதை நிறைவேற்றுவதற்கு என்ன செய்யலாம் என்று இவர்கள் அனைவரையும் சிந்திக்கச் செய்தது. ஏடி 2000, ஆலயன்ஸ் பார் சாட்சுரேசன் சர்ச் பிளான்டிங், சந்திக்கப்படாத மக்களைக் குறித்த இயக்கங்கள் மற்றும் இன்னும் பல இயக்கங்கள் உலகின் முடிவு பரியந்தம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற தேவனுடைய வடிவமைப்பை இன்னும் விரிவுப்படுத்துவதற்கு உதவியாக இருந்தன.

இந்தப் பூமியில் திருச்சபையானது பெற்றிருக்கும் இரண்டாயிரம் வருட வாழ்வில் ஒரு சிறிய பகுதியைச் சேர்ந்த மக்களையும், இயக்கங்களையுமே இந்தச் சுருக்கமான ஐம்பது வருட விமர்சனம் எடுத்துரைக்கிறது. ஆதித் திருச்சபை சிதறடிக்கப்பட்டபோது (பார்க்க, அப்போஸ்தலர் 8:1), அப்போஸ்தலர்கள் இந்த இயக்கத்தைத் துவங்கினார்கள். இதன் மூலமாகத் தோமா இந்தியா வரையிலும், பவுல் அப்போஸ்தலன் ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். பாலிகார்ப், உல்பிலாஸ், பேட்ரிக் மற்றும் கொலம்பியா போன்றவர்களால் இந்த இயக்கத்தின் விரிவாக்கம் பல நூறு வருடங்கள் நடந்துகொண்டே இருந்தது. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் அப்போஸ்தலர்களை அனுப்பும் பண்பைப் பெற்றிருந்தது.

போனிபேஸ், ரேமன்ட் லல், மாத்தியூ ரிக்கி மற்றும் பலர் இந்த உலகம் முழுவதிலும் சுவிசேஷம் கொண்டு செல்லப்படுவதற்காகத் தங்களுடைய வாழ்க்கையைக் கொடுத்தார்கள். புராட்டஸ்டன்டு சீர்திருத்தத்திற்குப் பிறகு ஆரம்ப காலத்தில் மோரோவியர்கள் தற்காலத்திய மிஷனரி இயக்கங்களை நிறுவினார்கள். இது முந்நூறு வருடங்களுக்குத் தொடர்ந்து நிகழ்ந்தது.

இன்றைய திருச்சபைத் தனியாக இருக்கவில்லை. உறவுமுறையிலும், பிரதிநிதித்துவத்திலும் மக்களைச் சீரமைக்க நினைக்கும் தேவனுடைய இலக்கை நிறைவேற்றுவதற்காக அவர் பயன்படுத்தும் அடுத்து வருகிற தலைமுறையாக மட்டுமே நாம் இருக்கிறோம். நாம் பலருடைய தோள்களில் நிற்கிறோம். அவர்களிடத்திலிருந்து கற்றுக்கொண்டு, சுவிசேஷத்தைப் பரப்பும் செயலையும், நீதியின் உலகம் வருவதையும் பார்க்கும் நம்பிக்கையில் நம்முடைய கற்றலை இன்னும் விரிவுப்படுத்துகிறோம்.

நாம் SCPயின் போதனைகளில் தொடர்ந்து வலியுறுத்துவது இதுதான்: தேவன் இந்த உலகத்தில் என்ன செய்ய நினைக்கிறாரோ அதைக் கிறிஸ்துவின் மக்களின் மூலமாக நிறைவேற்றப்போகிறார். நாம் தேவனுக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த உலகத்திற்கும், உன்னதங்களிலே இருக்கும் சமஸ்தானங்களுக்கும், ஆளுகை செய்பவர்களுக்கும் அறிவிப்பதற்குக் கிறிஸ்துவின் மக்கள் தேவனுடைய மேன்மையான வடிவமைப்புகளாக இருக்கிறார்கள். தேவன் முறியடிக்கப்படுவதில்லை. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக அவருடைய ஆதி வடிவமைப்பானது ஆண்களிலும் பெண்களிலும் நிச்சயமாகச் சீரமைக்கப்படும்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய ராஜ்யத்தில் ஆராதனை செய்யும் ஒரு செயலாக முதலீடு செய்யப்படுவதற்கே அர்த்தம் பெற்றிருக்கிறது. ஆனால் நாம் அதைச் செயல்பூர்வமாக முதலீடு செய்வதற்கு நாம் நம்முடைய தினசரி வாழ்வில் தேவனுடைய சர்வவல்லமையின் கீழ் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்! நாம் நம்முடைய முதலீடான நம்முடைய வாழ்க்கையைக் கொடுக்கும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மக்களில் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி நம்மில் ஒரு மறுரூபத்தை ஏற்படுத்துகிறார். நம்மைத் தேவனுடைய ஆதி மற்றும் ஒரே நோக்கத்திற்கு சீரமைப்பதின் மூலமாகச் செய்கிறார். அவருடைய நோக்கம் இதுவாக இருக்கிறது: தம்மைப் போல இருக்கும், தமக்காக வாழும், இந்த உலகத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களைத் தமக்காகச் சிருஷ்டிப்பது. கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பங்காக நாம் இருக்கும்படி தேவன் நம்மைச் சிருஷ்டித்திருப்பதால் தேவன் தம்முடைய சரீரமாக ஏற்றுக்கொண்டிருக்கும் **திருச்சபையில்** நம்மைப்போல இருப்பவர்களோடு கொண்டிருக்கும் அற்புதமான உறவினால் இந்த மறுரூபமாக்கப்படுதல் ஏற்படுகிறது.

## தேவனுடைய சித்தம் நிறைவேறும்போது

"தேவன் என்ன செய்திருக்கிறார் பார்!" என்று ஆச்சரியத்தோடு பார்க்கும் நிகழ்வுகளை ஒவ்வொரு தலைமுறையும் கண்டிருக்கிறது. தம்முடைய மக்களின் தேவைகளைச் சந்திப்பதிலும், அவர்களின் மூலமாக மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை விளக்குவதிலும் சிறிய மற்றும் பெரிய அற்புதங்களைச் செய்வதில் நம்முடைய தேவன் சிறப்பான தேவனாக இருக்கிறார். ஆனால் தம்முடைய சுவிசேஷத்தை மக்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்று நமக்குக் கொடுத்த கட்டளையானது வரலாற்றில் காணப்படும் மற்ற தலைமுறைகளைக் காட்டிலும் நம்முடைய தலைமுறையில் தான் தேவனால் அதிகமாகச் செயல்படுத்தப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தொடர்ந்து உடனடியாக புராட்டஸ்டன்டு ஊழியங்களின் தாக்கம் ஏற்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுவிலிருந்து 1900 வரை ஐரோப்பியர்கள் இந்த இயக்கத்தை வழிநடத்தினார்கள். இந்த ஊழியங்களின் தாக்கம் இரண்டாம் உலகப்போர் வரைத் தொடர்ந்து நிகழ்ந்தது. இதுவரை திருச்சபைப் பார்த்திராத அளவிற்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஊழியங்களை அனுப்பும் மிகப்பெரிய முயற்சியாக இது கருதப்படுகிறது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் முடிவில் பரிசுத்த ஆவியானவர் புதியதாக ஒன்றை உருவாக்கியிருந்தார். உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக இன்னும் பல தேசங்களிலிருந்து, அவர்களில் பலர் மேற்கத்திய நாடுகள் அல்லாத நாடுகளைச் சேர்ந்தவர்கள், பல மிஷனரிகள் அனுப்பப்படத் துவங்கினார்கள். இயேசுவானவரின் திருச்சபையானது அதனுடைய யூத மற்றும்

ஐரோப்பிய வேர்களிலிருந்து இன்னும் அதிகமாகக் கிளைப்பிரிந்து உலகம் முழுவதிலும் இருக்கும் பிற தேசங்களுக்கும் செல்லத் துவங்கியது. 1900வருடங்கள் பழமையான திருச்சபைக் கண்டிராத ஒரு காரியத்தை உலகம் முழுவதிலும் சேர்ந்த மில்லியன் கணக்கான கிறிஸ்தவர்கள் ஏற்படுத்தினார்கள்: இந்த உலகம் முழுவதிலும் வல்லமையாகவும் நிரந்தரமாகவும் இயேசு கிறிஸ்துவின் சபையானது ஒவ்வொரு இனத்திலும், மொழியிலும், தேசத்திலும் ஸ்தாபிக்கப்பட்டது.

இதற்கு மிகவும் முக்கியமான எடுத்துக்காட்டாக இந்தியத் திருச்சபை இருக்கிறது. 1987ஆம் ஆண்டு 57 சபைத் தலைவர்கள் சந்தித்து இரண்டு கேள்விகளைக் கேட்டார்கள்: இந்தியாவிற்கு என்ன தேவை என்று தேவன் நினைக்கிறார்? இந்தத் தேசத்தில் தமக்குச் சித்தமானதைத் தேவன் செய்தால் அது எப்படி இருக்கும்? இந்தத் தேசத்தில் தொடர்ந்து பெருகிக்கொண்டிருக்கும் மக்கள்தொகைக்குச் சுவிசேஷத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பலர் கடினமாக உழைத்திருக்கிறார்கள். 850 மில்லியன் மக்களைக் கொண்ட இந்தத் தேசத்தில் பிற தலைமுறையினரின் மேற்கொண்ட கடின உழைப்பை இந்த 57 தலைவர்களும் மறந்துவிடவில்லை. தேவன் தம்மோடு தொடர்ந்து ஒப்புரவாகக்கூடிய வாய்ப்பை இந்தியாவில் இருக்கும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் பெற வேண்டும் என்பதே நோக்கம் என்று இந்தப் பிரதிநிதிகள் முடிவு செய்தார்கள். அவர்கள் இந்தச் செயலில் தங்களைச் செயல்படுத்தியபோது தேவன் தாம் விரும்பியதைச் செய்யும்போது எப்படியிருக்கும் என்பதை அவர்கள் கண்டார்கள்.

அவர்கள் பல சவால்களைச் சந்தித்தாலும், இரட்சிப்பைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் செய்தியின் ஈர்ப்பும், எல்லாத் தேசங்களிலும் சீஷர்களை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையும் அவர்களை இது ஒரு தனித்துவமான, தெய்வீக வாய்ப்பு என்று விசுவாசிக்க வைத்தது. எனவே அவர்கள் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டு அதற்குப் பதிலளிக்கும் வாய்ப்பை இங்குள்ள ஆண்களும், பெண்களும், சிறு பிள்ளைகளும் பெற வேண்டும் என்று முழு மனதோடு பணிசெய்யத் துவங்கினார்கள். ஒரு மில்லியன் புதிய திருச்சபைகளை ஸ்தாபிப்பதின் மூலமாக இதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். அதாவது ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு இடத்திலும் என்பதே அவர்களுடைய புரிதலாக இருந்தது. முழுமையாக இந்தியாவைச் சந்திப்பதற்கு ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் எளிதில் பார்த்து பழகும்படியாக இயேசுவைப் பின்பற்றுபவர்களின் குழு அவர்களுக்கு அருகில் இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

அவர்களுடைய கீழ்ப்படிதலின் விசுவாசத்திற்குக் கிடைத்த பதில் அற்புதமானதாக இருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் இயேசுவை அறிக்கையிடும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைப் பலமடங்காக உயர்ந்திருக்கிறது. இதன் விளைவாகக் கிறிஸ்தவ வரலாற்றிலேயே பெரிய திருச்சபை உருவாகியிருக்கிறது. 25 மில்லியன் கிறிஸ்தவர்களிலிருந்து இந்த எண்ணிக்கை 150 மில்லியனாகியிருக்கிறது. 1987ஆம் ஆண்டியில் 100,000 திருச்சபைகள் என்றிருந்த எண்ணிக்கை இப்போது 600,000[1] மாகியிருக்கிறது.

தேசங்களில் அறிவிக்கப்பட்ட சுவிசேஷம் இப்படிப்பட்ட வரவேற்பைப் பெறுவது என்பது கிறிஸ்துவின் சரீரத்தில் புதிதாக நிகழும் காரியம் கிடையாது. இதே போன்ற தரிசனமானது பிலிப்பீன்ஸ், இந்தியா, குவாத்தமாலா மற்றும் வேறு சில நாடுகளின் தேசிய திருச்சபைகளினால் கடந்த நாற்பது ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, 1974ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸ் நாட்டைச் சந்திப்பது தங்களுடைய வாழ்நாளில் நிகழவேண்டும் என்று தேவன் கேட்கிறார் என்பதை அந்த நாட்டின் திருச்சபைப் புரிந்துகொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் அந்த நாட்டில் 4000 திருச்சபைகளுக்கும் குறைவாகவே இருந்தது. தங்களுடைய நாட்டைக் குறித்து அறிந்திருந்த அந்நாட்டின் விசுவாசிகள், தங்களுடைய நாட்டின் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், சிறுபிள்ளைக்கும் சுவிசேஷம் முழுமையாகச் சென்றடையவேண்டும் என்றால் 2000ஆம் வருடத்திற்குள் திருச்சபையானது ஐம்பதாயிரம் இடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அறிந்துகொண்டார்கள். தங்களுக்கு முன்பாக பல ஆண்டுகள் கடின உழைப்பிருக்கிறது என்பதைக் கண்டு அவர்கள் விசுவாசத்தினால் இந்தத் தரிசனத்தை ஏற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்தினார்கள். அவர்கள் 2000ஆண்டிற்குள் ஐம்பதாயிரம் திருச்சபைகளை ஸ்தாபித்திருந்தார்கள், தேவனுக்கே ஸ்தோத்திரம்[2]!

## மேற்கத்திய திருச்சபை எதைக் கற்றுக்கொள்ளலாம்?

நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போல மேற்கத்திய திருச்சபை, முழு தேசங்களிலும் இயேசு கிறிஸ்துவின்

சுவிசேஷத்தைச் சந்திக்கவேண்டும் என்ற தரிசனத்திலிருந்து வழிவிலகிப்போயிருக்கிறது. இந்தியா மற்றும் பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் இருக்கும் பிரதான திருச்சபைகள் மேற்கத்திய நாடுகளில் இருக்கும் திருச்சபைக்கு என்ன போதிக்க முடியும்?

*தேவன் ஒரு தேசத்தில் செயல்படும்போது, அவர் உள்நாட்டு மக்களின் மூலமாகச் செயல்படுகிறார்.* வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், உள்ளூர் பின்னணிகளைக் கொண்டவர்களைத் தேவன் பயன்படுத்துகிறார். எல்லையெங்கிலும் சபைகளை ஸ்தாபித்தல் (SCP) என்ற எங்களுடைய ஊழியத்தில் பல்வேறு கலாச்சாரங்களில் நாங்கள் இந்தக் கருத்தைப் பயன்படுத்தி மிஷனரிகளை அனுப்புகிறோம். உள்நாட்டு மக்களின் மூலமாகச் சுவிசேஷத்தை பரப்புவதே தேவன் செயல்படும் முக்கியமான வழியாக இருக்கிறது. இயேசுவின் சிலுவையினால் மறுரூபமாக்கப்பட்ட சாதாரண மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும், இடத்திலும் தேவைப்படுகிறார்கள். ஒவ்வொரு தொழிலிலும், ஒவ்வொரு தெருவிலும் இயேசுவின் அன்பைப் பகிர்ந்துகொள்ளும்படியாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த வழியின் மூலமாக தேவன் தம்முடைய குமாரனின் மூலமாகக் கொடுக்கும் ஒப்புரவாகுதலை அந்த நாட்டின் ஒவ்வொரு மனித உறவின் பின்னணியில் பார்க்கவும், தொடவும், கேட்கவும் முடியும். கல்லறை மெய்யாகவே காலியாக இருக்கிறது என்று அறிவிக்கும்படியாக மனிதரூபமெடுப்பவர்களாக தேவனுடைய மக்கள் மாறுகிறார்கள்.

*தேவன் ஒரு தேசத்தில் செயல்படும்போது, அவர் பெரிய அளவிலான திருச்சபை ஐக்கியத்தின் மூலமாகச் செயல்படுகிறார்.* எந்த ஒரு தேசத்திலும் பல வகைப்பட்ட சபைப் பிரிவுகள் பிரிவினையை ஏற்படுத்தலாம். ஆனால் தன்னுடைய சொந்த மக்களை இயேசுவின் சுவிசேஷத்தின் அடிப்படையில் சீஷராக்கும் எந்த ஒரு தேசிய திருச்சபையும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட பிற சபைப்பிரிவுகளோடு நித்திய சத்தியத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டிருக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டுதான் தன்னுடைய பணியைச் செய்கிறது. இது ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் மெய்யானதாகவே இருக்கிறது. ஒரு ஞாயிற்றுக்கிழமை 52 மில்லியன் அமெரிக்கர்கள் மட்டுமே திருச்சபைக்கு வருகிறார்கள் என்றால் (ஆய்வறிக்கையில் இருக்கிறது)[3], அதோடு குறைவான சதவீதம் பேர்களே வேதாகமத்தின் அடிப்படியில் தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை வாழுகிறார்கள் என்றால்[4], இன்னும் 300 மில்லியன் அமெரிக்கர்களுக்குச் சுவிசேஷத்தைப் புதிதாக அல்லது மறுபடியும் அறிவிக்க வேண்டும் என்று அர்த்தம். அமெரிக்காவில் இருக்கும் சபைப் பிரிவினர்களுக்கிடையே காணப்படும் பிரச்சினைகள் அவை எவ்வளவு ஆழமான இறையியல்ரீதியான நம்பிக்கைகளைச் சார்ந்ததாக இருந்தாலும், மக்களுடைய சுவிசேஷத் தேவைகளுக்கு முன்பாக ஒன்றும் இல்லாதவைகளாக இருக்கின்றன.

*தேவன் ஒரு தேசத்தில் செயல்படும்போது, ஏற்கெனவே இருக்கும் திருச்சபைகளின் அளவைப் பெரிதாக்குவதோடு புதிய திருச்சபைகளை உருவாக்குவதின் மூலமாகச் செயல்படுகிறார்.* நாம் இந்தப் பாடத்தை அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். அதில் சபை ஸ்தாபித்தல் என்பது கற்றுக்கொடுக்கப்படவில்லை, விளக்கப்படவில்லை – வெறுமனே அனுமானம் செய்யப்படுகிறது. அப்போஸ்தலர்களாலும், திருச்சபையின் சாதாரண உருப்பினர்களாலும் சுவிசேஷம் ரோம உலகத்திற்குள் கொண்டு வரப்பட்டபோது மக்கள் அதற்குப் பதிலளித்தார்கள். அந்த மக்கள் பின்பு திருச்சபைகளாகக் கருதப்பட்டார்கள். அவர்களைத் திருச்சபை அல்லது சபை என்று அழைக்கப்பட்ட சமுகங்களாக ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவிலும், பிலிப்பைன்சிலும் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளூர் திருச்சபைகள் பெருகி கனிதருவதிலிருந்து இந்தப் பாடம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. மக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அது அவர்களுடைய கிராமத்திற்கு வரவேண்டும். இது பல வழிகளில் நிகழலாம். ஆனால் சந்திக்கப்படவேண்டிய மக்கள் இருக்கும் இடத்தின் பக்கத்தில் – பக்கத்து கிராமமோ அல்லது நகரமோ அல்லது ஒரே கிராமமோ அல்லது நகரமோ – உள்ளூர் சபையாகத் தங்களுடைய விசுவாசத்தை வாழ்ந்து காட்டுபவர்கள் இருந்தால், சுவிசேஷத்தை வெறுமனே கேள்விப்பட மட்டும் வைக்காமல் அதைப் பார்க்கவும் உணரவும் வைப்பவர்கள் இருந்தால் அதுவே மிகச் சிறந்த செயல்பூர்வமான வழியாக இருக்கும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களின் மத்தியில் சுவிசேஷத்தை மனிதரூபமாக்கிக் காண்பிக்கும்போது ஒரு தேசத்தில் இருக்கும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் சந்திக்கப்பட முடியும். ஆம், சில திருச்சபைகள் மிகவும் பெரியதாக வளருவார்கள். ஆனால் அவர்களுடைய வளர்ச்சி தங்களுடைய சொந்த ஆதாயத்திற்காக இருக்கக் கூடாது. அவர்கள் தங்களுடைய ஆதாரங்களோடு பெரிய அளவில் இருப்பது அவர்களால்

சந்திக்கக்கூடிய இடங்களாக இருக்கும் கிராமங்களிலும், பக்கத்து இடங்களிலும் சபைகளை ஸ்தாபிப்பதற்குத் தேவனால் பயன்படுத்தப்படும் ஆயுதமாக இருப்பதற்காகவே என்றிருக்க வேண்டும். வெறுமனே பெரியதாகும் திருச்சபைகளைக் காட்டிலும் இப்படிப் பெருகச் செய்யும் வாழ்க்கைமுறையைப் பெற்றிருக்கும் திருச்சபைகள் மூன்று மடங்கு வளர்ச்சியடைகின்றன என்று ஆய்வுகள் சொல்கின்றன!

*தேவன் ஒரு தேசத்தில் செயல்படும்போது, மக்களைத் தாங்கள் இருக்கும் இடங்களுக்காக ஜெபிக்கும்படி உணர்ச்சியூட்டுவதின் மூலமாகச் செயல்படுகிறார்.* நாம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்காக ஜெபிக்கத் துவங்கும்போது நாம் வெறுமனே அந்த இடத்திற்காக மட்டும் ஜெபிப்பதில்லை, நாம் அங்குள்ள தனிநபர்களுக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் குறிப்பிட்ட மக்களுக்கு ஜெபிப்போம் என்று நாம் நம்மை அர்ப்பணிக்கும்போது தேவன் அங்கு செய்யும் காரியங்களைக் குறித்து நம்முடைய இருதயத்தில் மனதுருக்கம் பெருகிறோம். சுவிசேஷத்தைக் குறித்து அந்த இடத்தில் இருக்கும் மக்களுடைய தேவைகளுக்கான பதிலில் ஒரு பகுதியாக நாம் இருக்க வேண்டும் என்று விரும்புவோம். ஜெபம் ஒரு வல்லமையான ஆயுதம். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கும் அதனுடைய மக்களுக்கும் ஏறெடுக்கப்படும் ஜெபத்தை ஒவ்வொரு இடத்திலும் ஏற்கெனவே இருக்கும் திருச்சபைகளின் மூலமாக அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், சுற்றுவட்டாரங்களிலும் இன்னும் நுழையும்படியாகத் தேவன் பயன்படுத்துகிறார். இதன் காரணமாக மக்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அதிகமாக உள்வாங்கிக்கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஜெபம் திருச்சபையை மேன்மையான ஒற்றுமைக்கு வழிநடத்திச் செல்கிறது. இயேசுவின் மூ லமாகத் தேவனிடத்தில் ஒப்புரவாகுதலைப் பெறவேண்டிய தேவையில் இருப்பவர்கள் ஒவ்வொரு தேசத்திலும் அதிகமாக இருப்பதை நாம் கருத்தில் கொள்ளும்போது நம்முடைய வேற்றுமைகள் ஒன்றுமில்லாமல் போய்விடும் என்று இது நமக்குத் தொடர்ந்து நினைவுப்படுத்துகிறது.

## வாருங்கள் நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதுவோம்

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இருக்கும் திருச்சபையைக் காட்டிலும் இந்த உலகத்தில் வேறு எந்தத் திருச்சபைக்கும் தன்னுடைய தேசத்தின் மொத்த மக்கள் தொகையையும் சந்திக்கும் வாய்ப்பு இருக்கவில்லை. வரலாற்றுப் பூர்வமான திருச்சபைப் பிரிவுகளுக்கும், தற்காலத்திய திருச்சபைப் பிரிவுகளுக்கும் இன்றைய தினத்தில் ஏற்பட்டிருக்கும் ஒப்புரவு தேவனுடைய கரங்களில் பெரிய ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இதற்குத் தேவையான ஐக்கியத்தைப் பெறுவதற்கு வேண்டியவைகள் மிகவும் எளிமையானவையாகவே இருக்கின்றன: நம்முடைய வாழ்நாளில் இந்த முழு தேசத்தையும் முழுமையாகச் சீஷராக்க முடியும் என்று விசுவாசிக்கும்படியாக அமெரிக்க கிறிஸ்தவர்கள் திருச்சபைகளின் இயக்கமாக வேண்டும். தேவனோடு ஒப்புரவாகக்கூடிய வாய்ப்பை அமெரிக்காவில் இருக்கும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் மறுபடியும் மறுபடியும் பெற முடியும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

நாம் இதைக் குறித்துச் சிந்திக்கும்படியாக வரலாறு சில முக்கியமான உண்மைநிலைகளை நமக்குக் கொடுத்திருக்கிறது.

முதலாவது, நாம் நினைப்பதைக் காட்டிலும் திருச்சபையானது பெரிய அளவில் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரமானது நாம் விசுவாசிப்பதை விசுவாசிக்கும் மக்களைக் காட்டிலும் வேறு மக்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாம் விரும்பும் இறையியல் கோட்பாடுகள் அல்ல வேத வசனங்களே தேவனிடத்திலிருந்து வந்திருக்கின்றன. தேவன் சொல்லும் காரியங்கள் எந்தத் தவறும் இல்லாமல் இருக்கின்றன. தேவனைக் குறித்து மனிதன் கூறும் காரியங்கள் ஏதாவது ஒரு தவறைப் பெற்றிருக்கின்றன.

இரண்டாவதாக, சபைப் பிரிவுகள் சேர்ந்து ஜெபிக்கும் மனதுடையவைகளாக இருக்க வேண்டும். முழு தேசத்தையும் சந்திக்க வேண்டும் என்று உருவாக்கப்படும் இயக்கத்திற்கு வெறுமனே நாம் நமக்காக மட்டும் ஜெபிக்கக் கூடாது, இந்தத் தேசத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும் ஜெபிக்க வேண்டும். அதற்காக நாம் நம்முடைய அருகாமையில் இருக்கும் திருச்சபைகள் மற்றும் சபைப் பிரிவின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க மாட்டோம் என்று அர்த்தம் இல்லை. ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் சிறுபிள்ளையும் சுவிசேஷத்தைக் கேட்டு, உணர்ந்து, தொட்டு, அதற்குப் பதிலளிக்கும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்ற தேவனுடைய இருதயத்தின் வாஞ்சையின்படி நாம் சேர்ந்து ஜெபிக்க வேண்டும்.

நாம் எல்லோரும் சேர்ந்து ஜெபிப்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு நகரம் அல்லது கிராமம் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த திருச்சபைகள் ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் அல்லது ஒவ்வொரு மாசமும் ஒருநாள் என்று அவர்களுடைய குறிப்பிட்ட இடத்திற்காக சேர்ந்து ஜெபிப்பது மிகவும் அடிப்படையான வழியாகும். அதோடு சில நாட்களில் மற்றும் சில இடங்களில் சபை உறுப்பினர்களும் தலைவர்களும் கூடி ஒரு கூட்டத்தை நடத்தலாம். அல்லது அவர்கள் வெறுமனே அவர்கள் கூடி அவர்களுடைய நகரங்களுக்காகவும், ஊர்களுக்காகவும், கிராமங்களுக்காகவும் ஜெபிக்கலாம். கடைசியாக, சபைப் பிரிவின் தலைவர்கள் நேரம் ஒதுக்கி மற்ற சபைப் பிரிவுகளின் தலைவர்களைச் சந்தித்து சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டிய தேசத்தின் இடங்களுக்காகவும் மக்களுக்காகவும் ஜெபிக்கலாம்.

மூன்றாவதாக, எல்லோரும் ஒன்றுசேர்ந்து இலக்குகளை ஏற்படுத்திச் செயல்படலாம். நாம் எல்லோரும் சேர்ந்து 300 மில்லியன் அமெரிக்கர்களும் தேவனோடு ஒப்புரவாகும் தொடர் வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்ற நம்முடைய நம்பிக்கையை மறுபடியுமாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கடைசியாக, நம்முடைய வாழ்நாளில் அமெரிக்கா முழுவதிலும் சுவிசேஷத்தை முழுமையாக சென்றடையச் செய்வதற்கு தேவன் பயன்படுத்தும் மக்களோடு நாம் செயல்படும்படியாக நம்முடைய முயற்சிகளை இரட்டிப்பாக்கலாம். சபைகளை ஸ்தாபிக்கும்படியாக இன்னும் அதிகமான திருச்சபைகளுக்கு நாம் போதிக்கலாம். புதிய திருச்சபைகளை ஸ்தாபிப்பதே தங்களுடைய முதல் நோக்கம் என்று அர்ப்பணிக்கும் இன்னும் அதிகமான தலைவர்களுக்கு நாம் பயிற்சியளிக்கலாம். செய்தியைத் தெரிவிக்கும்படியாக நம்முடைய சபை அறிவிப்புகள், பிரசங்கங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை இந்தச் செயலின்மீது கவனம் செலுத்தும்படியாகக் கவனம் செலுத்தலாம்.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய உலகத்தின் காலம் வந்துவிட்டது. இப்படிப்பட்ட வாய்ப்பின் கதவுகள் எப்போதும் திறந்திருக்காது. வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தச் செயலைச் செய்யும்படியாகத் தேவன் தம்முடைய மக்களிடையே அர்ப்பணிப்பையும், ஐக்கியத்தையும், ஆதாரங்களையும் கட்டியெழுப்புவார் என்று SCPயில் இருக்கும் நாங்கள் ஜெபிக்கிறோம். ஏனென்றால் முன்பைக் காட்டிலும் இப்போது நாம் நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதுவது உண்மையாகவே நிகழ்கிறது.

# 2

# திருச்சபையின் நோக்கம் என்ன?

திருச்சபையின் நோக்கம் என்ன? என்பதே இன்றைய தினத்தில் இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் மக்கள் கேட்கும் மிகவும் முக்கியமான கேள்வியாக இருக்கிறது. மேற்கத்திய திருச்சபையின் தலைவர்கள் பலர் தங்களுக்கு இந்த நோக்கம் என்னவென்று தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பயிற்சிப் பள்ளிகளிலும் இந்தத் தலைப்பைக் குறித்தப் பாடத்திட்டங்கள் காணப்படுகின்றன. உள்ளூர் திருச்சபைப் போதகர்கள் இதைக் குறித்துப் பிரசங்கங்களைப் பிரசங்கிக்கிறார்கள். இதைக் குறித்த ஆர்வம் கொண்டிருக்கும் திருச்சபையின் துணை நிறுவனங்கள் இதற்கான பதிலை நிச்சயமாகத் தருவோம் என்று பல நாட்கள் நடக்கும் கூட்டங்களுக்கான விளம்பரங்களையும், அதற்கான உதவி உபகரண ஆதாரங்களையும் கொடுக்கிறார்கள். பெரிய திருச்சபைகளின் தலைவர்கள் தொலைந்துபோய் பசியோடு இருக்கும் மக்கள் வந்து பதிலைக் கண்டுபிடிக்கும்படியாக நிகழ்ச்சிகளை வார இறுதிநாட்களில் ஏற்பாடு செய்கிறார்கள்.

ஆனால் இந்த உலகத்தில் திருச்சபைக் கொண்டிருக்கும் பணியை மேற்கத்திய திருச்சபை மெய்யாகவே புரிந்துவைத்திருக்கிறது என்றால் ஏன் மேற்கில் இருக்கும் மகிழ்ச்சியில்லாத மேற்கத்திய மக்கள் கிறிஸ்தவத்தை எதிர்க்கிறார்கள்? புள்ளி கணக்குகள் ஆர்வத்தைத் தூண்டும் கதையைச் சொல்கின்றன. இப்போது மாற்றம் ஏதும் ஏற்படவில்லையென்றால் மேற்கில் இருக்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட கிறிஸ்தவ உள்ளூர் திருச்சபை வாழ்வின் எதிர்காலம் ஒருவேளை சம்பந்தமேயில்லாததாக இருக்கலாம் அல்லது அப்படியென்றே இல்லாமல் போகலாம் என்றே புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த இடத்தில் என்னைத் தவறாக நினைத்துக்கொள்ளாதீர்கள். சுவிசேஷம் மரித்துவிடுமென்றோ அல்லது மேற்கத்திய நாடுகளில் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என்றோ நான் கூறவில்லை. அதற்குமாறாக, வெளியரங்கமாகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையிலும் நமக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நன்றாகத் தெரிந்த வடிவமைப்புகள் ஆழமான பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் என்றுதான் கூறுகிறேன்.

மேற்கிலிருந்தும் அதனுடைய பிரச்சினைகளிலிருந்தும் வெகு தொலைவில் இருக்கும் ஒரு மிஷனரியாகவோ அல்லது தேசிய திருச்சபையின் தலைவராகவோ நீங்கள் இருந்தால் நான் பேசுவது உங்களுக்குப் புரியாமல் இருக்கலாம். *இதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?* இதற்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது. ஏனென்றால் மேற்கத்திய ஆலோசனைகளும், திருச்சபைப் பழக்கவழக்கங்களும் பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன – இன்னும் செய்யப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. நாம் பெற்றிருக்கும் விதையைக் கொண்டு மட்டுமே நம்மால் விருத்தியடைய முடியும். இந்த உலகம் முழுவதிலும் இன்னும் ஆயிரக்கணக்கான திருச்சபைகளை நாம் ஸ்தாபிக்க வேண்டும் என்று விரும்பினால் நாம் மேற்கில் பெற்றிருக்கும் விதையானது மெய்யாகவே வேதாகமரீதியானதாகவும், இன்னும் ஆயிரம் மடங்குத் தன்னைத்தானே பெருக்கிக் கொள்ளும் வழியுடையதாகவும் இருக்க வேண்டும். நம்பத்தகும் பெருக்கத்திற்கு எதிராக வேலை செய்யும் மோசமான விதைகளை நாம் விளைவித்துவிட்டு தொடர்ந்து கனிகளை எதிர்பார்க்க முடியாது.

### என்னுடைய தேடல்

திருச்சபை என்பது ஒரு பொருள் அல்ல அது ஒரு உயிருள்ள ஒன்று, பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் மூலமாக அது எல்லா இடங்களிலும் தன்னிச்சையாகத் தன்னைப் பெருக்கிக் கொள்ளும் என்றும் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் மூலமாக என்னுடைய எண்ணங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.

நான் முப்பது வயதானபோது நானும் என்னுடைய மனைவி பேட்டியும் பத்து ஆண்டுகள் ஊழியத்தில் இருந்துவிட்டோம். முதலில் அமெரிக்காவில் உள்ளூர் திருச்சபையில் இளம் வாலிபர்களோடு பணி செய்தோம். அதன்பிறகு லத்தீன் அமெரிக்காவில் மிஷனரிகளாகவும், பின்னர் தென் கலிபோர்னியாவில் வளர்ந்துவரும் திருச்சபையிலும் பணியாற்றினோம். நான் என்னுடைய கனவை வாழ்ந்துகொண்டிருந்தேன் – வார்த்தையைப் பிரசங்கிப்பது, பல நூறுபேர் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பங்காவது. திருச்சபையைக் குறித்து எனக்கு எல்லாம் தெரியும் என்று நான் நினைத்திருந்தேன். எபேசியர் நிருபத்தைக் குறித்து ஒரு புத்தகத் தொகுப்பை

நான் வெளியிட்டிருக்கிறேன் அல்லவா? எனக்கா தெரியாது?

ஆனால் அந்த நேரத்தில் தேவன் என்னுடைய அழைப்பில்லாமல் என்னுடைய நிறைவைக் குலைத்தார். இந்த மக்கள் எல்லோரும் எங்கிருந்து வருகிறார்கள் என்பதைக் குறித்துக் கேள்விகளைக் கேட்கும்படியாக அவர் என்னைக் கட்டாயப்படுத்தினார். நான் கண்டுபிடித்தவை என்னை அசௌகரியப்படுத்தியது. நான் அவைகளை முதன் முதலில் காண்கிறேன். "டுவைட், நீ பேசுவதைக் கேட்பதற்காகவும், மற்றவர்கள் பாடுவதைக் கேட்பதற்காகவும், மற்றவர்கள் ஊழியம் செய்வதைப் பார்ப்பதற்காகவும் மக்கள் வந்து இருக்கும் சேமிப்பு கிடங்கைப் போல என்னுடைய திருச்சபையை மாற்றிவிட்டாயா?" என்று தேவன் என்னைக் கேட்பதைப் போல உணர்ந்தேன். "திருச்சபையின் நோக்கம் என்ன?" என்று தேவன் என்னைக் கேட்பதைப் போல உணர்ந்தேன்.

எனக்கு மெய்யாகவே அதற்கான பதில் தெரியவில்லை என்று நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது; என்னுடைய சகப் போதகர்களுக்கும் அது தெரியவில்லை என்று நான் நினைக்கிறேன். அதோடு நான் அந்த அனுபவத்தைப் பெறுவதற்குச் சில வருடங்களுக்கு முன்பு தான் என்னுடைய பட்டப்படிப்பை முடித்திருந்தேன். அதனால் என்னுடைய பேராசிரியர்களில் பெரும்பாலானவர்கள் இதைக் குறித்து அறிந்திருக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். நான் இந்தக் கேள்வியை நேரடியாகச் சந்திக்க வேண்டியிருந்தது: அமெரிக்க திருச்சபை என்பது என்னவாக இருக்கிறது, நாம் இங்கு எதற்காக இருக்கிறோம், நாம் திருச்சபையை எப்படி வடிவமைத்திருக்கிறோம் என்பதில் இந்தக் கேள்விகள் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? மிகவும் முக்கியமாக, நாம் நம்முடைய சமுதாயங்களிலும், வேலை இடங்களிலும் சிதறிக்கிடக்கும்போது இது நம்மைச் சுற்றியிருக்கும் மக்களின் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

பிரசங்கித்தலும், ஆராதனையும், சிறு குழுக்களும், ஏன் சுவிசேஷமும் முக்கியமானதாக இருந்தாலும் இவை எல்லாம் திருச்சைபயின் நோக்கமில்லை என்று நான் உறுதியாக நம்பினேன். நான் இதைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது திருச்சபை என்பது "எது" கிடையாது என்பதைக் குறித்து நான் ஒரு நல்ல விளக்கத்தைப் பெற்றிருந்தேன். ஆனால் திருச்சபையின் நோக்கம் என்பது என்ன என்பதைக் குறித்த ஆழமான பற்றுறுதியைப் பெறுவதற்கு எனக்கு இன்னும் சில வருடங்களானது. அதை அடையும் வழியில் என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நான் என்னுடைய நிலையினால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத தலைமைத்துவத்தைக் குறித்த முக்கியமான பாடங்களைத் தேவன் எனக்குக் கற்றுக்கொடுத்தார்.

இந்தப் பிரச்சினையைக் குறித்து நான் தேவனுடைய ஆவியானவரோடு கொண்ட இரண்டாவது சந்திப்புச் சில வருடங்களுக்குப் பிறகு நிகழ்ந்தது. 1979ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தின் துவக்கத்தில் நானும் என்னுடைய மனைவி பேட்டியும் ஒரு புதிய சபை ஸ்தாபிப்பதில் எங்களை ஈடுபடுத்தினோம். அது மிகவும் வேகமாக ஆயிரக்கணக்கான நபர்களை உள்ளடக்கியதாக வளர்ந்தது. நாங்கள் அந்தச் சபையின் பகுதியாகப் பத்து ஆண்டுகள் இருந்தோம். அதன்பிறகு அந்தச் சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட மற்றொரு சபையின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். ஒவ்வொரு வாரமும் நாங்கள் ஞானஸ்நானம் கொடுத்தோம். எங்களுடைய சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருந்தது. ஐந்து வருடங்களில் 2,200 பேர் சேர்ந்திருந்தார்கள். ஒருவர் பிரசங்கிப்பதைக் கேட்பதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் வருவது வெற்றியின் அடையாளம் என்றால் அப்போது ஆயிரக்கணக்கானவர்கள் வந்தால் அதற்கு அர்த்தம் என்ன? பெரிய அளவிலான காணிக்கைகள், சிறப்பான ஆராதனைகள் – ஒரு புதிய திருச்சபை விரும்பும் எல்லாவற்றையும் நாங்கள் பெற்றிருந்தோம். என்னுடைய வாழ்க்கையில் முதன்முறையாக திருச்சபையின் உண்மையான நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு நான் வந்துவிட்டதாக நினைத்தேன். எங்களுடைய சபை வளர்ந்துகொண்டிருந்தது, மக்கள் இரட்சிப்படைந்துகொண்டிருந்தார்கள், அமெரிக்கா முழுவதிலும் இருக்கும் திருச்சபைகள் எல்லாம் கண்டு பொறாமைப்படும் அளவிலான ஊழிய அமைப்பை நாங்கள் பெற்றிருந்தோம். அப்படியானால் நான் நன்றாகப் புரிந்துகொண்டிருந்தேன் என்று தானே அர்த்தம்.

நான் மறுபடியுமாகக் கேள்வி கேட்கும்படியாகத் தேவனுடைய ஆவியானவர் என்னைச் சீக்கிரத்தில் வழிநடத்தினார். என்னோடு ஊழியத்தில் இருந்தவர்கள் கொண்டிருந்த உள்நோக்கத்தையோ அல்லது எங்களுடைய திருச்சபையின் மூலமாக நாங்கள் செய்த நல்ல காரியங்களையோ நான் சந்தேகித்துக் கேள்வி கேட்கவில்லை. ஆனால் "இங்கு என்ன நடக்கிறது?" என்பதைக் கேட்க மட்டுமே நான் வழிநடத்தப்பட்டேன். நான் இரண்டு காரியங்களைக் கண்டுபிடித்தேன்: முதலாவது, எங்களுடைய திருச்சபையில் சேர்ந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் பிற சபைகளிலிருந்து வந்தவர்களாக இருந்தார்கள்.

இரண்டாவதாக, இயேசுவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த மக்கள் எங்களுடைய திருச்சபையில் காணப்படவில்லை.

நான் இப்படிக் கேள்விக்கேட்டுக்கொண்டிருக்கும் வேளையில் நாங்கள் இருந்த இடத்தில் இருந்த மற்ற திருச்சபைகளின் தலைவர்களும் அப்படியே கேட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் சேர்ந்து கண்டுபிடித்த காரியங்கள் எங்களுடைய சொந்தத் திருச்சபைகளைக் குறித்து நாங்கள் கண்டுபிடித்த தனிப்பட்ட காரியங்களோடு ஒத்துப்போயின. எங்களைச் சுற்றியிருக்கும் மக்கள்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எங்களுடைய இடத்தைச் சேர்ந்த விசுவாசிகளின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டே வந்தது என்பதை நாங்கள் கண்டுபிடித்தோம். ஒரு திருச்சபையிலிருந்து மற்றொரு திருச்சபைக்குச் செல்வதே வளர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை நாங்கள் எங்களுடைய திருச்சபைகளை இணைத்து கணக்கிடும்போது கண்டுபிடித்தோம். கடைசியாக, எங்களுடைய திருச்சபையில் உறுப்பினர்களாக இருக்கும் அனைவரின் பிள்ளைகளும் இயேசுவைப் பின்தொடருகிறவர்களானால் கிடைக்கும் எண்ணிக்கையானது எங்களுடைய திருச்சபைகள் அனைத்தையும் சேர்த்து அவைகளின் வளர்ச்சியைக் கணக்கிட்டு ஒப்பிடும்போது மிகவும் அதிகமாக இருந்தது. மறுபடியுமாக நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டோம்: திருச்சபையின் நோக்கம் என்ன?

தேவனுடைய சரீரத்தின் நோக்கத்தைக் குறித்து நான் இதுவரைப் புரிந்துகொள்ள முடியாத காரியங்களைக் குறித்த நிச்சயமான நம்பிக்கைகள் இருக்கின்றனவா என்று நான் தேவனுடைய வார்த்தையை மும்முரமாகத் தேடத் துவங்கினேன். நான் அப்படித் தேடும்போது, தேவனுடைய திருச்சபையின் நோக்கத்தைக் குறித்து நான் மட்டும் கவலை கொண்டிருக்கவில்லை என்பதைக் கண்டுபிடித்தேன். வரலாறு முழுவதிலும் ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்துத் தேவன் கொண்டிருந்த அழகான மற்றும் செயல்பூர்வமான வடிவமைப்பைக் கண்டுபிடித்து வாழ்ந்து காண்பித்திருக்கிறார்கள். எனக்கு முன்பாக மற்றவர்கள் அறிந்திருந்த சத்தியங்களை நான் கண்டுபிடித்தபோது அது நான் திருச்சபையைக் குறித்துக் கொண்டிருந்த பார்வையையும், அது இந்த உலகத்தைக் குறித்துத் தேவன் வைத்திருக்கும் திட்டத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் முக்கியமான பங்களிப்பையும் முற்றிலுமாக மாற்றியது. நான் தேடிக்கொண்டிருந்த பதில்கள் எனக்கு எட்டும் தூரத்தில் தான் இருந்தன என்பதே என்னுடைய கதையின் சோகமான பகுதியாக இருக்கிறது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் நாம் அறிந்துகொள்ள வேண்டிய காரியங்களைக் குறித்து மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

## நான் என்ன கண்டுபிடித்தேன்

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாகத் தேவன் மனிதர்களுடைய வரலாற்றில் அற்புதமாக இடைபட்டார். அவருடைய இடைபடுதல் மூன்று அம்சங்களைக் கொண்டிருந்தது: கிறிஸ்துவின் மரணம், அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் சபையின் சிருஷ்டிப்பு.

மேசியாவின் வருகையினால் விடுதலைபெறுவோம் என்று ஆவலோடு காத்திருந்த யூத உலகத்தினுள் இயேசு மனிதன சரீரமெடுத்துப் பிறந்தார். அவர் வந்ததைக் குறித்த மனமகிழ்ச்சி நெடுநாட்கள் இருக்கவில்லை. ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்கவில்லை என்று கூறலாம். ஆனால் அப்படிப்பட்ட தோல்வியே வெற்றிக்கான தேவனுடைய விதைநிலமாக இருந்தது. பெரும்பாலானவர்களால் அடையாளம் காணப்படாத இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலமாக யூதர்களின் ராஜாவானார்; அவர் இந்த உலகத்தின் இரட்சகரானார். அதன்பிறகு அப்போஸ்தலர்களின் எண்ணங்களில் வெற்றி மலரும்போது இயேசு அவர்களிடத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆனால் அவர் சென்றது மனுக்குலத்தின் வரலாற்றில் தேவனுடைய இடைபடுதலின் கடைசி அற்புதப் பகுதியாக இருந்தது, திரித்துவத்தை முடித்தல்: திருச்சபையைச் சிருஷ்டித்தல். பவுல் இதைக் குறித்து எபேசியர் 2:10–3:11 வசனங்களில் விளக்குகிறார். இந்த வசனங்கள் திருச்சபையைக் குறித்து வேதாகமத்தில் காணப்படும் வாக்கியங்களிலேயே மிகவும் விளக்கமான வாக்கியங்களாக இருக்கின்றன.

எபேசியர் 2:11–18 வசனங்களில் பவுல் நம்மைத் திருச்சபைக்கு அறிமுகப்படுத்துகிறார். தம்முடைய புறஜாதி வாசகர்களுக்கு அவர்கள் இதற்கு முன்பு ஒரு இரட்சகரோ அல்லது மேசியாவோ வருவார் என்ற வாக்குக் கொடுக்கப்படாமல் ஆவிக்குரிய தவிப்பில் வாழ்ந்ததை நினைவுப்படுத்துகிறார். அவர்கள் ‘‘மக்களோடு மக்களாக ஒரு காரியத்தில் ஒத்திருத்தலைக்’’ குறித்து அறிந்திருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய மக்களின் ஒரு பகுதியாக இருந்திருக்கவில்லை. இந்த வெற்றிடத்தில் தேவன்

இயேசுவை அனுப்பி அற்புதமாக இடைபட்டு வெறுமனே யூதர்களை மட்டும் காப்பாற்றவில்லை, அவர் இயேசுவின் நாமத்தை அழைக்கும் அனைவரையும் காப்பாற்றியிருக்கிறார். இயேசுவின் மூலமாகத் தேவன் இந்தப் பூமியின் மனிதர்கள் எதிர்பார்க்காத காரியத்தைச் செய்தார்: அவர் யூதர்களையும் புறஜாதியாரையும் ஒருவருக்கொருவரும், தேவனோடும் ஒப்புரவாகும்படியாகச் செய்தார். இதன் மூலமாகத் திருச்சபையைச் சிருஷ்டித்தார்: "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்... இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி" (எபேசியர் 2:13–15). திருச்சபையானது கிறிஸ்துவின் புது சிருஷ்டியாக இருக்கிறது. அது அவருடையது! இந்தப் பூமியில் மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஸ்தாபனமும் தேவனுக்குரியவைகளை வரையறுக்கவோ அல்லது அடக்கி ஆளவோ முயற்சி செய்யக்கூடாது.

வசனங்கள் 2:19–22இல் பவுல் அப்போஸ்தலன் தேவனுடைய புதிய சிருஷ்டிப்பின் தனித்துவமான பண்பைக் காண்பித்ததற்காக இந்த அற்புதமான சத்தியத்தின் மேல் கட்டியெழுப்புகிறார்:

> ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்.

மிகவும் சுருக்கமான இந்த நான்கு வசனங்களின் மூலமாகத் தேவனுடைய கைவண்ணத்தை விளக்குவதற்குப் பவுல் நான்கு உருவகங்களைப் பயன்படுத்துகிறார்: தேவனுடைய அற்புதமான இடைபடுதல் யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும் ஒன்றுபோல இருக்கும் புதிய *தேசத்தைக்* கொடுத்திருக்கிறது; அவர்கள் தேவனுடைய மக்களாக இருக்கிறார்கள். அவர் அவர்களுக்கு ஒரு புதிய *இரத்தபந்தத்தைக்* கொடுத்திருக்கிறார். அது இயேசுவின் இரத்தபந்தமாக இருக்கிறது. அவர்கள் இப்போது ஒரே புதிய குடும்பமாக இருக்கிறார்கள். அவர் அவர்களைப் புதிய *கட்டிடமாக்கியிருக்கிறார்*. சொல்லப்போனால் தேவன் வாழும் ஒரு *ஆலயமாக* மாற்றியிருக்கிறார். பழைய ஏற்பாட்டின் ஆராதனை மையமும், செயல்படுகளும் இப்போது தேவனுடைய புதிய சரணாலயத்திற்கு மாறியிருக்கின்றன: கிறிஸ்துவின் சரீரம், திருச்சபை!

தேவன் தம்முடைய மக்களில் குடியிருக்கும் பண்பு தனித்துவமானதாக இருக்கிறது. தேவன் தம்முடைய அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் ஊழியம் மற்றும் எழுத்துக்களின் மூலமாகத் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தியதின் அடிப்படையில் இந்தச் சரீரமானது கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய ஆலயம் எப்படியிருக்கும் என்பதை நிர்ணயிக்கும் கட்டுமான ஒழுங்குமுறையாக இயேசு இருக்கிறார். கிறிஸ்துவின் மக்கள் அனைவரும் தனிப்பட்டவர்களாகவும் (பார்க்க 1 கொரிந்தியர் 6:19) குழுவாகவும் (பார்க்க, எபேசியர் 2:20–21) தேவன் தங்கியிருக்கும் இடமாக இருக்கிறார்கள். கூட்டமாக இருக்கும் இந்தப் புதிய ஆலயத்திற்குள் ஒரு குறிப்பிட்ட நபர் எங்கிருக்கவேண்டும் என்று நினைக்கிறாரோ அந்த நபரை அந்த இடத்தில் தேவன் வைக்கிறார். ஒவ்வொரு நபருக்கும் இடையே கணக்கிடப்படக்கூடிய அளவில் தனித்துவத்தைத் தேவன் வைத்திருக்கிறார். ஆனால் தேவன் சரியானதை ஒவ்வொருவருக்கும் கொடுப்பதால் அவர்கள் அவர் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறாரோ அதுவாகுவதற்கு ஒவ்வொருவரும் சிறப்பான சாத்தியக்கூறுகளைப் பெறுகிறார்கள். அதன்பிறகு மக்கள் தங்களிடம் இருக்கும் கிறிஸ்துவின் வெளிச்சத்தைத் தாங்கள் வசிக்கும் மற்றும் பணிசெய்யும் இடங்களில் கொண்டு வரலாம்.

இந்த உலகம் முழுவதிலும் இருப்பவர்களைக் கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்க்கும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் இப்படித் தூவப்பட்ட தனிப்பட்ட நபர்களையும் குடும்பங்களையும், உள்ளூர் திருச்சபைகளையும் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவின் மக்கள் ஒவ்வொருவரின் மூலமாகச் சுவிசேஷ ஊழியமானது பரவப்பட்டும், பேசப்பட்டும் முழுமையடையும்போது கிறிஸ்து திரும்பவும் வருவார் (பார்க்க, மத்தேயு 24:14).

கிறிஸ்துவின் மக்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் சேர்க்கப்பட்டு தேவனுடைய ஆலயமாக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரும் தனிநபராகவே இருக்கிறார்கள். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தனித்துவமான வழிகளில் வளர்ந்து முதிர்ச்சியடைகிறார்கள். எனவே கிறிஸ்துவின் மக்கள் ஒவ்வொருவரின்

தனிப்பட்ட வளர்ந்துவரும் ஆவிக்குரிய வளர்ச்சியும், சரீரம் முதிர்ச்சியடையவதும் சேர்ந்து தேவனுடைய சுவிசேஷத்தின் செய்தியைக் கொடுக்கும் வழியானது இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் தேவனுடைய நற்செய்தியைக் கேட்கும், புரிந்துகொள்ளும், ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் வாய்ப்பைப் பெறும் வகையில் இருக்கும். இப்படிப்பட்ட வளர்ந்துவரும் ஆவிக்குரிய முதிர்ச்சியின் தோரணையினாலேயே சபையின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். இப்படித்தான் தேவன் தம்முடைய சரீரத்தை வடிவமைத்திருக்கிறார். இது அவர் திருச்சபையின் செயல்பாடுகளில் பின்னியிருக்கும் ஒரு மரபியல் சார்ந்த ஒழுங்குமுறையாக இருக்கிறது.

இது அப்படியே பவுல் திருச்சபையைக் குறித்து வெளிப்படுத்திய கடைசியும், மிகவும் முக்கியமானதுமான வெளிப்பாட்டிற்கு நம்மை அழைத்துச் செல்கிறது: "...இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது... உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபேசியர் 3:8–11). தேவனுடைய இந்தப் பிரம்மாண்டமான ஆனால் எளிமையான இந்தப் புதிய வடிவமைப்பானது இன்று மக்களால் திருச்சபை என்று அழைக்கப்படும் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவமைப்பில் தொலைந்துபோய்விடுகிறது. பவுல் இங்குக் கொடுக்கும் அறிவிப்பிலிருந்து நாம் ஐந்து முக்கியமான அடிப்படைகளைப் பார்க்கிறோம்.

*ஆரம்பத்திலிருந்து தேவன் ஒரே ஒரு நோக்கத்தை மட்டுமே பெற்றிருக்கிறார்.* தேவனுடைய நோக்கத்தின் இப்படிப்பட்ட ஒருமனமான கொள்கையைக் குறித்துப் பவுல் அழுத்தமாகக் கூறுகிறார்: மக்களைப் பாவத்திலிருந்து மீட்டு, அவர்கள் அவரோடு கொண்டுள்ள உறவையும், அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதையும் சீரமைத்தல். அவர் வெறுமனே இலக்கணத்தைக் கொண்டு மட்டும் வலியுறுத்தவில்லை (தேவனுடைய நோக்கம் என்பது ஒருமையை உணர்த்துவதாக இருக்கிறது, அதில் பன்மை இல்லை) முற்காலத்தில் தேவனால் செய்யப்பட்ட மறைவான கிரியைகளையும் மேற்கோளாகவும் கூறுகிறார். அது மிகவும் தெளிவாக இல்லாமல் இருந்தாலும், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததிலிருந்து தன்னைச் செயல்படுத்திக்கொண்டே வருகிறது. இந்த இயக்கத்திற்கு முன்பாக நிகழ்ந்தவை எல்லாம் ஆயத்தம் செய்யும் காரியங்களாக இருந்தன. அதைத் தொடர்ந்து நிகழ்பவை எல்லாம் முடிவை நோக்கிச் செய்யும் காரியங்களாக இருக்கின்றன.

*இந்தக் காலத்திற்காகத் தேவன் இந்தப் பூமியில் ஒரே ஒரு ஆயுதத்தை மட்டுமே வைத்திருக்கிறார்: திருச்சபை.* பக்கத்தில் இருக்கும் இடங்களிலும், நகரங்களிலும், மாநிலங்களிலும் ஏன் இந்த உலகத்தின் தேசங்களிலும் தேவன் செய்யவிருக்கும் காரியத்தை அவர் ஒவ்வொரு கிறிஸ்துவின் மக்களின் மூலமாகச் செய்யப்போகிறார். சுவிசேஷத்தின் கதையை வாழ்ந்துகாட்டுவதிலிருந்தும், சொல்வதிலிருந்தும் யாரும் விட்டுவைக்கப்படுவதில்லை. இயேசு இப்போது தேவனுடைய வலதுபாரிசத்திலே இருப்பதால் அவர் தம்முடைய கிருபையின் கதையைத் தம்முடைய சீஷர்கள் ஒவ்வொருவரின் மூலமாகவும் சொல்லுவார். இந்தச் செயலைச் செய்வதற்கு பாத்திரர் கிடையாது என்று யாரும் இல்லை: யாரையும் தள்ளி வைக்க முடியாது.

தேவன் கிறிஸ்துவில் கிரியை செய்யும் இரகசியமான கிருபையானது (பார்க்க, எபேசியர் 3:8) ஒவ்வொரு கிறிஸ்துவின் மக்களிலும் குறிப்பிட்ட, தனிப்பட்ட, முழுமையான மற்றும் இந்தப் பிரபஞ்சத்திற்கேதுவான வெளிப்பாட்டைக் கண்டுபிடிக்கும். விசுவாசிகள் தங்களுடைய கிருபையின் கதைகளைச் சொல்லும் ஊழியம் குறிப்பிடத்தகும் ஒன்றாக இருக்கிறது ஏனென்றால் கிறிஸ்துவின் மக்கள் ஒவ்வொருவரும் இதைப் பெற்றிருக்கிறார்கள் – வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களோடு தங்களுடைய சொந்தக் கதையைப் பகிரும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அது தனித்துவமானதாக இருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொருவரும் தங்களுக்குரியதான வழியில் அதைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு நபருடைய கதையும் தனித்துவமானதாக இருக்கிறது. ஒருவர் மற்றொருவரின் கதையைப் பெற்றிருப்பதில்லை. ஒவ்வொருவருடைய கதையும் இருந்தால் தான் அது முழுமைப்பெறுகிறது அல்லது அது முழுமைப்பெறுவதில்லை. அதுபோல எல்லோருடைய கதைகளும் சேர்ந்து தேவன் சொல்ல விரும்பும் முழுக் கதையையும் சொல்கிறது. எனவே அது முழுமையானதாகவும், விரிவானதாகவும் இருக்கிறது ஏனென்றால் தனிப்பட்ட கதைகள் எல்லாம் ஒருநாள் சேர்ந்து முழுக் கதையாகிவிடும். இது கடைசியில் இந்தப் பிரபஞ்சத்திற்குரியதாகிறது ஏனென்றால்

கிருபையின் சுவிசேஷம் இந்த உலகம் முழுவதற்கும் பிரசங்கிக்கப்படும். ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த, மொழியைச் சேர்ந்த மற்றும் தேசத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் அதனால் மறுரூபமாக்கப்படுவார்கள்.

இப்படிப்பட்ட குறிப்பிட்ட, தனித்துவமான, முழுமையான மற்றும் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஏதுவாக வெளிப்படுத்தப்படும் தேவனுடைய கிருபையானது காலத்தையும் தாண்டியிருக்கும் காணமுடியாத வல்லமைகளுக்கு நித்தியமான இரகசியமாக இருக்கிறது. சாத்தானுக்கு அது புரிவதில்லை. சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் பாவத்தையும், குற்றம் சாட்டுவதையும் அறிந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களால் கிருபையைப் புரிந்துகொள்ள முடியாது. காபிரியேலும் தேவ தூதர்களின் சேனைகளும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். எனவே திருச்சபையில் காணப்படும் மில்லியன் கணக்கானவர்களில் காணப்படும் கிறிஸ்துவின் மக்கள் ஒவ்வொருவரும் கிருபையின் இரகசியத்தின் குறிப்பிட்ட மற்றும் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஏதுவான அறிக்கையாக இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்கிறார்கள்.

பாவத்தின் காரணமாகச் சிறப்பாகத் தீட்டப்பட்ட திட்டமானது தவறாகிவிட்டது என்பதால் தேவன் அதைக் காப்பாற்றும்படியாக அவர் சிந்திக்காமல் எடுத்த ஒரு முடிவு இது என்று பவுல் எடுத்துரைத்திருக்கும் காரியங்கள் வெளிப்படுத்தவில்லை. அதற்குமாறாக அது தேவனுடைய நித்திய வரிசைக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் இருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரின் மூலமாக ஆண்டவர் கிருபையின் இரகசியத்தைத் தொட்டறியக்கூடிய வகையில் மட்டும் வெளிப்படுத்தவில்லை, அவர் அதை நித்தியத்திற்காகவும் செயல்படுத்துகிறார்.

## என்னுடைய முடிவுகள்

கடைசியாக, என்னால் தேவனுடைய திட்டத்தைப் பார்க்க முடிந்தது! கிறிஸ்துவின் திருச்சபை என்பது பிரசங்கிப்பதற்காகவோ அல்லது ஆராதனை செய்வதற்காகவோ மக்களைக் கூட்டும் ஒரு சேமிப்புக் கிடங்கு கிடையாது. மக்களுக்கு நல்ல நற்குணங்களைச் சொல்லிக்கொடுக்கும் மதிப்புக்கூட்டும் இடம் கிடையாது. நல்ல நண்பர்களையும், ஐக்கியத்தையும் நாம் கண்டுபிடிக்கும்படியாகச் சமுதாயம் கூடும் இடம் கிடையாது. திருச்சபையின் செயல்பாடுகளினால் இவை எல்லாம் நிகழ்வதற்குச் சாத்தியம்தான் ஆனால் இவை எல்லாம் மட்டுமே திருச்சபையின் முக்கியமான நோக்கமாக இருக்கக்கூடாது. தேவன் நம்மை எங்கு அழைத்தாலும் அங்கு நாம் சுவிசேஷத்தை வாழ்ந்து காண்பிக்கும்படியாக கிறிஸ்துவின் திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரையும் ஆயத்தப்படுத்துவதே நம்முடைய நோக்கமாக இருக்கிறது.

திருச்சபையில் தேவன் கொண்டிருக்கும் வடிவமைப்பின் கடினத்தைப் பார்த்து பிரம்மித்துப்போவதைக் காட்டிலும் அதனுடைய எளிமையினால் தான் பல விசுவாசிகள் பிரம்மித்துப்போகிறார்கள். மக்கள் ஒழுங்குரீதியான வடிவமைப்பு திருச்சபையில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள் ஏனென்றால் அவர்கள் பாதுகாப்பைத் தேடுகிறார்கள்; அதற்குத் தலைமைத்துவமும் ஒத்துப்போகிறது ஏனென்றால் அவர்கள் முக்கியத்துவத்தைத் தேடுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்திற்கு வடிவமைப்பும், பாதுகாப்பும், முக்கியத்துவமும் தேவைப்படுகிறது ஆனால் பாவம் தேவைப்படுவதில்லை. ஆனால் வடிவமைப்பு சட்ட அமைப்பையும் பழக்க வழக்க மரபையும் ஏற்படுத்துகிறது. சுவிசேஷத்தைக் கொண்டு இந்த உலகத்தில் நோக்கத்தோடு செயல்படுவதற்குப் பதிலாகப் பாதுகாப்பை மக்கள் தேர்ந்தெடுக்கும்போது, தலைவர்கள் கிறிஸ்துவின் மக்கள் ஆற்றல்பெறுவதைக் காட்டிலும் அமைப்பின் முக்கியத்துவத்தைத் தேர்ந்தெடுக்கும்போது திருச்சபையானது பாவத்தில் வீழ்ந்துவிடுகிறது. இது நிகழும்படியாகத் தலைமைத்துவம் அனுமதிக்கும்போது அவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் தவிர்த்து இந்த உலகத்தை ஈடுபடும்படியாகச் செய்வதற்கு நமக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான ஒரு ஆயுதத்தை வெட்டிவிடுகிறார்கள்: அவருடைய மக்கள்.

என்னுடைய தேடுதல் எல்லாம் என்னை நான்கு முடிவுகளுக்கு வழிநடத்தின. இந்த முடிவுகளே நாம் கிறிஸ்துவின் மக்கள் அனைவரையும் அணிதிரட்டவும், புதிய திருச்சபைகளை ஸ்தாபிக்கவும், ஒரு இடத்திலோ, நகரத்திலோ, பகுதியிலோ அல்லது தேசத்திலோ இருக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுபிள்ளையும் இயேசுவில் தேவன் கொடுக்கும் கிருபையைக் குறித்துக் கேட்கும், புரிந்துகொள்ளும் மற்றும் பதிலளிக்கும் வாய்ப்புகளைக் கொடுக்கவும் அடித்தளத்தை ஏற்படுத்துகின்றன.

முதலாவது, தேவன் இந்த உலகத்தில் செய்யவிருக்கும் காரியங்களைக் கிறிஸ்துவின் மக்கள் எல்லோர் மூலமாகவும் செய்யப்போகிறார்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் மக்களின் மூலமாகத் தேவன் இந்த உலகத்தில் செய்யப்போகும் காரியத்தை அவர் கிறிஸ்துவின் மக்களை ஆயத்தப்படுத்துவதற்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் தலைமைத்துவத்தின் மூலமாகச் செய்யப்போகிறார்.

மூன்றாவதாக, கிறிஸ்துவின் மக்களின் மூலமாகத் தேவன் இந்த உலகத்தில் செய்யப்போகும் காரியத்தை அவர் அதிகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கும் தலைமைத்துவ வடிவமைப்பின் மூலமாகவே செய்யப்போகிறார்.

நான்காவதாக, தேவன் இந்த உலகத்தில் செய்யவிருக்கும் காரியத்தை அவர், நேரடியாகச் சுவிசேஷத்தையும் அதனுடைய விரிவாக்கத்தையும் கொண்டு சென்று, பங்கெடுத்து, ஒத்துழைத்து, பொறுப்பெடுத்து நேரடியாகச் செயல்படும் உள்ளூர் திருச்சபைகளின் மூலமாகவே செய்யப்போகிறார்.

## பொறுப்புகளை ஏற்கும் வட்டத்தை ஏற்படுத்துதல்

என்னுடைய தேடுதல் திருச்சபையைக் குறித்தும் அதனுடைய தெய்வீக அதிகாரத்தைப் பெறும்படியாக அணிதிரட்டும் பணியைப் பெற்றிருக்கும் தலைமைத்துவத்தைக் குறித்தும் மேலும் ஒரு முடிவையும் எடுக்கச் செய்தது: கிறிஸ்துவின் மக்களுக்கு அதிகாரமளிக்கும்போது தலைமைத்துவமானது தனிப்பட்ட முறையில் ஏமாறும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

திருச்சபையைக் குறித்து மேற்கத்திய திருச்சபைக் கொண்டிருக்கும் இறையியல் கோட்பாடு நம்முடைய காலகட்டத்திற்கு மிகவும் பெலவீனமானதாகவும் குறைவுப்பட்டதாகவும் இருக்கிறது. இதன் காரணமாக கிறிஸ்துவின் மக்களுக்கும், இந்த உலகத்திற்கும் தாங்கள் செயல்பூர்வமானவர்களாக இருப்பதற்கு ஒரு கட்டிடத்திலோ அல்லது திட்டத்திலோ செயல்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோல் என்று தலைவர்கள் கூட விசுவாசிக்கும் வகையில் மாறிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சிந்தனை மக்களின் மீதும் தலைவர்கள் மீதும் ஒன்றுபோல நிகழக்கூடும். நம்முடைய திருச்சபையில் மக்கள் சேர்ந்தால் அல்லது நம்முடைய மக்கள் மனநிறைவோடு இருந்தால் அல்லது நம்முடைய சபையார் ஆவியால் நிறைந்திருக்கிறார்கள் என்றால் கிறிஸ்துவின் திருச்சபையாகிய நாம் நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறோம் என்று நாம் மெய்யாகவே விசுவாசிக்கும்படியாகச் செய்துவிடும்.

ஆனால் உண்மைநிலையில் பார்த்தால், நாம் இன்று மேற்கத்திய பகுதிகளில் பார்ப்பதைப் போல, மக்கள் தேவனோடு கொண்டிருக்கும் நெருக்கத்தை இழந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நகரங்களில் காணப்படும் திருச்சபைகள் தங்களுடைய உறுப்பினர் எண்ணிக்கையில் குறைந்தாலும், நம்முடைய சொந்தத் திருச்சபை வளர்ந்துகொண்டிருந்தாலோ அல்லது மனதிருப்தியோடு இருந்தாலோ நாம் நல்ல நிலையில் இருக்கிறோம் என்று நாம் அனுமானம் செய்துகொள்கிறோம். நாம் நன்றாகத்தான் இருக்கிறோம் என்று சிந்திக்கும்படி ஏமாற்றப்படுவதைக் காட்டிலும் நம்முடைய திருச்சபையானது மற்றவர்கள் பார்த்து செயல்படுத்தும்படியாக ஒரு மாதிரியாக இருக்கும் என்று நாம் நினைக்கும்படியாக ஏமாற்றப்படுகிறோம்.

திருச்சபையைக் குறித்த வேதாகம சத்தியங்களை நான் சேகரித்தபோது நமக்கு நடுவில் தேவனுடைய நோக்கம் நிறைவேறிக்கொண்டு தான் இருக்கிறது என்று சிந்தித்து என்னையே நான் ஏமாற்றிக்கொள்ளாத வகையில் இந்தச் சத்தியங்களைக் குறித்த யுக்திரீதியான செயல்படுத்துதல்களை நான் உருவாக்க வேண்டியிருந்தது. ஆனால் உண்மையில் பார்க்கப்போனால் நம்முடைய வளர்ச்சி என்பது கூட்டமாகச் செல்லும் மனோதத்துவமாகவும் சேமிப்புக் கிடங்கைப் போல் இருக்கும் நிலையாகவும் இருக்கும். இந்த யூக்தி சார்ந்த செயல்படுத்துதல் ''பொறுப்பின் வட்டத்தைப்'' பெற்றிருக்கிறது என்று நான் சொல்லத்துவங்கினேன்.

பொறுப்பின் வட்டத்தை ஏற்படுத்துதல் என்பதற்குப் பரிசுத்த ஆவியானவரிடம் நம்முடைய உள்ளூர் சபையைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கொடுக்கச் சொல்லிக் கேட்டு அந்த இடத்தில் நம்முடைய *எல்லா* ஆதாரங்களையும் அதிகாரப்படுத்தி அணித்திரட்டச் செய்யலாம். இதன் மூலமாக ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அந்த இடத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் இயேசுவே தங்களுடைய இரட்சகராக இருக்கிறார் என்பதைக் கேட்கவும், புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் அல்லது நிராகரிக்கவும் வாய்ப்பளிக்கலாம்.

கிறிஸ்துவில் விசுவாசத்திற்குள் வருபவர்களை உள்ளூர் திருச்சபைக்குள் ஒருங்கிணைக்கச்

செய்து அவர்கள் தங்களுடைய சொந்த சீஷத்துவத்தைச் செயல்படுத்தும்படியாக அவர்களுக்கு அதிகாரமளிக்கும்படியாக நாம் ஆயத்தப்படுத்த வேண்டும் (பார்க்க, 1 பேதுரு 2:9). இதன் மூலமாக அவர்கள் பரலோகப் பிரதாவோடு நெருக்கமடைவார்கள். இது அவர்களை அதிகாரப்படுத்தி, தேவனுடைய ஆவியானவர் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் கிருபையைக் குறித்தத் தனித்துவமான கதைகளுக்கு கணக்குக்கொடுப்பவர்களாக இருக்கச் செய்யும். அவர்களுடைய ஆவிக்குரிய வரங்களை அவர்கள் கண்டுபிடிக்கும்படியான வாய்ப்பைக் கொடுத்து, அதைத் திருச்சபையும், இன்னும் குறிப்பாக அவர்கள் அதிக நேரத்தைச் செலவு செய்யும் இந்த உலகத்திலும் பயன்படுத்தும்படியாக அவர்களுக்கு ஒரு சுற்றுச்சூழலை ஏற்படுத்தும்.

நான் வம்சாவளியாகத் திருச்சபைகளைக் குறித்துப் பெற்றுக்கொண்ட இறையியல் கோட்பாடுகளுக்கு நேர் எதிர்மறையானதாக இந்தப் பொறுப்பின் வட்டம் இருக்கிறது. ‘‘உள்ளிருந்து வெளியே’’ சிந்திப்பதைக் கொண்டு நான் எங்களுடைய திருச்சபையின் செயல்திறத்தை ஆரம்ப காலத்தில் அளவீடு செய்துகொண்டிருந்தேன் – அதாவது நாங்கள் பெரியதாக இருக்கிறோமா அல்லது சிறியதாக இருக்கிறோமா என்பதை வைத்து. எங்களுடைய திருச்சபையை நான் ஒரு அளவுகோலாக வைத்து திருப்தியாகவும், பாதுகாப்பாகவும், சில நேரங்களில் பெருமையாகவும் உணர்ந்தேன். எங்களுடைய மக்கள் எங்கிருந்து வந்தார்கள், அவர்கள் திருச்சபைக்கு வெளியே கொண்டிருக்கும் உறவுமுறைகளோடு தங்களுடைய விசுவாசத்தை என்ன செய்தார்கள் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாக இருந்தது.

வெளியிலிருந்து உள்ளே சிந்திப்பது என்பது எங்களுடைய திருச்சபையை அதனுடைய சுவிசேஷத்தின் நோக்கத்தைக் கொண்டு எடைபோடச் செய்தது. அது நாங்கள் வாழும் முழு சமுதாயத்தின் உண்மைநிலை மற்றும் அதே சமுதாயத்தில் கிறிஸ்துவின் சரீரத்தின் பிற பகுதிகளோடு ஒத்துழைப்போடு செயல்படுவதின் நடுவில் செயப்பட்ட மதிப்பீடாக இருந்தது. நாங்கள் வாழும் சமுதாயத்திற்கு சுவிசேஷத்தைத் தேவையான அளவு கொடுக்கிறோமா என்பதே மையக் கேள்வியாக மாறியது. அந்தக் கேள்வி அளவீடு செய்வதற்கு எளிதாக இருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் பிறகு எங்களுக்கு மீதமிருந்த ஒரே கேள்வி இதுதான், எங்களுடைய திருச்சபை ஆராதனையில் கலந்துகொண்டு ஆனால் தங்களுடைய விசுவாசத்தைக் கொண்டு ஒன்றுமே செய்யாத மக்கள் எத்தனை சதவீதம் இருந்தால் நாங்கள் திருப்தியடைவோம்? எங்களுடைய திருச்சபையின் மக்கள் அவர்களுடைய நோக்கம் என்ன என்று விசுவாசிக்கிறார்கள் என்பதையும், நாங்கள் வாழும் உலகத்தில் மெய்யாகவே ஈடுபாடு கொள்ள முடியுமா என்பதையும் அந்தக் கேள்விக்கான பதில் தீர்மானம் செய்யும்.

# 3

# திருச்சபையானது தன்னுடைய வெற்றியை எப்படி அளவீடு செய்ய வேண்டும்?

ஆதியிலே தேவன் ஆண்களையும் பெண்களையும் தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார். மனித சிருஷ்டியின் தனித்துவமான வடிவமைப்பை இந்த உலகத்தில் வேறு எதுவும் பெறவில்லை. மிருகங்களோ, இயற்கை உலகமோ, ஏன் தேவ தூதர்கள் கூடப் பெறவில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் சிருஷ்டிக்கப்பட்டவை எல்லாவற்றைக் காட்டிலும் வித்தியாசமாகத் தேவன் ஆதாமையும், ஏவாளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் சிருஷ்டித்தார். அவர்களை இரண்டு நோக்கங்களுக்காக அப்படிச் சிருஷ்டித்தார்: அவரோடு உறவு கொள்ள வேண்டும் என்றும், அவரைப் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும் என்றும் அப்படிச் செய்தார்.

உறவுமுறை மற்றும் பிரதிநிதித்துவத்தைக் குறித்த இந்தச் செய்தியானது வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது. நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும்போது மோசே இந்த உறவுமுறையைக் குறித்து இப்படி எழுதியிருக்கிறார்: ‘‘இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக’’ (உபாகமம் 6:4–5). இந்த உலகத்தில் தேவனுடைய பிரதிநிதியாக இருப்பதைக் குறித்து இப்படி எழுதியிருக்கிறார்: ‘‘பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவாயாக; நான் கர்த்தர்’’ (லேவியராகமம் 19:18).

கேள்வி கேட்கப்பட்டபோது இயேசுவும் அதையே உறுதிப்படுத்தினார்:

> போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார் (மத்தேயு 22:36–40)

அப்போஸ்தலனாகிய பவுல் இந்தச் செய்தியை 2 கொரிந்தியர் 5:17–20 வசனங்களில் திரும்பச் சொல்கிறார்: ‘‘இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின... ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.’’

பிதாவாகிய தேவனோடு மக்கள் தங்களுடைய உறவில் வளர்கிறார்களா என்பதைப் பார்ப்பதே திருச்சபையின் முக்கியமான பணியாக இருக்கிறது. இது நிகழ்கிறதா என்பதைத் திருச்சபைப் பார்க்கத் தவறும்போது, அந்தச் செயல் எவ்வளவு கடினமானதாகவும், செய்வதற்குக் கஷ்டமானதாகவும் இருந்தாலும், தன்னுடைய முக்கியமான கடமையில் தோல்வியைச் சந்திக்கிறது. தேவனுடைய நோக்கத்தைக் குறித்துத் தாங்கள் எந்த அளவிற்குச் செயல்பூர்வமாக இருக்கிறோம் என்பதை அளவீடு செய்வதில் திருச்சபை வீழ்ச்சியடையும்போது, தான் செய்யும் காரியம் தேவனுடைய நோக்கத்தோடு ஒத்துப்போகிறதா, அதனோடு இணைந்து செயல்படுகிறதா, அது தன்னுடைய பிரதானப் பணியில் தோல்வியடைகிறது.

தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படியாக விசுவாசிகளைப் பெலப்படுத்துவதும், ஆயத்தப்படுத்துவதுமே திருச்சபையின் இரண்டாவது பணியாக இருக்கிறது. மக்களுடைய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் இந்தப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அது தேவனோடு கொண்டிருக்கும் உறவில் வளர்ந்து, அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் குடியிருப்பதில் மேம்பட்டு, அவர்கள் எடுக்கும் முடிவுகளில் ஒத்துப்போகி, இந்த உலகத்தில் தங்களைச் சுற்றியிருக்கும் மக்களோடு கொண்டிருக்கும்

உறவுமுறைகளில் வழிந்தோடுகிறது.

தேவனோடு கொண்டிருக்கும் உறவிலும், அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் திருச்சபையானது மக்களை ஆக்கப்பூர்வமான வழியில் ஆயத்தப்படுத்துகிறது என்பதை நாம் எப்படி அளவீடு செய்ய முடியும்? ''தொடக்கநிலை மதிப்பீடுகள்'' என்று நான் அழைக்கும் ஐந்து மதிப்பீடுகளை முதிர்ச்சி அடைந்துகொண்டிருக்கும் விசுவாசியின் வாழ்வில் இருப்பதாக வேத வசனங்கள் சொல்கின்றன. முதல் மதிப்பீடு உறுவுமுறையைக் கையாளுகிறது. மற்ற நான்கும் பிரதிநிதித்துவத்தைக் குறித்ததாக இருக்கின்றன. இந்தத் தொடக்கநிலை மதிப்பீடுகள் மிகவும் முக்கியமானவையாகவும், மாற்றமுடியாதவையாகவும் இருக்கின்றன. சொல்லப்போனால் திருச்சபையாகக் கூடியிருக்கும் மக்கள் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் இந்த மதிப்பீடுகளை வளர்க்கும்படியாக ஒரு சிறிய அடியைக் கூட எடுத்துவைப்பதில்லை. அப்படியிருக்கும்போது அவர்கள் சேர்ந்து ஒரு திருச்சபையாக இருக்க முடியாது. நல்ல பிரசங்கத்திற்காகவும், நல்ல ஆராதனைக்காகவும், நல்ல செயல்திட்டங்களுக்காகவும், நல்ல நிகழ்ச்சிகளுக்காகவும் அல்லது நல்ல கட்டிடங்களுக்காகவும் மக்கள் திருச்சபைக்கு வந்துவிட்டு தேவனுடைய வார்த்தையைச் சார்ந்த மதிப்பீடுகளில் அளவீடு செய்யக்கூடிய வளர்ச்சியைப் பெறவில்லையென்றால் அவர்கள் ஒரு திருச்சபையைப் பெற்றிருக்கவில்லை.

இந்த ஐந்து மாற்றமேயில்லாத தொடக்கநிலை மதீப்பிடுகளின் வடிவமைப்பிற்குள் ஒரு திருச்சபையின் ''வெற்றியை'' மதிப்பீடு செய்யும்போது நாம் மெய்யாகவே ஒரு திருச்சபையை வைத்திருக்கிறோமா அல்லது வெறுமனே மதரீதியான கூடுகையை நடத்துகிறோமா என்பதை அறிந்துகொள்வோம். திருச்சபையானது மெய்யாகவே கிறிஸ்துவின் மக்களை இந்த மதீப்பீடுகளை வாழ்ந்துகாட்டும்படியாக அதிகாரப்படுத்துகிறதா அல்லது இன்றைய தினத்தில் பரவலாகக் காணப்படும் ''வந்து பாருங்கள்'' என்ற கருத்தை எடுத்துரைக்கிறதா என்பதை அளவீடு செய்வதற்கு இந்த ஐந்து மதிப்பீடுகளும் உதவி செய்கின்றன. வாருங்கள் நாம் அவைகளைக் குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

## தொடக்கநிலை மதிப்பீடு 1: தேவனோடு ஒரு நெருக்கத்தை வளர்த்தல்

தேவனோடு உறவை ஏற்படுத்திக்கொள்வதே வேத வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் முதல் அழைப்பாக இருக்கிறது. எனவே இதுவே மிகவும் முக்கியமான தொடக்கநிலையாக இருக்கிறது. இது வெறுமனே சாதாரண உறவு கிடையாது. இது மிகவும் நெருக்கமான உறவாக இருக்கிறது. தேவனோடு உறவு கொள்ளாமல் நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தில் இருக்கும் மக்களை நம்மால் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. தேவனோடு நெருக்கமான உறவில் தங்களுடைய மக்கள் இருக்க வேண்டும் என்று திருச்சபை செயல்பட்டு, எதிர்பார்க்கும்போது அது அதனுடைய பணியைச் செய்கிறது.

நாம் தேவனோடு நெருக்கமான உறவைப் பெறும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம்:

> கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார், அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள். (சங்கீதம் 40:1–3)

நம்முடைய பிதாவாகிய தேவனோடு எப்போதுமே ஆழமாகிக்கொண்டிருக்கும் உறவுமுறையில் நாம் சேர வேண்டும் என்று சங்கீதக்காரன் இங்குக் கொடுக்கும் அழைப்பு நமக்குச் சவால் விடுகிறது. ஆனால் நம்மைச் சுற்றியிருக்கும் உலகம் தேவனோடு நெருக்கமான உறவைக் கொள்ளவிரும்புகிறவர்களின் எண்ணங்களையும் இருதயத்தையும் மயக்கி மாற்றிவிடுகிறது. இது ஒருவேளை இன்றைய கலாச்சாரம் முன்பிருந்த கலாச்சாரத்தைக் காட்டிலும் பாவகரமானதாக இருக்கலாம் அல்லது ஊடகங்களின் தாக்கத்தினால் இருக்கலாம். ஆனால் முன்பைக் காட்டிலும் இப்போதுதான் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் விசுவாசிகள் அதிகமான பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இவர்களுள் சிலர் பெயரளவிற்குக் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை'' (மத்தேயு 7:23) இயேசு கூறுகிறவர்களாக அவர்கள் இருப்பார்கள். அவர்கள் கிறிஸ்தவத்தின் வடிவங்களைச் செயல்படுத்துகிறார்கள் ஆனால் இயேசுவால் வாக்களிக்கப்பட்ட மறுரூபமாக்கப்படுதலையோ அல்லது அதிகாரத்தையோ அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. இந்தத் தனிப்பட்ட நபர்கள் திருச்சபையில்

தொடர்ந்து இருப்பதின் மூலமாகத் திருச்சபையின் வாழ்வில் ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள். ஒரு காலத்தில் நாம் அவர்களை உலகமயமாக்கப்பட்ட திருச்சபைகளில் தான் பார்த்தோம். ஆனால் இப்போது அவர்கள் சுவிசேஷப் பிரகாரமாக இருக்கும் திருச்சபைகளையும் நிரப்புகிறார்கள்.

மற்ற மக்கள் தேவனோடு மிகவும் நெருக்கமான உறவைக் கொள்ளவேண்டும் என்ற ஆசையை மெய்யாகவே பெற்றிருக்கிறார்கள் ஆனால் பிற காரியங்களால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கலாச்சாரத்தின் மயக்கத்தினால் இப்படிப்பட்டவர்கள் தான் பாடுபடுகிறார்கள். பொருளாசை, உலகப்பிரகாரமான தாக்கங்கள், இந்த உலகத்தின் கவலைகள் போன்றவைகளால் இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பற்றிக்கொண்டிருக்கும் வேத வசனங்களின் சத்தியங்களில் ஒரு வறட்சியை அனுபவிப்பதேன் அதன் விளைவாக இருக்கிறது. அதிகப்படியான திருச்சபைகள், இப்போது அதிகமாகக் கொடுக்கும் நிகழ்ச்சிகளில் காணப்படும் கிறிஸ்தவத்தின் வடிவங்களைக்காட்டிலும் இன்னும் ஆழமான காரியங்களை அவர்கள் அனுபவிக்கவேண்டும் என்றால் இப்போதே அவர்கள் விழித்துக்கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது.

மீதமிருக்கும் விசுவாசிகள் அனைவருக்கும் தேவனிடத்தில் தங்களைச் சமர்ப்பிப்பது என்பது ஆக்கப்பூர்வமான அழைப்பாக இருக்கிறது. தேவனோடு அவர்கள் அனுபவித்த நிகழ்வுகளை அவர்கள் நினைத்துப்பார்க்கும்போது அவர்கள் ஊக்கத்தையும், சவாலையும், அன்போடு திருத்தப்படுவதையும் நினைவுகூருவார்கள். இந்த நேரங்களில் தேவன் முற்றிலும் நம்பத்தகுந்தவராக இருக்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். அவரிடம் தங்களை அர்ப்பணிப்பது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

ஆனால் இந்த அர்ப்பணிப்போடு இருக்கும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்பை ஆழப்படுத்தும்படியான நேரத்தையும், மனஉறுதியையும் பெற்றிருக்க வேண்டும். தேவனோடு கொண்டிருக்கும் உறவை ஆழப்படுத்துவது எளிதில் ஏற்படும் ஒன்று கிடையாது. அதைச் செயல்படுத்த வேண்டும். நான் இந்த இடத்தில் ‘‘செயல்பட வேண்டும்’’ என்பதற்குப் பதிலாகச் ‘‘செயல்படுத்த வேண்டும்’’ என்று கூறுகிறேன் ஏனென்றால் சட்டரீதியாகக் காணப்படும் கிறிஸ்தவ நிகழ்வுகளுக்கும், இயேசுவோடு ஒரு உறவை ஏற்படுத்துவதற்கு அவசியமான ஒழுக்கநெறிகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மறுபடியுமாக இந்தச் செய்தியானது எல்லா வேத வசனங்களிலும் ஊடுருவிக் காணப்படுகிறது. சிருஷ்டிப்பைக் குறித்த ஆதியாகமம் 1இன் கதையில் அது உள்ளார்ந்து காணப்படுகிறது: தேவனோடு உறவில் தான் மனிதன் பிறந்திருக்கிறான் ஆனால் பாவமே அவனை ஆண்டவரிடத்திலிருந்து அந்நியப்படுத்தியிருக்கிறது. ஆனால் இப்போது இயேசுவில் நாம் அவரோடு உறவில் ஒப்புரவாக முடியும். இதுவே இயேசு கொண்டுவந்த செய்தியாகவும் இருக்கிறது. இதை நாம் மிகவும் தெளிவாக மத்தேயு 20:20–28 மற்றும் யோவான் 17ஆம் அதிகாரங்களில் காணப்படும் வசனங்களில் பார்க்கிறோம். நம்முடைய முழு இருதயத்தோடும், சிந்தனையோடும், ஆத்துமாவோடும் நம்முடைய ஆண்டவராகிய தேவனை நேசிக்க வேண்டும் என்பதே பழைய ஏற்பாட்டில் காணப்படும் மிகவும் முக்கியமான கட்டளையாக இருக்கிறது. பிதாவானவரையும், அவர் அனுப்பிய குமாரனையும் நாம் அறிந்துகொள்ளும்படியாகவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார் (பார்க்க யோவான் 17:3). இந்த அடித்தளத்தில் தான் கிறிஸ்தவம் ஆரம்பிக்கிறது, அதில் தான் முடிகிறது. இல்லையென்றால் அதைக் கிறிஸ்தவம் என்று சொல்ல முடியாது. திருச்சபையானது தன்னுடைய முதன்மையான கடமையாக இதைப் பெற்றிருக்க வேண்டும். இல்லையென்றால் அது மனிதர்களுடைய நேரத்தை வீணடித்துக்கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

ஒப்புரவாகுதல் நம்மைத் தேவனோடு ஒரு உறவுமுறைக்கு நம்மை வழிநடத்துகிறது. அதன்பிறகு நாம் ஒரு பிரச்சினையைக் கண்டுபிடிக்கிறோம். நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் பாவத்தைக் கொண்டு வந்துவிடுகிறோம். ஆம், நம்முடைய பாவம் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்பது சரிதான் ஆனால் நாம் மரித்து, பரலோகத்திற்குச் செல்லும் வரை நம்மைச் சிருஷ்டிக்கும்போது தேவன் நம்மோடு கொள்ளும் உறவைக் குறித்துக் கொண்டிருந்த திட்டங்களுக்கு எதிராக மீதமிருக்கும் நம்முடைய பாவமானது சண்டையிடுகிறது. நாம் பாவத்தினால் பொறாமை, புறம்பேசுதல், ஏமாற்றுதல் மற்றும் பிற சோதனைகளோடு தினசரி போராடுகிறோம். இவை நாம் மக்களோடு கொண்டிருக்கும் உறவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நாம் நம்முடைய குடும்பத்தோடு கொண்டிருக்கும் உறவையும் இது பாதிக்கிறது. இந்தப் பாவங்கள் நம்முடைய வாழ்க்கையில் அதிக காலம்

இருக்கும்போது அவை இன்னும் அதிகமான தழும்புகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் நாம் இன்றைய தினத்தை மேற்கொள்ளுவதற்கும், முற்காலத்தின் பாதிப்புகளிலிருந்து சுகம் பெறுவதற்கும் தேவன் மருந்தை வைத்திருக்கிறார்.

எந்த ஒரு உறவுமுறையையும் போலவே தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவுமுறையானது அதைப் பாதுகாக்கவும், பலப்படுத்தவும் தேவையான ஒழுக்கமுறைகளைப் பெற்றிருக்க வேண்டும். இரட்சிப்பின் நொடியில் ஏற்படும் வல்லமையான அதிகாரமே சாதாரணமாக நாம் இருக்கப்போகும் நிலை என்றும் முற்காலத்தில் ஏற்பட்ட எல்லா பாதிப்புகளும் போய்விட்டன என்றும் நாம் நினைப்போம். ஆனால் தேவன் அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தைக் கொடுக்கவில்லை. தேவனோடு நாம் ஆழமான நெருக்கத்தைக் கொண்டிருக்கும்படியான நம்முடைய ஆசையைப் பலப்படுத்தும் அத்தியாவசியமான நான்கு உறவுசார்ந்த ஒழுக்கமுறைகளை நான் வேதாகமத்தில் பார்க்கிறேன்.

முதல் ஒழுக்கமுறை மீதமிருக்கும் ஒழுக்கமுறைகளுக்கு அடித்தளமாக இருக்கிறது. நம்முடைய வாழ்வில் தேவன் கொண்டு வரவிரும்பும் குணமாக்குதலுக்கு இதுவே அடிப்படையாக இருக்கிறது: *தேவனுடைய வார்த்தையில் நேரம் செலவழித்தல்.* தேவனுடைய வார்த்தை எல்லா எழுதப்பட்ட வார்த்தைகளைக் காட்டிலும் மாறுபட்டதாக இருக்கிறது: “தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது” (எபிரெயர் 4:12).

தேவனால் சுவாசமாக வெளிப்படுத்தப்பட்டதால் தேவனுடைய வார்த்தை உயிருள்ளதாக இருக்கிறது. எனவே அது தொடர்ந்து அதைத் தேடுபவர்களின் வாழ்க்கையில் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை வாசிக்கும் எளிமையான செயலானது இருதயத்திலும் எண்ணங்களிலும் கனிதரும் விதையை விதைக்கிறது. அவிசுவாசியின் மனதில் அது குற்றஉணர்ச்சி, மனந்திரும்புதல் மற்றும் இரட்சிப்பை ஏற்படுத்துகிறது. இது பெரும்பாலும் வேறு எதிலிருந்தும், எவரிடத்திலிருந்தும் தாக்கத்தைப் பெறாமல் நிகழ்கிறது. தேவனோடு ஏற்கெனவே ஒப்புரவாகுதலைப் பெற்றிருந்தும் அவரோடு கொண்டிருக்கும் உறவைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் இருக்கும் நம்மைப் போன்றவர்களுக்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் பணியைச் செய்கிறது. தேவனுடைய வார்த்தையை நாம் தொடர்ந்து வாசிப்பதும் ஆய்வு செய்வதும் நம்முடைய உண்மை நிலையை வெளிக்கொண்டுவரச் செய்கிறது. இதை எபிரெய நிருபத்தின் ஆசிரியர் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கிறார். நம்மை நாமே எலும்பும் சதையுமாக, ஆவியும் ஆத்துமாவுமாகத் தேவன் நம்மை எப்படிப் பார்க்கிறாரோ அப்படியே பார்க்கும்படியாக வேத வசனம் நம்மை விடுவிக்கிறது.

பலருக்கு இப்படிப்பட்ட நிகழ்வானது பயத்தை ஏற்படுத்துகிறது. தேவனுடைய கூர்மையான பார்வைக்குத் தான் வெளிப்படுத்தப்படுவது, நம்மைக் குறித்தத் தெளிவான சித்திரத்தைப் பார்ப்பது கையாளுவதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. எனவே நாம் ஒளிந்துகொள்கிறோம். பெரும்பாலும் நாம் நல்ல காரியங்களுக்குப் பின்பு ஒளிந்துகொள்கிறோம் – திருச்சபையில் கலந்துகொள்வது போல. உறவுமுறையை நாம் பெற்று செயல்படுவதைக் காட்டிலும் மற்றொருவர் அந்த உறவுமுறையைக் குறித்துப் போதிப்பதையோ அல்லது பாடுவதையோ கேட்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். தேவன் உட்பட யாரும் நம்மைக் குறித்த ஆழமான அறிவைப் பெற்றிருப்பதை நம்பக் கூடாது என்று நாம் பயப்படுகிறோம். வார்த்தையைப் பார்க்கும்போது நாம் காணும் காரியங்கள் நமக்குப் பிடிப்பதில்லை. எனவே நாம் வெட்கப்பட்டு ஒளிந்துகொள்கிறோம்.

ஆனால் இப்படி ஒளிந்துகொள்வது நம்முடைய வலியை வலுவூட்டுகிறது, நம்முடைய தழும்புகளைக் கடினப்படுத்துகிறது. எல்லாவற்றையும் விட மோசமானது என்றால் அது நம்மைக் குணமாகுவதிலிருந்து தடுக்கிறது. தேவனுடைய வார்த்தையின் மூலமாகத் தேவனைப் போல வேறு எதுவும் நம்மைச் சுகப்படுத்த முடியாது. எதனாலும் முடியாது! இதுவே எபிரெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தமாகும். இதைத் தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்: தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து கீழ்ப்படிதலின் மனோபாவத்தோடு வாசிப்பதின் மூலமாக நாம் வெளிப்படுத்தப்படுகிறோம். அது *எப்போதுமே* நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசுவானவர் அவருடைய நீதியில் நம்மை உடுத்துவதோடு வருகிறது. அவருடைய ஆடைகளைப் போட்டுக்கொண்டிருக்கும் நாம் வெளிப்படுத்தப்படுகிறோம் ஆனால் குற்றப்படுத்தப்படுவதில்லை. இயேசுவே நமக்குப் பதிலாகக் குற்றப்படுத்துதலை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

எனவே தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து வாசிப்பதின் மூலமாக நாம் தேவனுடைய

பிரசன்னத்திற்குள் நாம் எப்படியிருக்கிறோமோ அப்படியே அழைக்கப்படுகிறோம். அந்தப் பிரசன்னத்தில் நமக்குத் தேவையானதை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம்: இயேசுவில் நாம் பெற்றிருக்கும் மன்னிப்பை நினைவுப்படுத்தும் வகையில் இரக்கத்தையும், நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சுகமளிக்கும் அதிகாரமாகச் செயல்படுத்தப்படும் கிருபையையும் நாம் பெறுகிறோம்.

இந்த நடைமுறை ஒருமுறை மட்டும் நடப்பது என்பது கிடையாது. அது எப்படி முடியும்? நம்முடைய வாழ்க்கையில் காணப்படும் எல்லாத் தழும்புகளையும் முழுமையாகத் தேவன் ஒரு நொடியில் நம்மைக் காணச் செய்தால் நம்மால் அதைத் தாங்கிக்கொள்ள முடியுமா? நாம் தேவனுடைய வார்த்தையோடு தொடர்ச்சியாக நேரம் செலவிட வேண்டும். தேவனோடு தொடர்ந்து உறவுரீதியான ஒழுக்கத்தைப் பெற வேண்டும். பெரும்பாலும் தேவன் நமக்கு ஊக்கத்தைக் கொண்டும், மனமகிழ்ச்சியைக் கொண்டும் ஊழியம் செய்தாலும், அவர் நம்மைக் குறித்து சிறப்பாக அறிந்திருப்பதால் அவர் நாம் யார் என்பதையும், நமக்கு எங்கு சுகம் தேவைப்படுகிறது என்பதையும் வெளிப்படுத்துவார்.

தேவனோடு கொண்டிருக்கும் உறவென்பது உயிருள்ள ஒன்றாக இருக்கிறது. நேரத்திற்கு நேரம் நாம் ஆண்டவரோடு கொண்டிருக்கும் உறவைக் கண்டுகொள்ளாமல் இருக்கும்படியான அறிவின் அடிப்படையை வேத வசனங்களை வாசிப்பது நமக்குக் கொடுப்பதில்லை. நாம் தேவனோடு உறவுகொள்வது என்ற அடிப்படை ஒழுக்கத்தை வளர்க்காமல் விட்டுவிட்டோமானால் நாம் பிற்போக்கானவர்களாகிவிடுவோம். சத்தியம் மிகவும் முக்கியமானதாகும் ஆனால் அது உறவுக்குப் பதில் என்று சொல்ல முடியாது. அதோடு தேவன் நமக்குக் கொடுக்கும் உயிர்ச்சக்தியை நாம் தொலைத்துவிடாமல் இருப்பதற்குச் சத்தியம் மட்டும் நமக்கு உதவி செய்யாது. தொடர்ந்து நிகழும் சுகமாக்குதல் நமக்குத் தேவை. இவை எல்லாம் நாம் நம்முடைய பரலோகப் பிதாவோடு கொண்டிருக்கும் நெருக்கமான உறவின் மூலமாக வளர்க்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக இருக்கும் உறவுசார்ந்த ஒழுக்கமானது *அமைதி* என்பதாகும். யாத்திராகமம் 14:14 வசனத்தில் இஸ்ரவேல் மக்களிடம், ‘‘கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்’’ என்பதை நினைவுப்படுத்துகிறார். சங்கீதம் 37:7 வசனத்தில் சங்கீதக்காரன், ‘‘கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு’’ என்று நமக்கு நினைவுப்படுத்துகிறார். சங்கீதம் 46:10 வசனத்தில் மறுபடியுமாக ‘‘நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்’’ என்று நமக்குச் சொல்லப்படுகிறது.

மிகவும் சத்தமான நம்முடைய உலகத்தில் அமைதியான இடங்களே இல்லை என்று சொல்லும்படியாகவே நிலை இருக்கிறது. ஆனால் அமைதி என்பது நாம் தேர்ந்தெடுத்தால் நம்முடைய எல்லாப் பக்கத்திலும் கிடைக்கும் வகையில் இருக்கிறது. மிகவும் பரபரப்பாக இருக்கும் விமான நிலையத்திலும் கூட என்னால் அமைதியைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன். ஒருவேளை நான் சிறிது தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கும் அல்லது சற்றுத் தொலைவில் யாரும் அமராத இடத்தில் அமர வேண்டியிருக்கும். ஆனால் எனக்குத் தேவை அமைதிதான் என்றால் என்னால் அதைக் கண்டுபிடிக்க முடியும்.

அமைதி என்பது நாம் தேர்ந்தெடுப்பதுதான். நம்முடைய கவனத்தை ஈர்க்கும்படியாக நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்திற்கேதுவான சத்தங்களைக் கேட்காமல் அணைத்துவிடும்படியாகத் தேர்ந்தெடுக்கும் நிலையாகும். தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும், வானொலியைக் கேட்பதற்கும், நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கும், மக்களோடு பேசுவதற்கும் அதற்குரிய காலங்கள் இருக்கின்றன. ஆனால் ஆழமான சிந்தனை மற்றும் சிந்தித்துப் பார்த்தல் ஆகிய இரண்டும் நாம் அமைதியைத் தேர்ந்தெடுத்து அதைச் செயல்படுத்துவதற்குக் கற்றுக்கொண்டால் மட்டுமே நடக்கும்.

இந்த அமைதியில் நாம் புதிய மனமகிழ்ச்சிக்குரிய காரியங்களைக் கண்டுபிடிக்கிறோம். எடுத்துக்காட்டாக, தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து வாசிக்கும் ஒழுக்கத்தின் மூலமாக நம்முடைய இருதயங்களில் நடப்பட்டிருக்கும் வார்த்தைகள் நம்முடைய இருதயங்கள் மற்றும் சிந்தனைகளில் புதிய அர்த்தத்தோடு பரவும்படியாக வாய்ப்பைப் பெறுகின்றன. நம்மைச் சுற்றியிருக்கும் தேவனுடைய உலகத்தின் அழகு நம்மிடம் அவருடைய வல்லமையைக் குறித்தும் சர்வவல்லமையுள்ள நிலையைக் குறித்தும் நம்மிடம் பேசுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனுடைய பிரசன்னத்தில் மறுபடியுமாகப் பரவசப்படுவோம்.

அமைதியாக இருப்பதில் அதிக நேரம் செலவு செய்யாமல் தேவனோடு கொண்டிருக்கும் உறவின் மர்மத்திற்குள் எப்படி நுழைவது என்பதைக் கண்டுபிடித்திருக்க முடியாது. அமைதியைக் கடைப்பிடிக்கக் கூடாது என்பதற்கு நாம் பல காரணங்களைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் மறுபடியும் கூறவேண்டுமானால்

அமைதி என்பது ஒருவர் தேர்ந்தெடுப்பதில் இருக்கிறது. தேவனோடு நாம் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அமைதியைக் கற்றுக்கொள்ளாவிட்டால் நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவு முழுமையடையாது.

மூன்றாவதாக இருக்கும் உறவுமுறை சார்ந்த ஒழுக்கமாக இருப்பது *தனிமையாகும்.* இயேசு தனிமையில் இருப்பதைத் தேர்ந்தெடுத்ததாக நாம் மத்தேயு 14:23 வசனத்தில் பார்க்கிறோம்: ‘‘அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்.’’ இயேசுவானவர் தனிமையைத் தேடிச் சென்றார் என்றால் நமக்கும் அது நல்லது தானே? என்று சொல்வதைத் தவிர கூடுதலாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

நம்முடைய கலாச்சாரத்தின்படி அமைதியாக இருப்பது கடினமான காரியமாக இருந்தால் தனிமையாக இருப்பது என்பது இன்னும் அதிகக் கடினமான காரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையில் கூறியிருக்கும் காரியங்களைக் கேட்பதற்கு அதிக நேரம் செலவிடுவதை நாம் செய்யாமல் இருந்தோமானால் நாம் நம்மோடு தனிமையில் இருக்க விரும்பவில்லை என்றுதான் அர்த்தம். ஒருவேளை சுயத்தைக் குறித்து நாம் அறிந்துகொள்வோம் என்ற பயம் கூட நம்மை நாம் தனிமையில் இருப்பதை விரும்பாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது ஒருவேளை நம்மைச் சுற்றியிருக்கும் கலாச்சாரத்தின் பொழுதுபோக்கில் நாம் நம்முடைய ‘‘மனமகிழ்ச்சியைக்’’ கண்டுபிடித்திருக்கலாம். நம்முடைய அவசர நிலையில் இருக்கும் கலாச்சாரமானது நம்மைத் தனிமையில் நேரம் செலவிடுவதையும், அமைதியாக நேரம் செலவிடுவதையும் தடைசெய்கிறது. நம்முடைய கலாச்சாரமானது வெறுமனே கண் துடைப்பிற்குத் தான் இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது அறிந்துகொள்ளலாம்.

நாம் தனிமையில் இருக்கும்போது அமைதியாக இருப்பதற்கும் அதே சமயத்தில் தேவனுடைய வார்த்தையை ஆர்வத்தோடு கேட்பதற்கும் இடத்தைப் பெறுகிறோம். தனிமையில் இருக்கும்போது நம்முடைய சிறிய நிலையைக் குறித்தும், இந்தப் பூமியில் நம்முடைய தற்காலிகமான நிலையைக் குறித்தும் நாம் நினைவுப்படுத்தப்படுகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, தனிமையில் இருக்கும்போது நாம் இந்த உலகத்திற்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை என்பதை நாம் நினைவுகூருகிறோம். பாவத்தின் பலன்கள் இந்தப் பூமியை ஆட்கொண்டிருக்கிறது. ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தில் தேவன் நமக்காகச் சிருஷ்டித்த உலகத்திற்கே நாம் சீரமைக்கப்பட வேண்டும். நம்முடைய வாழ்க்கை எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை மறுசீரமைக்கத் தனிமை நமக்கு வாய்ப்பளிக்கிறது. ஆனால் எல்லாவற்றிற்றிற்கும் மேலாகத் தனிமையில் நாம் இருக்கும்போது நாம் தனிமையில் இருக்கவில்லை என்பதை உணருகிறோம். தேவன் நம்மோடு இருக்கிறார்.

கடைசியாக இருக்கும் உறவுசார்ந்த ஒழுக்கமுறை *கீழ்ப்படிதலாக* இருக்கிறது. தேவனோடு கொண்டிருக்கும் உறவை மேம்படுத்தவும், மகிவும் அவசியமானதாகவும் இருப்பது கீழ்ப்படிதல். எபிரெயர் 12:9, ‘‘அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?’’ என்று நமக்கு நினைவுப்படுத்துகிறது.

எபிரெயர் 5:7, 8 வசனங்களில் ‘‘அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,’’ என்று நாம் நினைவுப்படுத்தப்படுகிறோம். இயேசு தம்முடைய சொந்த வார்த்தைகளின் மூலமாகக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறார்: ‘‘வானத்திலும் பூமியிலும் இருக்கும் எல்லா அதிகாரமும் இப்போது என்னுடையது. நீங்கள் எங்கு சென்றாலும், மக்களை என்னைப் பின்தொடருகிறவர்களாக்குங்கள். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தைக் கொண்டும், தங்களுக்குப் போதிக்கப்படும் அனைத்தையும் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாக இருக்கும்படியாகவும் கூறி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்’’ (மத்தேயு 28:18–20, என்னுடைய விளக்கம்).

‘‘கீழ்ப்படிதல்’’ என்ற வார்த்தை தவறான புரிதல் மற்றும் பயத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. இயேசுவிற்கு அடிமையாக இருக்கிறேன் என்று பவுல் சென்னதும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. ஆதியாகமத்தில் உறுதியாகக் கூறப்படுவதைப் போல இந்தக் கிரகத்தை உருவாக்கிய சர்வவல்லவராக தேவன் இருந்தால், சங்கீதக்காரன் உறுதியாகக் கூறுவதைப் போல, அவர் நம்மைப் பிரம்மிக்கத்தக்க

அதிசயமாக உருவாக்கியிருந்தால், தம்முடைய அன்பாக ஞானத்திற்குத் தம்முடைய சிருஷ்டிப்பு பதிலளிக்க வேண்டும் என்று சிருஷ்டிகருக்கு உரிமை இருந்தால், நாம் அவரோடு கொண்டிருக்கும் உறவின் விளைவாக இயற்கையாகவே நாம் அவருக்குக் கீழ்ப்படிதலோடு இருக்க வேண்டும் என்று முழுமனதோடு செயல்படுவது எப்படி எதிர்பாராத ஒன்றாக இருக்க முடியும்?

கீழ்ப்படிதலின் உண்மையான முகம் என்னவென்று இயேசுவானவரும் பவுலும் அறிந்திருந்தார்கள். அவர்கள் மிகவும் நெருக்கமாக அறிந்திருந்த ஒருவர்மீது அவர்கள் கொண்டிருந்த உறவு மற்றும் நம்பிக்கையை அடிப்படையாகவே அவர்களுடைய கீழ்ப்படிதல் இருந்தது.

தேவன் தம்மை நம்பும்படியாக நம்மை அழைக்கிறார். வேத வசனங்கள், அமைதி மற்றும் தனிமையின் ஒழுக்கமுறைகளைப் பின்பற்றுவது நம்பிக்கையை அதிகரிக்கும். சொல்லப்போனால் நாம் வேதாகமத்தில் கண்டுபிடித்திருக்கும் ஒருவர் மீது நம்பிக்கைக் கொள்வது இயற்கையாக வந்துவிடும். நம்முடைய வாழ்க்கையில் அவருடைய அழைப்பை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது தேவனுக்குக் கீழ்ப்படிதலே நமக்கு வரும்பதிலாக இருக்க வேண்டும் என்பதே நம்முடைய இலக்காகும். தேவனுடைய வார்த்தை நம்மிடத்தில் வரும்போது நாம் மனதார அதற்குக் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது மட்டுமல்லாமல் நம்முடைய உணர்வுபூர்வமான பதில் கீழ்ப்படிதலாகவே இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேவன் தம்முடைய வார்த்தையில் எதை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதன் சத்தியம் மற்றும் நம்பகத்தன்மையைக் குறித்து நம்பிக்கைப் பெறுவது என்பது நம்முடைய எண்ணங்களில் கீழ்ப்படிதலை எல்லாம் நடப்பதற்கு முன்பே ஏற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையிலும், அமைதியிலும், தனிமையிலும் அவர் கூறுவதைக் கேட்கக் கற்றுக்கொள்ளும்போது அவர் நம்முடைய இருதயத்தில் எதிர்பார்க்கும் கீழ்ப்படிதலோடு கூடிய பதிலின் வாய்ப்புகளை அதிகப்படுத்தும்.

நம்மைச் சுற்றியிருக்கும் உலகமும், நமக்குள் இருக்கும் மாமிசமும் சாத்தானாலும் அவனுடைய கூட்டாளிகளாலும் தூண்டிவிடப்பட்டு நாம் பரலோகப் பிதாவோடு கொண்டிருக்கும் உறவின் இரகசியத்திற்குள் நம்மை விடுவிக்காமல் தடுத்துவிடுவதற்குத் திட்டம் தீட்டும். ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்படிப்பட்ட ஆபத்தான முடிவை எடுக்கும்படியான மனதைப் பெற்றவர்களின் அழைப்பும் நம்மைத் தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும் என்பதாகவே இருந்திருக்கிறது.

## தொடக்கநிலை மதிப்பீடு 2: நம்முடைய கிருபையின் கதைகளைச் சொல்லுதல்

புதிய ஏற்பாட்டில் காணப்படும் இரண்டாவது தொடக்கநிலை மதிப்பீடு எபேசியர் 3:1–11 வசனங்களில் காணப்படுகிறது: நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்மைச் சுற்றியிருக்கும் மக்களிடம் நம்முடைய கிருபையின் கதைகளை வாழ்ந்துகாட்டியும் வாய்மொழியாகக் கூறுவதும். காலாகாலத்திற்கும், நித்தியமாகவும் திருச்சபையின் நோக்கம் எப்படியிருக்கவேண்டும் என்பதைக் குறித்த மிகவும் தெளிவான மற்றும் எளிமையான அறிவிப்பை நாம் பார்க்கிறோம்:

> பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக (எபேசியர் 3:8–10).

இந்த வேதாகமப் பகுதியின் முக்கியத்துவத்தைக் குறித்து இந்தப் புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் நாம் பார்த்தோம். நாம் அன்றாட வாழ்வில் வாழும் மக்களிடம் சுவிசேஷத்தின் செய்தியைத் தெரியப்படுத்தவேண்டும் என்பதே திருச்சபையின் நோக்கமாகும். இதை விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையில் தேவன் செய்த தனித்துவமான கிருபையின் கதையையோ அல்லது தனிப்பட்ட சாட்சியையோ கூறுவதின் மூலமாகச் செய்கிறார்கள்.

பவுலால் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டதைப் போல திருச்சபையின் நோக்கம் நித்திய பார்வையாளர்களுக்காக இந்தப் பூமியென்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்டது என்றால் ஒவ்வொரு நபரும்

அதில் பெற்றிருக்கும் பங்கைக் குறைத்துக் கூறிவிடமுடியாது. ஒவ்வொரு நபரின் கிருபையின் கதையை தேவனுடைய ஆவியானவர் வழிநடத்தும் எல்லா உறவுமுறைகளிலும் வெளிப்படுத்துவதிலிருந்து உள்ளூர் திருச்சபையின் செயல்பாடுகளின் மதிப்பை நாம் அளவீடு செய்ய முடியும். இது இரண்டாவது வழியாகும். இந்தத் தொடக்கநிலைக்குள் திருச்சபையின் பெரும்பாலான மக்கள் வரமாட்டார்கள் என்றால் அந்தத் திருச்சபைத் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் சரியாகச் செய்யவில்லை என்று அர்த்தம்.

## தொடக்கநிலை 3: நம்முடைய ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துதல்

தேவனுடைய ஆவியானவர் ஆவிக்குரிய வரங்களைக் கொடுப்பதில் சர்வவல்லமையுள்ளவராக இருந்தால், அந்த வரங்களைக் குறித்தும், அவைகளின் பயன்களைக் குறித்தும் மக்கள் புரிந்துகொள்ளாமல் இருந்தார்கள் என்றால் அவர்கள் இருக்கும் திருச்சபையானது அதற்குத் தேவனால் கொடுக்கப்பட்ட பணியைச் சரியாகச் செய்யவில்லை என்று அர்த்தம். இயேசுவானவர் செய்ய வேண்டும் என்று விரும்பும் ஊழியங்களில் தேவனுடைய மக்களின் மூலமாக யுக்திசார்ந்த வெளிப்பாடைக் கொடுக்கும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் இந்த வரங்களைப் பயன்படுத்துகிறார். திருச்சபையிலும் இந்த உலகத்திலும் பயன்படும்படியாக அனுப்பப்பட்டிருக்கும் மக்களில் எவராவது ஒருவர் தன்னுடைய முதிர்ச்சியை இழந்தாலும் கூடச் சிறப்பாகச் சிருஷ்டித்திருக்கும் தேவன் தம்முடைய மக்களுக்குக் கொண்டிருக்கும் வடிவமைப்பை இல்லாமல் செய்துவிடுவார்கள். எனவே நம்முடைய வீடுகளிலும், பணிபுரியும் இடங்களிலும் ஆவியின் வரங்களை வாழ்ந்து காண்பிப்பதே மூன்றாவது தொடக்கநிலை மதிப்பீடாகும்.

அதோடு ஆவியானவர் தனித்துவமான வழிகளில் இந்த வரங்களைக் கொண்டு நம்மில் கிரியைசெய்கிறார் என்று நாம் சொல்லும்போது அவை நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு நொடியும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று நாம் கூற முடியும். ஏனென்றால் நாம் இயேசுவின் மூலமாக தேவனோடு உறவை ஏற்படுத்தும் நொடியிலிருந்து நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம். இந்த வரங்கள் திருச்சபையின் *நிகழ்ச்சிகளைச்* சிறப்பாக நிகழ்த்துவதற்காகக் கொடுக்கப்படவில்லை. அவை தேவன் கொடுத்தத் திருச்சபையின் *நோக்கத்திற்காகப்* பயன்படுத்தப்படுகின்றன.

தேவனுடைய ஆற்றலானது கிறிஸ்துவின் மக்களிடத்தில் ஆவியானவர் கொடுக்கும் தனித்துவமான மற்றும் வல்லமையான வரங்களில் காணப்படுகிறது. இவர்கள் உலகம் முழுவதிலும் தங்களுக்குரிய இடங்களில் பரந்துவிரிந்து இருக்கிறார்கள். எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதோ, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதோ கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாது. இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தமானது அவருடைய மக்கள் அனைவருக்குள்ளும் இருப்பதால் நாம் வாழும் ஒவ்வொரு இடமும், நாம் பணிசெய்யும் இடமும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தில் நாம் ஒவ்வொருவரின் தனித்துவமான பகுதியைச் சாட்சியாக வாழ்ந்து காண்பிப்பதாகிறது. ஒவ்வொரு விசுவாசிக்கும் வழங்கப்பட்டிருக்கும், அவர்களால் செயல்படுத்தப்படும் இந்த ஆவியின் வரங்கள் ஆவியானவரின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன.

இது சில கிறிஸ்தவர்களுக்கு விசித்திரமான காரியமாக இருக்கலாம். ஆனால் ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படும் இந்தக் குறிப்பிட்ட காரியத்தைக் குறித்தப் புரிதல் குறைவாக இருப்பதால்தான் இப்படியிருக்கிறது. அப்படிப்பட்ட விசுவாசிகள் கிரியை செய்வதைக் குறித்த இறையியல் கோட்பாட்டோடு கொண்டிருந்த தொடர்பை விட்டுவிட்டவர்களாக இருக்கிறார்கள். அதன்படி நாம் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம், அவருடைய சிருஷ்டிப்பை அக்கறையோடு பார்த்துக்கொள்ளும்படியாக அவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருக்கிறோம், அதோடு நம்முடைய கரங்களில் அவர் கொடுக்கும் எல்லாவற்றிற்கும் நாம் உக்கிராணிகளாக இருக்கிறோம். அந்த விசுவாசிகள் நித்தியத்தோடு கொண்டிருக்கும் தொடர்பை இழந்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருப்பதின் முக்கியத்துவத்தையும், அவருடைய சொத்துக்களுக்கு உக்கிராணிகளாக இருப்பதின் முக்கியத்துவத்தையும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அவருடைய மகிமையையும், அவர் அவர்களுடைய வாழ்க்கையின் மையமாக இருப்பார் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தையும் முக்கியமாகக் கருதவில்லை. மற்ற கிறிஸ்தவர்களுக்காக அவர்களால் நடத்தப்படும் நிகழ்வுகளைச் செயல்படுத்துவதற்கான அவசியமான அதிகாரங்களாக இந்த வரங்கள் இருக்கின்றன என்ற திருச்சபையின் புரிதலை இவை எல்லாம் தள்ளிவிட்டுவிட்டன.

மிகவும் முக்கியமாக நம்முடைய சொந்த வாழ்க்கையில் இதன் காரணமாக தம்முடைய மக்களின் மூலமாக வெளிக்காட்டப்படும் தேவனுடைய சாயலானது குறைபாடுள்ளதாக இருக்கிறது.

## தொடக்கநிலை 4: ஆவியின் கனிகளைச் செயல்விளக்கமளித்தல்

நாம் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவிலும், இந்த உலகத்தோடு கொள்ளும் உறவிலும் ஆவியின் கனிகளை வெளிப்படுத்துவதே நான்காவது தொடக்கநிலை ஒழுக்கமதிப்பீடாக இருக்கிறது. இந்தத் தனிமனித பண்புகளைப் பவுல் கலாத்தியர் 5:22–23 வசனங்களில் பட்டியலிடுகிறார்: ‘‘ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.’’

தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய திருமணத்திலும், குடும்பங்களிலும், சபைகளிலும் ஆவியின் கனிகளில் வளரும்போது இயேசுவானவர் தம்முடைய மக்களில் ஜீவிக்கிறார் என்பதை இந்தப் பூமிக்கு வெளிப்படுத்தும் மிகவும் வல்லமையான சாட்சியாக இருக்கிறது. வேறு விதங்களில் பார்க்கும்போது புரியாத புதிராக இருக்கும் இந்தத் தனிமனித உறவுகளில் இவைகளின் வெளிப்பாடு வளரும்போது ஒவ்வொருவருக்குள்ளும் வாழும் தனித்துவமான வல்லமை செயல்விளக்கமளித்தலைப் போலாகிறது.

கிறிஸ்துவின் மக்களில் காணப்படும் இந்தக் கனிகளின் வெளிப்பாடும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தில் காணப்படுவதும் ஈர்க்கும் சக்தியைப் பெற்றிருக்கிறது. இதுவே யாக்கோபு கூறவரும் கருத்தாக இருக்கிறது: ‘‘ன’’ (யாக்கோபு 1:27). திருச்சபையின் வரலாறு முழுவதிலும் அது தன்னுடைய எஜமானரின் மறுஉருவமாகத் திகழ்ந்திருக்கும்போது இந்த உலகத்திற்கு ஒரு புதிராகவே தோன்றியிருக்கிறது. பாதுகாப்பில்லாதவர்களை இந்த உலகம் கவனிப்பதில்லை. ஆனால் திருச்சபையானது இந்த உலகத்தில் இருக்கும் அனைத்து மக்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வழிகளைத் தேடுகிறது. சொல்லப்போனால் திருச்சபையானது மக்களைக் குணமாக்குவதற்கு விடாமுயற்சியோடு செயல்படுகிறது. இந்த உலகத்தில் சுவிசேஷத்தின் பணிகளைச் செய்வதற்கு எல்லோரையும் ஈர்க்கும் அடித்தளங்களுள் ஒன்றாக இது இருக்கிறது.

கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக நம்மால் இந்த உலகத்தின் அமைப்புரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியும் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும்படியாக நான் பார்க்கவில்லை. மனிதர்களின் கொடூரமான அமைப்புகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் தனிப்பட்ட நபர்களைத் தொட்டு, சுகமாக்கி அவர்களைக் காப்பாற்றுவது நம்முடைய கடமை என்பது தெளிவாகத் தெரிகிறது. திருச்சபை அப்படிப்பட்ட வல்லமையைப் பெற்றிருக்கிறது. பிரதான கட்டளையைச் செயல்படுத்தும்படியாக உள்ளூர் திருச்சபைகள் ஆனாதை விடுதிகளையும், போதை மறுவாழ்வு மையங்களையும், உணவளிக்கும் திட்டங்களையும் செயல்படுத்துவது ஆச்சரியமான காரியம் ஒன்றும் கிடையாது.

உள்ளூர் திருச்சபைகள் தங்களுடைய மக்களின் ஆவிக்குரிய தனிநபர் வளர்ச்சியை அளந்துபார்த்து அதற்காகப் பரிந்து செயல்பட வேண்டும். அந்த மக்கள் பரலோகத்தின் அழைப்பைக் கொஞ்சங்கூடச் செய்யாமல் பரலோகத்திற்குச் செல்லும் வழியில் இருப்பதாகக் கூறும் மக்களின் வலைகளில் விழுந்துவிடாமல் பார்க்க வேண்டும். இதைச் செய்யும் மனதுள்ள உள்ளூர் திருச்சபைக்கு இது கடினமான காரியமில்லை. அதிலும் குறிப்பாக ஏதாவது ஒருவகையில் சிறு–குழு ஊழியத்தைப் பெற்று அதனுடைய பெரும்பாலான மக்கள் அதில் ஈடுபாடு கொண்டிருக்கும் திருச்சபைக்கு இது எளிதாகும். இப்படி மக்களின் மீது கவனம் செலுத்தும் சூழ்நிலையில் திருச்சபைக்குள் இருக்கும் உறவுகளில் ஆவியின் கனிகளை எதிர்பார்க்க முடியும். நகரங்கள் மற்றும் தங்களுடைய சபையைச் சுற்றியுள்ள இடங்களின் தேவைகளையும் சிந்தித்துத் திருச்சபைகள் பரிந்துசெயல்பட வேண்டும். தங்களுடைய இடத்தில் இருக்கும் ஒவ்வொரு சிறு குழுவிற்கும் திருச்சபையின் மக்கள் ஊழியம் செய்ய வேண்டும். இது நிகழாமல் இருக்கும்போது ஏதோ மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்று அர்த்தம்.

## தொடக்கநிலை 5: நம்முடைய வாழ்க்கையில் உக்கிராணத்துவம்

ஐந்தாம் தொடக்கநிலையாக நம்முடைய வாழ்க்கையில், உறவுகளில், பூமியில் தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காகத் தேவைப்படும் உதவிக்கூறுகளில் உக்கிராணத்துவத்தோடு நடந்துகொள்வது காணப்படுகிறது. முதல் தொடக்கநிலையைப் போலவே இதற்கும் விரிவான விளக்கம் தேவைப்படுகிறது. இதை நாம் அத்தியாயம் 4இல் பார்க்கலாம்.

# 4

# நம்முடைய வாழ்க்கையில் உக்கிராணத்துவம்

முதல் நான்கு தொடக்கநிலை மதீப்பீடுகளான தேவனோடு நெருக்கத்தை வளர்த்தல், நம்முடைய கிருபையின் கதைகளைச் சொல்லுதல், நம்முடைய ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்துதல் மற்றும் ஆவியின் கனிகளின் செயல்விளக்கங்களை அளித்தல் போன்றவையின் முழு விளக்கத்தையும் நாம் ஆராய்ந்து பார்த்துவிட்டோம். இப்போது நாம் ஐந்தாவதாக இருக்கும் நம்முடைய வாழ்க்கையில் உக்கிராணத்துவம் என்பதைப் பார்ப்போம். அதாவது தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்தில் முழு இணக்கத்தோடு பங்குபெறும் வகையில் நம்முடைய வாழ்க்கையை நடத்துதல். பணம், தூய்மையான நிலை, திருமணம், குடும்பம், நண்பர்கள், திருச்சபையின் சரீரம் மற்றும் பணிசெய்யும் இடங்கள் போன்றவைகளில் மக்கள் எடுக்கும் தனிப்பட்ட முடிவுகளில் மக்களுடைய விசுவாசத்தின் தாக்கம் எப்படியிருக்கிறது என்பதைத் திருச்சபை அளவீடு செய்யும் கடைசி வழியாக இது இருக்கிறது. இதை நாம் வாழ்க்கையில் உக்கிராணத்துவம் என்று அழைக்கலாம். ஏனென்றால் நம்முடைய நேரம், பணம் மற்றும் எதிர்பார்ப்புகளில் நாம் என்ன செய்கிறோம் என்பதை இது முடிவு செய்கிறது.

மத்தேயு 6:24 வசனத்தில் இயேசுவானவர், ‘‘தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது’’ என்று கூறுகிறார். இயேசு இந்த இடத்தில் பணத்தைக் குறித்துக் கூறினாலும் இந்தக் கொள்கையானது வாழ்க்கையின் எல்லாவற்றிற்கும் பொருத்தமாக இருக்கும்: இயேசுவோடு மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் நாம் சென்று மரணத்திலிருந்து ஜீவனைப் பெற்றபிறகு தேவன் நமக்குள் பொருத்தும் புதிய இருதயமானது தேவனையே மையமாகக் கொண்டு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஒருவருடைய இருதயத்தில் பணமோ அல்லது வேறு எந்தப் பொருளோ பிரதான இடத்தை எடுத்துக்கொள்ளும்போது தேவன் அந்த வாழ்க்கையில் இருக்கமாட்டார். மனிதனுடைய பேராசை வெளிவருவதற்கான எல்லா வழிகளும் சாத்தியமாகும். இதைக் குறித்து மத்தேயு 6:23 வசனத்தில் இயேசு, ‘‘உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்’’ என்று கூறியிருக்கிறார். மக்கள் தங்களுடைய மதரீதியான செயல்பாடுகளிலும், இரக்கத்தோடு செய்யும் செயல்களிலும் தேவனைக் குறித்தக் கவனத்தோடு செயல்படுவதைப் போன்று தெரிந்தாலும், அவர்களுடைய இருதயத்தைப் பணம் ஆளுகை செய்தால், அவர்களுக்குள் மறுரூபமாக்கப்படுதல் நிகழவில்லை என்றுதான் அர்த்தம்.

மறுரூபமாக்கப்பட்ட இருதயத்தில், தேவன் ஒரே ஒருவர் மட்டும் குடியிருக்கும்படியாக வடிவமைத்திருக்கிறார்: அந்த நபர் அவர்தான். இந்த நிலையிலிருந்து நாம் நம்முடைய வாழ்க்கையில் உக்கிராணத்துவம் என்பது இந்தப் பூமியில் எப்படியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மத்தேயு 6:19–34 வசனங்களில் நம்முடைய சிந்தனைகளை உலகப்பிரகாரமான காரியங்கள் ஆட்கொள்ளும்படியாக ஏன் விடக்கூடாது என்று இயேசு கூறியிருக்கிறார்.

முதலாவது, அவை அழிந்துபோய்விடும் அல்லது மறைந்துபோய்விடும்: ‘‘பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்’’ (மத்தேயு 6:19). புதியதாக வந்திருக்கும் கார்கள், துணிமணிகள் மற்றும் பிற புதிய பொருட்கள் பழையவைகளாகிவிடும். கடந்த காலங்களில் நான் பரிபூரணவாதத்தைப் பெற்றுக்கொண்டு வாழ்ந்தேன். நான் வாங்கிய ஒன்று பழையதானாலோ, அழுக்கானாலோ அல்லது நன்கு பயன்படுத்தப்பட்டதைப் போலத் தெரிந்தாலோ நான் விரக்தியடைந்ததுண்டு. ஒரு முறை நான் மிகுந்த மதிப்பாக வைத்திருந்த ஒரு பொருள் என்னிடமிருந்து திருடப்பட்டது. இழப்பின் உணர்ச்சி மிகவும் அதிகமாக என்னிடம் இருந்தது. இயேசுவானவர் கூறுவது சரிதான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் ஆனால் நித்தியம் வரையில் இருக்கமுடியாத மதிப்புமிக்க பொருட்களை நாம் விரும்பும்படியாக நம்மைச் சுற்றியிருக்கும் கலாச்சாரத்தினால் நாம் தாக்கத்தைப் பெற்று சில நேரங்களில் மயக்கப்படுகிறோம்.

இரண்டாவதாக, நாம் ‘‘பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்’’ என்று இயேசு சொல்லுகிறார் (மத்தேயு 6:20). நாம் நமக்கு மிகவும் பிடித்தமானதாக வைத்திருக்கும் பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கக்கூடிய ஒரே இடம் அதுதான். இயேசு இங்கு வெளியரங்கமான பொருட்களைக் குறித்து

மட்டும் பேசவில்லை. அவர் உள்ளரங்கமான காரியங்களான அர்த்தம், முக்கியத்துவம் மற்றும் நிறைவைக் குறித்தும் பேசுகிறார்.

மூன்றாவதாக, நம்முடைய இருதயத்தில் ஆதிக்கம் செய்யும் ஒன்று நம்மைச் சொந்தமாகக் கொண்டிருக்கிறது: ‘‘உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்’’ (மத்தேயு 6:21). பல பொருட்களை மோசம் என்று நாம் சொல்ல முடியாது ஆனால் அவை நம்முடைய இருதயத்திலும் நாம் செய்யும் செயலிலும் கொண்டிருக்கும் தாக்கம் சந்தேகத்தை ஏற்படுத்தும் விதத்தில் இருக்கும். தேவனுடைய மதிப்பீடுகளுக்கு எதிர்மறையானதாக இருக்கும் நம்முடைய கலாச்சாரத்தின் மதிப்பீடுகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் இருதயமானது கண்களைக் கைப்பற்றி இருதயத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. மெய்யான வாழ்க்கையில் இருக்கும் மெய்யான மதிப்பீடுகளுக்குப் பதிலாகப் போலியான, மேலோட்டமான மற்றும் ஆபத்தான மனோபாவங்களும் செயல்களும் இடத்தைப் பிடிக்கும்.

நான்காவதாக நம்முடைய இருதயம் கவனத்தைப் பெறவில்லையென்றால் நாம் பார்க்கக்கூடியத் திறன் பாதிக்கப்படுகிறது ஏனென்றால் ‘‘கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது’’ (மத்தேயு 6:22). மேகங்களால் சூழப்பட்டு எந்தத் தெளிவும் இல்லாத இருதயம் தேவன் நினைத்திருக்கும் வழியில் பொருட்களைப் பார்க்க முடியாமல் கடினப்படுகிறது. தேவன் நினைத்திருக்கும் வழி மெய்யான இளைப்பாறுதலையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கும். இப்படிப்பட்ட மேகம் சூழ்ந்த இருதயம் இருளை ஏற்படுத்தும். நிறைவாக எல்லாவற்றையும் பெற்றிருக்கும்போதும் கூட அந்த இருதயம் வருத்தத்தையும், சந்தேகத்தையும், மனஅழுத்தத்தையும் அனுபவிக்கத் துவங்கும்.

ஐந்தாவதாக, நாம் இரண்டு எதிர்மறையான காரியங்களுக்கு ஊழியம் செய்ய முடியாது: ‘‘இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்’’ (மத்தேயு 6:24). தேவனுடைய புதிய சிருஷ்டிப்பில் ஒரே ஒருவர் மட்டுமே குடியிருக்க முடியும்: தேவன் ஒருவரே. மீட்கப்படாத மனிதன் இதை எதிர்மறையான காரியமாகப் பார்க்கிறான். ஆனால் தேவன் இதை ஒரு எச்சரிக்கையாகக் கொடுக்கவில்லை, ஒரு வாக்குத்தத்தமாகக் கொடுக்கிறார்.

கடைசியாக நம்மைச் சுற்றியிருக்கும் கலாச்சாரத்தின் கட்டளைகளை நிராகரித்துத் தேவனுடைய வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்து நம்முடைய செல்வங்களை அவருடைய பொறுப்பில் விட்டப்பிறகும் கூட நாம் கவலையினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தேவன் நமக்கு உதவி செய்வார் என்று இயேசு வாக்களிக்கிறார்: ‘‘ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்’’ (மத்தேயு 6:31–32). அவர் பறவைகளுக்கு உணவளித்து, நிலத்தின் தேவைகளைச் சந்திக்கமுடியும் என்றால், அவரால் நம்முடைய தேவைகளையும் சந்திக்கமுடியும். நம்மால் காண முடியாத ஒருவரை நம்பும்படியாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நம்மால் காணமுடிந்ததை நாம் அதிகமான மதிப்போடு வைத்து, அவரைக் குறித்துச் சிந்திக்காமல் இருக்கும்போது நமக்குக் கவலை ஏற்படுகிறது. நாம் பிதா என்று அழைக்கும் ஒருவரோடு போதுமான நேரத்தைச் செலவிடவில்லை என்று இதற்கு அர்த்தம்.

## தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்

நாம் கவலைப்படக்கூடாது என்று இயேசுவானவர் போதிக்கும்போதே அதைச் சுகமாக்கும் காரியத்தையும் சொல்லிவிடுகிறார்: முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33). ஆம், நாம் இந்த உலகத்தில் வாழும்போது நமக்குப் பணமும் பிற சரீரப்பிரகாரமான தேவைகளைச் சார்ந்த பொருட்களும் நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது நம்முடைய பணத்தையும், பொருட்களையும் சிறப்பான வழியில் வழிநடத்த முடியும். நாம் இதை எப்படிச் செய்வது?

நாம் நம்மைச் சுற்றியிருக்கும் கலாச்சாரத்தோடு முரண்பட்டு வாழ வேண்டும். அப்படியானால் நாம் இந்தக் கலாச்சாரத்தில் தான் இருக்க வேண்டும். இருந்து அதில் ஆக்கப்பூர்வமான கருவிகளை உட்புகுத்தவேண்டும். ஆனால் நம்முடைய கலாச்சாரம் நமக்குள் இருக்கும் இயேசுவின் வாழ்வை வளர்ப்பதே

கிடையாது. ஒரு சமநிலையைத் தொடர்ச்சியாகப் பெறுவது என்பது எளிதான காரியம் கிடையாது.

இந்த இறுக்கமான நிலையைக் குறித்துப் பவுல் நன்றாக அறிந்திருந்தார். தேவனுடைய ராஜ்யத்தில் நாம் முதலீடு செய்துகொண்டிருக்கும்போதே எப்படி இந்த உலகத்தின் பொக்கிஷங்களைக் கையாள வேண்டும் என்று தீமோத்தேயுவிற்கு ஆலோசனை வழங்கினார்.

> இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு (1 தீமோத்தேயு 6:17–19).

மூன்று பொய்களை வெளிப்படுத்துவதின் மூலமாகப் பவுல் இங்குச் செல்வத்தின் ஆபத்துக்களை எடுத்துரைக்கிறார். ‘‘செல்வத்தின் மறைக்கப்பட்ட ஆபத்துக்களைக் கவனமாகக் கண்டுகொள்ளுங்கள். அதற்குப் பதிலாகத் தேவனுடைய ராஜ்யத்தில் உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள்’’ என்று கூறுகிறார்.

முதலாவது அவர் தீமோத்தேயுவிடம், ‘‘கர்வம் கொள்ளாமல் இருக்கும்படி அவர்களுக்குச் சொல்’’ என்கிறார். விளம்பரங்களில் எல்லா வடிவங்களினாலும் இந்த உலகப்பார்வையானது விற்கப்படுகிறது. இதன் காரணமாக மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த மக்கள் நிறைவை எதிர்பார்க்கும் நுகர்வோராகிவிட்டார்கள். நாம் செல்வத்தைப்பெறத் தகுதியானவர்களாக இருக்கிறோம் என்று நமக்குக் கூறும் பொய்யின் மறைக்கப்பட்ட நிலைக்கு ஏற்றவாறு நம்முடைய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன.

இரண்டாவதாக, ‘‘ஐசுவரியத்தின் நிலையற்றத் தன்மையின் மேல் தங்களுடைய நம்பிக்கையை’’ விசுவாசிகள் வைக்கக்கூடாது என்றுத் தீமோத்தேயுவிற்குப் பவுல் எச்சரிக்கையளிக்கிறார். ஏனென்றால் செல்வம் என்பது பார்ப்பதற்கு நிலையானதாக இருந்தாலும் அது நிலையற்றதாக இருக்கிறது. ‘‘முப்பது வருட கடன்,’’ ‘‘வாழ்நாள் உத்திரவாதம்’’ மற்றும் ‘‘இந்தப் பொருள் நிலைத்திருக்கும்’’ போன்ற வாக்கியங்கள் இரண்டாவதாக ஒரு பொய்யை மக்கள் நம்பும்படியாக அவர்களை மயக்குவதற்குச் சொல்லப்படுபவையாக இருக்கின்றன. எதுவுமே ‘‘நிலைத்திருக்கும்படி கட்டப்படுவதில்லை.’’

கடைசியாக, விசுவாசிகள் தங்களுடைய நம்பிக்கையைத் ‘‘தேவன் மீது’’ வைக்கும்படியாகப் பவுல் உற்சாகமளிக்கிறார். ஏனென்றால் உலகப்பிரகாரமான செல்வம் நித்திய நம்பிக்கைக்கு மாற்றாக இருக்க முடியாது. மனித வாழ்வின் ஆழமான இடைவெளிகளில் இருக்கும் தேவனுடைய இடத்தை வேறு ஒன்று எடுத்துக்கொள்ள முடியும் என்று கூறுவதே இந்தப் பொய்களில் மிகவும் ஆபத்தை ஏற்படுத்தும் பொய்யாக இருக்கிறது.

இந்த உலகப்பிரகாரமான பார்வையின் ஈர்ப்பை நாம் எப்படி எதிர்ப்பது? பவுல் தீமேத்தேயுவிற்குப் பதிலைக் கொடுக்கிறார்: நாம் தேவனுடைய வரங்களை அரவணைத்துக் கொண்டு அவைகளை அனுபவிக்க வேண்டும் ஏனென்றால் ‘‘நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள’’ தேவனாக அவர் இருக்கிறார்.

நம்முடைய வீழ்ந்துபோன கலாச்சாரம் கொடுக்கும் ஆலோசனையின் அடிப்படியில் இந்த வாக்குத்தத்தத்தை நாம் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்காக ‘‘நன்மை செய்யும்படியாக’’ நாம் அவைகளைப் பயன்படுத்தி அனுபவிக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். நன்மை செய்தல் என்றால் என்ன? 1 தீமோத்தேயு 5:10 வசனத்தில் பவுல் மிகவும் சிறப்பான விளக்கத்தைக் கொடுக்கிறார்: ‘‘பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக்கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து’’ என்கிறார். இந்தச் செயல்கள் ஏன் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன? மத்தேயு 5:16 வசனத்தில் இயேசு கூறியிருப்பதைப் போல அவை புரிந்துகொள்ளத் தகும் வல்லமையான விசுவாசத்தை எடுத்துக்காண்பிக்கின்றன. இதைக் கண்டு மக்கள் சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

> இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

நன்மை செய்வதற்கு மூன்று வழிகள் இருப்பதாகப் பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறார்.

முதலாவது, நாம் "நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்" இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், நம்முடைய சொத்துக்களை மற்றவர்களுடைய பலனுக்காகப் பயன்படுத்துவது. நாம் பெற்றிருக்கும் எல்லாவற்றையும் மற்றவர்களுடைய நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, நாம் நம்முடையவைகளைக் கொடுத்து தேவனுடைய ராஜ்யத்தில் ஐசுவரியத்தைச் சேர்த்துவைக்க வேண்டும் – நாம் "தாராளமாய்க் கொடுக்கிறவர்களும்" ஆக இருக்க வேண்டும். பவுலுக்கு இயேசுவின் வார்த்தைகள் இன்னும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் ஏனென்றால் அதை அவர் அப்போஸ்தலர் 20:35 வசனத்தில் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கிறார்: "இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்."

கடைசியாக, நம்முடைய சொத்துக்களைக் கொண்டு "நன்மை செய்வதில்" மிகவும் கடினமான பகுதி அதைப் பகிர்ந்துகொடுப்பதுதான். நாம் ஒரு காரியத்தின் மீது உக்கிராணிகளாக இருக்கும்போது மற்றவர்களும் அதை அனுபவிக்கும்படியாக மனமகிழ்ச்சியோடு கூடிய மனோபாவத்தைப் பெற வேண்டும். அந்த நபர் அதை எப்படிப் பயன்படுத்துகிறார் என்பதில் நாம் எந்த அதிகாரத்தையும் காண்பிக்கக்கூடாது. அவர் அதை அழுக்காக்கலாம், சேதப்படுத்தலாம் ஏன் உடைக்கக்கூடச் செய்யலாம்.

இரண்டு முடிவுகளைக் கொடுத்துப் பவுல் தன்னுடைய சவாலைத் தீமோத்தேயுவிற்குக் கொடுக்கிறார். நாம் நம்முடைய மெய்யான வீட்டில் நம்முடைய ஐசுவரியத்தைச் சேர்க்க வேண்டும், "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1 தீமோத்தேயு 6:19). நாம் மெய்யான வீட்டில் கவனம் செலுத்த வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தில் தங்களுடைய ஐசுவரியத்தைச் சேர்க்கும் மனோபாவம் கிறிஸ்துவின் மக்களிடத்தில் காணப்படும்போது கிறிஸ்துவின் மக்களின் வல்லமை இந்த உலகத்தால் அதிகமாக உணரப்படுகிறது. நாம் எப்படி வாழ்கிறோம் என்பது தேவனுடைய ஆவியானவரின் கைகளில் கிடைக்கும் வல்லமையான மீட்பின் ஆயுதமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஒருவர் பெற்றிருக்கும் பொருளைக் கொண்டு தான் முக்கியத்துவம் என்ற இன்றைய கலாச்சாரத்தில் இது மிகவும் முக்கியமாக இருக்கிறது.

## தேவனுடைய நீதியைத் தேடுங்கள்

நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவைக் குறித்துப் பேசும்போது நாம் புதிய வாழ்விற்குள் மறுபடியும் பிறக்கிறோம். தேவன் நம்மில் பரிசுத்த ஆவியானவரின் மூலமாகத் தங்கிவிடுகிறார். இந்தப் புதிய வாழ்க்கையின் மூலமாகத் தான் நாம் இந்த உலகத்தில் இருக்கும்போது தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தோடு ஒன்றி வாழ முடியும்: தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுவதில்லை, அவருடைய நீதியையும் தேடுவது. புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யமும், அவருடைய நீதியும் பிரித்துப்பார்க்க முடியாத அளவில் ஒன்றிப்போய் காணப்படுகின்றன.

மெய்யான நீதி எப்படியிருக்கும் என்பதை இயேசுவானவர் மத்தேயு 6:1 வசனத்தில் விளக்குகிறார்: "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;" நாம் செய்யும் காரியங்கள் தேவனுடைய கண்களுக்காக மட்டுமே செய்ய வேண்டும். மறுபடியும் பிறக்காத இருதயத்திலிருந்து வரும் வேறு எதுவும் மற்றவர்களால் கவனிக்கப்படுகிறது என்ற பலனை மட்டுமே பெறும். இந்த மெய்யான நீதி நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை எப்படி உக்கிராணத்துவப்படுத்துகிறோம் என்பதைப் பல வழிகளில் ஆளுகை செய்கிறது.

முதலாவது, நாம் கொடுக்கும்போது (பார்க்க, மத்தேயு 6:2–4), தேவன் நமக்கு எவ்வளவு கொடுக்கச் சொல்கிறாரோ, யாருக்குக் கொடுக்கச் சொல்கிறாரோ அப்படிக் கொடுக்க வேண்டும். மற்றவர்களின் தேவைகளைத் தேவன் அறிந்திருக்கிறார். இன்று, நாளை மற்றும் அதன்பிறகு வரும் ஒவ்வொரு நாளும் நமக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம் அவரோடு தொடர்ச்சியான உறவைக் கொண்டிருந்தோமானால், அவர் நமக்குக் கொடுத்திருக்கும் ஐசுவரியத்தைக் கொடுப்பதில் கீழ்ப்படிதலோடு இருந்தோமானால், அவைகளை எங்குக் கொடுக்க வேண்டும், எங்கு வைக்க வேண்டும் என்று நமக்கு உண்மையுள்ளவராக வழிநடத்துவார். சொல்லப்போனால், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்கீழ் நாம் செய்யும்போது நம்முடைய வலது கரம் செய்த காரியத்தை நம்முடைய இடது கரம் அறியாதவகையில்

அந்தச் செயல்கள் மிகவும் இயற்கையாகவே நிகழும்படி மாறிவிடும். வேறு வழியில் கூறவேண்டுமானால், கொடுப்பது என்பது நாம் தன்னிச்சையாகச் செய்யும் ஒரு காரியமாக நம்முடைய வாழ்க்கையில் மாறிவிடும்.

இரண்டாவதாக, நாம் ஜெபிக்கும்போது (பார்க்க, மத்தேயு 6:5–15) நாம் தேவனோடு பேசுவதைப் போலவே ஜெபிக்க வேண்டும். பார்த்துக்கொண்டிருப்பவர்களாக மட்டுமே ஜெபம் செய்யப்பட்டது என்றால் அது பாசாங்குத்தனமானதாக இருக்கிறது. மெய்யான ஜெபம் என்பது மிகவும் நெருக்கமானதாக இருக்கும். தேவன் ஏற்கெனவே நம்முடைய தேவைகளை அறிந்திருந்தாலும், நாம் கூறுவதைக் கேட்கிறார் என்பதை அறிந்து ஜெபிப்பதே மெய்யான ஜெபமாக இருக்கிறது.

இயேசுவின் மாதிரி ஜெபம் நம்மைப் பின்பவரும் காரியங்களுக்காக ஜெபிக்கக் கூறுகிறது.

- தேவனுடைய சர்வவல்லமையுள்ள நிலையை ஒப்புக்கொள்ளுதல்.
- அவருடைய நாமத்தைத் தனியாக வைத்து அவருடைய சர்வவல்லமைக்குக் கீழ்ப்படிதல்.
- அவருடைய ராஜ்யத்தை விரும்புதல்.
- அவருடைய சித்தத்தை விரும்புதல்.
- அவர் தினமும் நம்மைக் காத்துக்கொள்வதின் தேவையை ஒப்புக்கொள்ளுதல்.
- தினமும் மன்னிப்பைத் தேட வேண்டும்.
- தினமும் மன்னிப்பைக் கொடுக்க வேண்டும்.
- சோதனைகளிலிருந்து பாதுகாப்பைத் தேட வேண்டும்.
- தீயவனிடத்திலிருந்து பாதுகாப்பைத் தேட வேண்டும்.

வாழ்க்கை முறையாக மன்னிப்பு இருக்க வேண்டும் என்பதை அழுத்தமாகக் கூறவேண்டும் என்பதற்காக இயேசு அதை இரண்டு முறை கூறுகிறார். அதுவே முக்கியமானதாக இருக்கிறது ஏனென்றால் அது நம்முடைய பரலோகப் பிதாவின் இருதயத்தை நம்மில் வெளிப்படுத்துகிறது.

மூன்றாவதாக, நாம் உபவாசிக்கும்போது (பார்க்க, மத்தேயு 6:16–18), நாம் உபவாசம் செய்வதைப் போலல்லாமல் அதைச் செய்ய வேண்டும். வெளியில் தெரியக் கூடாது. பாசாங்கு செய்பவர்களின் உபவாசத்தை எல்லோராலும் பார்க்க முடியும். ஆனால் மெய்யான உபவாசமானது ஆரோக்கியமான முன்னிலையைக் காத்துக்கொள்கிறது. அது பரலோகப் பிதாவின் மீது கவனம் செலுத்துகிறது. அதற்குப் பரலோகப் பிதா பலனளிக்கிறார்.

கடைசியாக, மற்றவர்களை நியாயந்தீர்க்கும் பொறுப்பை நாம் தேவனிடத்தில் கொடுக்க வேண்டும் (பார்க்க, மத்தேயு 7:1–6). நாம் நம்மை நீதிபதிகளாக நினைத்தோமானால் நம்முடைய மதிப்பீடுகளின் அடிப்படையில் தேவன் நம்மை மதிப்பீடுவார். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் முன்பு நமக்கு எல்லாம் தெளிவாகத் தெரிய வேண்டும். நாம் தேவனுக்கு முன்பாக மட்டும் நம்முடைய நற்கிரியைகளைச் செய்யும்போது, நாம் அவருடைய நீதியைத் தேடுகிறோம்.

## தேவனுடைய நீதியே நம்முடைய மதிப்பளவாக இருக்கிறது

மலைப்பிரசங்கத்தில் இயேசு கூறியிருப்பதை வாசிக்கும்போது நாம் ஒரு பிரச்சினையைப் பெற்றிருக்கிறோம் என்பதை உடனடியாகக் கண்டுபிடிக்க முடிகிறது: நம்முடைய வாழ்க்கையை இந்த உலகத்தில் உக்கிராணத்துவத்தோடு நடத்துவதைக் குறித்து இயேசுவின் வார்த்தைகள் ஒழுக்கரீதியான விதிகளைக் கொடுத்தாலும் அவைகள் கடுமையானதாக இருப்பதால் நமக்கு அதை வாழ்ந்துகாண்பிப்பது செய்யமுடியாத காரியமாக இருக்கிறது. இயேசு இந்த இடத்தில் உயர்வுநவிற்சி அணியைப் பயன்படுத்துகிறார் அல்லது நாம் முதலில் அவருடைய ராஜ்யத்தையும், பிறகு அவருடைய நீதியையும் தேட வேண்டும் என்று மெய்யாகவே கூறுகிறார். இயேசுவின் வார்த்தைகளின்படி வாழ்வதில் காணப்படும் கஷ்டத்தை நாம் மத்தேயு 5:19–20 வசனங்களில் பார்க்க முடியும்:

ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய்

மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆனால் செய்யமுடியாத கட்டளையை நமக்குக் கொடுக்க வேண்டும் என்று தான் இயேசு செய்ய விரும்பினார். மனிதர்களுடைய மதரீதியான முயற்சிகள் ஆதாம் மற்றும் ஏவாளுக்கும் அவர்களுடைய பிள்ளைகள் எல்லோருக்கும் தேவன் வடிவமைத்த வாழ்க்கையை வாழ்வதற்குப் போதுமானதாக இருக்காது என்பதை அவர் தெளிவுப்படுத்த விரும்பினார். மலைப்பிரசங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்க்கையின் விளக்கம் தேவன் ஆதியில் வடிவமைத்த வாழ்க்கையாக இருக்கிறது. அது பாவத்தால் அழுக்குப்பட்டதாக இருக்கவில்லை. ஒருநாள் தேவன் அதை மறுபடியுமாக ஆதிநிலைக்குச் சீரமைப்பார்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் வார்த்தைகளின் சவாலுக்கு மத்தேயு 5:48 வசனம் நமக்குப் பதில் கொடுக்கிறது. இந்த வசனத்தில் மலைப்பிரசங்கத்தின்படி நம்முடைய வாழ்க்கையை வழிநடத்துவதற்குத் தேவையான ஒன்றை இயேசு கொடுக்கிறார்: "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." பலர் இந்த வார்த்தையை ஒரு சவாலாகவோ, ஏன் ஒரு மிரட்டல் என்றோ பார்ப்பார்கள். ஆனால் இந்த வார்த்தைகள் தேவன் வடிவமைத்த வாழ்க்கையை வாழ்வதற்கான திறவுகோலாக இருக்கின்றன.

பிதாவானவரைப் போல நாம் இருக்க வேண்டும் என்ற கட்டளையின் மூலமாக நாம் பிதாவானவரிடத்திலிருந்து எதையோ நமக்குப் பெற்றிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளலாம். இயேசுவில் நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கு முன்பு நாம் நம்முடைய உலகத் தகப்பனாகிய ஆதாமினுடைய பண்பையே பெற்றிருந்தோம். அந்தப் பண்பு தேவனுடைய சாயலில் இருந்தாலும் பாவத்தினால் உருக்குலைக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டிருந்தது. அது தேவன் வடிவமைத்தப்படி இருக்கவில்லை. நாம் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு நம்மைச் சேர்த்துக்கொண்டு மறுபடியும் பிறக்கும்போது நம்முடைய உயிரின் மையப்பகுதியில் புதிய விதையைப் பெறுகிறோம் – நம்முடைய பரலோகப் பிதாவின் விதை – யோவான் இதைக் குறித்து நமக்கு 1 யோவான் 3:9 வசனத்தில் கூறுகிறார், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், எனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்."

மத்தேயு 6ஆம் அதிகாரத்திலும், 7ஆம் அதிகாரத்தின் முதல் பகுதியிலும் நாம் தேவனோடு பெறும் புதிய வாழ்க்கை எப்படியிருக்கும் என்று இயேசு கூறுகிறார்: கொடுத்தல், ஜெபித்தல், உபவாசித்தல், சரியாக நியாயந்தீர்த்தல். இப்போது மத்தேயு 5:1–48 வசனங்களில் நாம் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று தேவன் ஆதியில் வடிவமைத்ததை நாம் பார்ப்போம். நம்மில் வாழும் பரிசுத்த ஆவியானவரோடு ஒத்துப்போய் நாம் வாழ வேண்டும். இறுதித் தீர்ப்பிற்குப் பிறகு இந்தப் பூமியில் இருக்கும் வாழ்க்கை அப்படித்தான் இருக்கும். தேவனுடைய ராஜ்யத்தை இன்னும் அதிகப்படுத்தும்படியாக நாம் நம்முடைய வாழ்க்கையை எப்படி வழிநடத்த வேண்டும் என்பதை மிகவும் தெளிவாக இந்த வேதாகமப் பகுதி நமக்குக் காண்பிக்கிறது. திருச்சபையானது தேவன் அதற்குக் கொண்டிருக்கும் நோக்கத்தின்படி வாழ்கிறதா என்பதை அளவீடு செய்யும் ஐந்தாவது தொடக்கநிலை மதிப்பீடாக இது இருக்கிறது.

நாம் மத்தேயு 5:1–12 வசனங்களில் துவங்குகிறோம். அங்கு நாம் நம்மைச் சுற்றியிருப்பதைக் காட்டிலும் வேறுபட்ட விதத்திலேயே வாழ்க்கையைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்ட சிந்தனையுடையவர்களாகத் தேவனுடைய மக்கள் வகைப்படுத்தப்படுகிறார்கள்:

- அவர்கள் தங்களுடைய தேவையை அறிந்திருக்கிறார்கள் (ஆவியில் எளிமையானவர்கள்).
- அவர்கள் தாங்கள் "தொலைந்துபோயிருப்பதைக்" குறித்துத் துக்கப்படுகிறார்கள்.
- அவர்கள் தேவனுக்கு முன்பாக அமைதியாக இருக்கிறார்கள் (எளிமை).
- அவர்கள் முழுமையாக்கப்படும்படியான வாஞ்சையைக் கொண்டிருக்கிறார்கள் (நீதிக்காக).
- அவர்கள் இரக்கத்தைக் கொடுக்கிறார்கள்.

- அவர்கள் தூய்மையான நோக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள் (இருதயத்தில் தூய்மையுள்ளவர்கள்)

- அவர்கள் சமாதானத்தை ஊக்குவிக்கிறார்கள் (சமாதானம் செய்பவர்கள்)

- அவர்கள் முழுமையாக இருப்பதற்காகக் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் (நீதிக்காகப் பாடுபடுத்தப்படுகிறார்கள்)

- அவர்கள் இயேசுவின் மேல் மெய்யான விசுவாசத்தைக் கொண்டிருப்பதால் அவர்கள் நிராகரிக்கப்படுகிறார்கள் (துன்புறுத்தப்பட்டுத் தவறாகப் பேசப்படுகிறார்கள்).

அவர்கள் பெறும் பலன்கள் பலவாக இருக்கின்றன:

- அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

- அவர்கள் தங்களுடைய தொலைந்துபோன நிலையிலும் ஆறுதல் பெறுவார்கள்.

- அவர்களுக்கு இந்த உலகம் கொடுக்கப்படும்.

- அவர்கள் முழுமையாக இருக்கிறார்கள்.

- அவர்கள் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

- அவர்கள் தேவனைப் பார்ப்பார்கள்.

- அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள்.

- அவர்கள் தீர்க்கதரிசிகளைப் பார்க்கும்போது தங்களைப் போன்ற ஒற்றுமைகளைப் பார்க்கிறார்கள், அப்போது அவர்கள் தங்களுடைய விசுவாசம் உண்மைதான் என்பதை உறுதிசெய்துகொள்கிறார்கள்.

மத்தேயு 5:13–20 வசனங்களில் இந்த வாழ்க்கைமுறை அதைச் சுற்றியுள்ள உலகத்தில் எத்தகைய தாக்கம் விளைவிக்கும் என்பதைக் குறித்து இயேசு பேசியிருக்கிறார். தங்களைச் சுற்றியிருக்கும் உலகத்திற்கு இந்த வழியில் சுவிசேஷத்தை வெளிப்படுத்துவதில் தேவனுடைய மக்கள் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள்.

உப்பாக இருப்பதால் அவர்கள் பூமியினுள் ஊடுருவி மனுக்குலத்தில் தேவனுடைய சாயல் இப்போது எந்தளவிற்கு இருக்கிறதோ அதைப் பாதுகாக்கிறார்கள். இது எவ்வளவு முக்கியம் என்பதை அவர்கள் உணர்ந்து தங்களுடைய உப்புத்தன்மையைப் பாதுகாக்கும்படியாக செயல்படுகிறார்கள். இல்லையென்றால் உப்பு எதற்கும் பயன்படாமல் போய்விடும். தாக்கம் விளைவிக்க வேண்டிய உலகத்தினாலேயே அது மதிப்பற்றதாக்கப்பட்டுவிடும்.

அவர்கள் வெளிச்சமாக இருக்கிறார்கள். ஒரு குன்றின்மேல் இருக்கும் நகரத்தின் வெளிச்சத்தைப் போல இருக்கிறார்கள். இந்த வெளிச்சம் தூரத்தில் பயணம் செய்துகொண்டிருப்பவர்களால் கூடப் பார்க்க முடியும். அவர்களுடைய வெளிச்சம் ஒளித்து வைப்பதற்காக இருக்கவில்லை, ஒரு உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் விளக்கைப் போல அவர்கள் எல்லோருக்கும் வெளிச்சத்தைக் கொடுப்பார்கள். ''உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'' என்று இயேசு நம்மை ஊக்குவிக்கிறார் (மத்தேயு 5:16). இப்படித்தான் மற்றவர்கள் பிதாவானவரைப் பார்ப்பார்கள். நாம் இந்த உலகத்திற்குள் வெளிப்படுத்தல், குற்றத்தை உணரும் தன்மை மற்றும் நம்பிக்கையைப் பிரகாசிக்கச் செய்கிறோம். நம்முடைய வெளிச்சம் உரிஞ்சி எடுக்கப்படுகிற வகையில் இருக்கிறதா என்று எப்போதும் கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

தேவனுடைய மக்கள் ராஜ்யத்தின் சத்தியத்தில் வாழ்கிறார்கள். தேவனுடைய நீதியின் வடிவமைப்பை நீக்கிவிடுவதற்காக இயேசு வரவில்லை; அவர் அதை நிறைவேற்றுவதற்காக வந்தார். ''நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்'' (மத்தேயு 5:17) என்று அவர் நமக்கு மிகவும் தெளிவாகக் கூறுகிறார். இந்த எதிர்பார்ப்புகளின் தன்மையை நீக்குவதற்கு

முயற்சி செய்பவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்; அதை நிறைவேற்றுபவர்கள் மேன்மையானவர்களாக இருக்கிறார்கள். பெயரளவில் மதரீதியாகச் செயல்படும் தலைமுறைக்கு முடிவு மிகவும் வல்லமையானதாக இருக்கிறது: பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாணத்தைப் போதிப்பவர்களைக் காட்டிலும் நம்முடைய நீதி மேம்பட்டதாக இருக்காவிடில் நாம் பரலோகத்தின் ராஜ்யத்திற்குள் நுழைய முடியாது.

மத்தேயு 5:21–47 வசனத்தில் இயேசு தேவனுடைய சிருஷ்டிப்பான ஆண் மற்றும் பெண்ணில் அவருடைய வடிவமைப்பைக் குறித்து விளக்குகிறார்கள். முதலாவது, வசனங்கள் 21–26இல் அவர் அவர்களுடைய தனிப்பட்ட உறவுகளைக் குறித்தும், சகோதரனின் மேல் கோபத்தையும் வெறுப்பையும் கொண்டிருத்தல் கொலைக்கு சமம் என்றும் கூறுகிறார். மனித உறவுகளிலேயே கொலை செய்வதுதான் மிகவும் மோசமான ஒன்றாக இந்த உலகம் கருதுகிறது. ஆனால் தனிநபருடைய மனித உறவுநிலையில் தேவனுடைய அழைப்பு நம்மை வேறு இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. கோபம் நியாயம்தீர்க்கப்படுகிறது. அலட்சியமும், அவமதிப்பும் நியாயம்தீர்க்கப்படுகிறது. நாம் எந்தஒரு மதரீதியான செயல்களைச் செய்வதற்கு முன்பாக நாம் ஏற்கெனவே பிரச்சினையில் இருப்பவரோடு ஒப்புரவாகுதல் மிகவும் முக்கியமானதாகும்.

வசனங்கள் 27–30 களில் தேவன் நிர்ணயித்தப்படியே ஆண் பெண் உறவுகள் எப்படியிருக்கவேண்டும் என்பதை இயேசு விளக்குகிறார். இச்சையோடு பார்க்கிற பார்வை விபசாரம் செய்வதற்கு ஈடாக இருக்கிறது. திருமணத்திலேயே மிகவும் மோசமான துரோகம் என்றால் அது வேறு நபரோடு இச்சைக்காகத் தொடர்பு கொள்வதுதான் என்று இந்த உலகம் சிந்திக்கிறது. ஆனால் ஆண் பெண் உறவைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நிலைப்பாடு அதையும் தாண்டி உயர்வான இடத்தில் இருக்கிறது. மற்றொரு நபரின் மீது இச்சைக் கொள்வது தேவன் மனுக்குலத்தைக் குறித்துக் கொண்டிருக்கும் வடிவமைப்பிற்கு எதிரானதாக இருக்கிறது. எனவே நாம் நம்முடைய கண்களைக் காத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய கைகளைக் காத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவைகளை நீக்கிவிட வேண்டும். கண்களையோ அல்லது கைகளையோ நீக்குவதுதான் தீர்வு என்றால் இரண்டு கண்களையும், கைகளையும் நீக்கிவிடுங்கள் என்று தான் இயேசு கூறியிருப்பார். ஆனால் அவருடைய உருவகத்தின் மூலமாக ஆண் மற்றும் பெண்ணிற்கு இடையே தேவன் உருவாக்கிய உறவு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அழுத்தமாக அறிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் எண்ணங்கள் மற்றும் செயல்களில் பரிசுத்தத்தினால் அடையாளப்படுத்தப்பட வேண்டும். திருமண உறவிற்குள் நுழையும்வரை அவர்கள் எந்தவிடத்திலும் பாலியல் ஈடுபாட்டைக் கொண்டிருக்கக்கூடாது.

வசனங்கள் 31–32களில் திருமணத்தில் ஆண் மற்றும் பெண்ணின் உறவு எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து இயேசு விசேஷமாகக் கூறியிருக்கிறார். ‘‘நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்’’ என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

விவாகரத்து தம்முடைய வடிவமைப்பைக் குலைக்கிறது என்று தேவன் மறுபடியும் மறுபடியும் கூறுகிறார். இந்த வடிவமைப்பின் அழகைக் குறித்து அவர் ஆதியாகமம் 2:18–24 வசனங்களில் கூறுகிறார்:

> பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவித காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

தேவனால் வடிவமைக்கப்பட்ட திருமணப் பந்தமானது மிகவும் பலமுள்ளதாக இருக்கிறது. விபசாரத்தினால் மட்டுமே அதை உடைக்க முடியும் (அல்லது மரணம்). இந்த ஐக்கியம் மிகவும் பலமுள்ளதாக இருப்பதால் விவாகரத்தே விபசாரத்தைச் செய்ய வைக்கிறது என்று இயேசு முடிவாகக் கூறியிருக்கிறார்.

வசனங்கள் 33–37இல் மக்களுக்கிடையே காணப்படும் நம்பிக்கையின் உறவுகளைக் குறித்து இயேசு எடுத்துக்கூறுகிறார். நாம் சத்தியம் செய்யக்கூடாது என்றும், நாம் ஆம் என்று கூறினால் அது ஆம் ஆக இருக்கட்டும் என்றும் இல்லை என்றால் அது இல்லையென்றே இருக்கட்டும் என்றும் அவர் நமக்குக் கட்டளையிடுகிறார். ‘‘இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாகும்’’ (மத்தேயு 5:37) என்று அவர் கூறுகிறார். ‘‘நீங்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவுகள் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது நீங்கள் ஏதாவது ஒரு காரியத்தை நிரூபிக்கவேண்டும் என்று நினைத்தால் என்னுடைய சர்வவல்லமையுள்ள தன்மையை யூகித்து, பரிசுத்தமானதின் மீது சத்தியம் செய்து, நீங்கள் எந்த அதிகாரமும் கொண்டிருக்காதவைகளின் மீது வாக்குக் கொடுக்கிறீர்கள்’’ என்று இயேசு கூறுவதைப் போல இருக்கிறது.

சத்தியம் செய்வது அல்லது வாக்குக் கொடுப்பது என்பது உண்மையான மற்றும் ஆணித்தரமான பொறுப்பாக இருக்கிறது. ஆனால் மனிதனுக்கு அத்தகைய வல்லமையைத் தேவன் கொடுக்கவில்லை. தான் கொடுத்த வாக்கினை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்களைத் தன்னால் கட்டுப்படுத்தித் தனக்கு ஏற்றாற்போல செயல்படுத்த முடியுமா என்று மனிதனுக்குத் தெரியாது. அவன் உயிரோடு இருப்பானா என்பது கூட அவனுக்குத் தெரியாது. எனவே, ‘‘சத்தியம் செய்யாதீர்கள்; பரலோகத்தைக் கொண்டும், பூமியைக் கொண்டும், எருசலேமைக் கொண்டும், உன்னுடைய தலையில் அடித்தும் சத்தியம் செய்ய வேண்டாம். அதற்கு மாறாக உன்னால் செய்ய முடிந்த ஒரே காரியமான இன்று நான் ஆம் அல்லது இல்லை என்று சொல்வேன் என்பதை மட்டும் செய்’’ என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

வசனங்கள் 38–42இல் தொடர்பின்றி ஏற்படும் தவறுகளை நாம் எப்படிக் கையாள வேண்டும் என்பதை இயேசு விளக்குகிறார். இவை நாம் அறியாத நபர்களால் ஏற்படலாம், அவை தினசரி நிகழும் நிகழ்வுகளின் மூலமாக ஏற்படலாம். ‘‘ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ’’ (மத்தேயு 5:39–41). பழிவாங்குதல் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியமாக இந்த உலகம் சிந்திக்கிறது. அதையே அது விரும்பவும் செய்கிறது. ஆனால் தீயவர்களைத் தேவன் கையாளுவார். நாம் அவர்களை எதிர்க்கக்கூடாது. நம்மிடம் அவர்கள் கேட்பதைக் காட்டிலும் நாம் இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கொடுங்கள், கொடுங்கள், கொடுங்கள்! நேரத்திற்கு நேரம் மற்றவர்களால் அவர்களுக்கென்று பிரயோஜனப்படுத்திக்கொள்வதை நினைத்து நாம் பயப்படக்கூடாது.

வசனங்கள் 43–47இல் இப்படிப்பட்ட தொடர்பில்லாத தவறுகளை இன்னும் ஒருபடி மேல் எடுத்துச் சென்று இயேசு விளக்குகிறார். நமக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள் என்று நாம் அறிந்தவர்களைக் குறித்தே இது கூறப்படுகிறது: ‘‘உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்’’ (மத்தேயு 5:43–45). இந்த உலகம் தன்னுடைய நண்பர்களைக் குறித்து மட்டுமே அக்கறைக் கொண்டிருக்கிறது. ஆனால் தேவன் கொடுக்கும் மாதிரி அதற்கு எதிர்மாறானதாக இருக்கிறது: நாம் நம்முடைய எதிரிகளையும் நேசிக்க வேண்டும். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். நாம் நம்முடைய பரலோக பிதாவின் பிள்ளைகளாக நடந்துகொள்ள வேண்டும். தேவனுடைய நன்மை என்பது இந்த உலகம் முழுவதிலும் கொடுக்கப்படுகிறது, அது நல்லதாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும் சரி. எனவே அவர் தம்முடைய அன்பை நமக்குத் தருகிறார். நாம் அந்த அன்பைக் கொண்டு நம்முடைய எதிரிகளையும் நேசிக்க முடியும். தேவனுடைய மக்கள் எல்லோரையும் நேசித்து, வாழ்த்த வேண்டும். தனிப்பட்ட பலன் எதுவும் இருக்காது என்றாலும் அதைச் செய்ய வேண்டும்.

உக்கிராணத்துவத்தைக் கொண்ட இந்தப் புதிய வாழ்வை வாழ்வதற்கான முக்கியமான திறவுகோலை இயேசு 48ஆம் வசனத்தில் கொடுத்து முடிக்கிறார்: ‘‘ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.’’ திருச்சபை அழைக்கப்படும் வகையில் நாம் வாழக்கூடிய நம்முடைய திறனானது நம்முடைய பிதாவின் பரிபூரணமான நீதியில் தான் காணப்படுகிறது. தம்முடைய பிள்ளைகளில் தேவன் கொடுக்கும் புதிய பிறப்பானது நம்மை இந்த வழியில் வாழ்வதற்கு வழிவகுக்கிறது. நம்முடைய பிதா பரிபூரணமானவராக இருக்கிறார். நாம் அவரைப் போல இருக்கும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறோம்.

## இதைக் குறித்துப் பவுலின் வார்த்தைகள்

எபேசியர் 4:17–6:9 வசனங்களில் இதே உக்கிராணத்துவத்தோடு கூடிய வாழ்க்கையைக் குறித்துப் பவுல் விளக்குகிறார்.

முதலாவது, 4:17 –5:7 வசனங்களில் இயேசுவானவர் கூறியதைப் போல இந்த வாழ்க்கை நம்மைச் சுற்றியிருக்கும் வாழ்க்கையைக் காட்டிலும் மாறுபட்டது என்று பவுலும் கூறுகிறார். நாம் இந்த உலகத்தைப் போல வாழ முடியாது. நம்முடைய தகப்பனாகிய ஆதாமிடத்திலிருந்து நாம் பெற்ற பயனற்ற சிந்தனையின் மூலமாக வாழ முடியாது. அந்தச் சிந்தனை இருளடிக்கப்பட்டிருகிறது. அது தேவனுடைய சிந்தனையின் வழியிலிருந்து பிரிக்கப்பட்டு, உணர்ச்சியே இல்லாமல், சுயத்திற்காகவும் அதனுடைய ஆசைகளுக்காகவுமே செயல்படுத்தும் நோக்கத்தைப் பெற்றிருக்கிறது. நாம் கிறிஸ்துவிற்குள் வருவதை அனுமதிப்பதில்லை. அதற்குமாறாக நாம் புதியதாக சிருஷ்டிக்கப்பட்டால் எப்படியிருப்போமோ அப்படியே இருப்போம் – தேவனைப் போல மெய்யான நீதி மற்றும் பரிசுத்தத்தைக் கொண்டு. நாம் அவருடைய குமாரனாகிய இயேசுவைப் போல இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் மறுபடியும் பிறத்தல் என்பது அப்படித்தான் இருக்கும். நாம் ‘‘கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்’’ (எபேசியர் 5:2) போல இருக்க வேண்டும்.

இயேசுவானவர் மலைப்பிரசங்கத்தில் கூறிய வார்த்தைகளைப் போலவே பவுல் இங்கே பேசுகிறார். இந்தப் புதிய வாழ்க்கை நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தில் குறிப்பிடத்தகும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது (பார்க்க, 5:8–17). தனிப்பட்ட உறவுகளில் தேவனுடைய சிருஷ்டிப்பான ஆண்களையும் பெண்களையும் குறித்துத் தேவன் கொண்டிருந்த வடிவமைப்பை இது வெளிப்படுத்துகிறது (பார்க்க, 5:18–21). திருமண உறவைக் குறித்தும் (பார்க்க 5:22–23), குடும்ப உறவுகளைக் குறித்தும் (பார்க்க 6:1–4), மற்றும் தொழில் செய்யும் இடங்களில் கொள்ளும் உறவுகளைக் குறித்தும் (பார்க்க, 6:5–9) இது வெளிப்படுத்துகிறது. இந்த வசனங்களிலிருந்து நாம் பல காரியங்களை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நான் சில முக்கியமானவைகளை மட்டும் எடுத்துரைக்கிறேன்.

முதலாவது, இந்த வாழ்க்கை நமக்கு இயேசுவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரில் நாம் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழாமல் புதிய வாழ்வு இருக்காது. யோவான் 3ஆம் அதிகாரத்தில் நிக்கொதேமுவிற்குக் கொடுக்கப்பட்ட இரகசியம் இதுதான். ‘‘இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்’’ (யோவான் 3:5) என்று இயேசு அவரிடத்தில் கூறினார். அதற்கு நிக்கொதேமு ‘‘இவைகள் எப்படி ஆகும்’’ (யோவான் 3:9) என்று கேட்டார்.

இரண்டாவதாக, இந்த வாழ்க்கை நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தின் வாழ்க்கையோடு ஒத்திருக்காது. நாம் கிறிஸ்துவிற்குள் வரும்போது நம்முடைய எல்லா மனித உறவுகளும் மாறுபடுகின்றன; மனத்தாழ்மையே அந்த உறவுகளுக்கெல்லாம் மையப் பகுதியாக இருக்கிறது. இதனால் தான் பவுல், ‘‘ன’’ (எபேசியர் 5:21) என்று கூறுகிறார். ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல் உறவுசார்ந்த சார்ந்திருத்தலை ஏற்படுத்துகிறது: கணவன்மார் தங்களுடைய சொந்த சரீரத்தை நேசிப்பதைப் போல தங்களுடைய மனைவிமாரை நேசிப்பார்கள். மனைவிமார் தங்களுடைய கணவன்மார்களுக்கு மரியாதை கொடுப்பார்கள். பிள்ளைகள் தங்களுடைய பெற்றோருக்கு மரியாதையையும், கீழ்ப்படிதலையும் கொடுப்பார்கள். பணிசெய்யும் இடங்களிலும் கூட தொழில்ரீதியான பழக்கவழக்கங்கள் தலைகீழாக மாறிவிடும். எஜமானர்கள் தங்களுடைய பணியாட்களை (அடிமைகளை) மரியாதையோடு நடத்துவார்கள். பணியாட்கள் தேவனுக்குத் தாங்கள் செய்யக்கூடிய அதே ஊழியத்தைத் தங்களுடைய எஜமானர்களுக்குச் செய்வார்கள்.

மூன்றாவதாக, இந்த வாழ்க்கை நம்மால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்கு நாம் நம்முடைய வாழ்க்கையை உக்கிராணிகளாக்கும் திறனானது தேவன் தம்முடைய குமாரனை அனுப்பி, அவரில் காணப்படும் இரட்சிப்பைப் பெறுபவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரை உட்புகுத்தி தேவனால் நமக்குச் சாத்தியப்படுத்தப்படுகிறது. ஆனால் நாம் அதைச் செயல்படுத்த வேண்டும். ரோமர் 6:11–14 வசனங்களில் பவுல் இதைத் தெளிவுப்படுத்துகிறார்:

> அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.

## இது பின்தொடரப்பட வேண்டிய நீதி

நாம் பின்பற்ற வேண்டிய நீதியைக் குறித்து இயேசு பேசியிருக்கிறார் – ‘‘முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்’’ (மத்தேயு 6:33). நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நீதியைக் குறித்தும் அவர் பேசியிருக்கிறார்: ‘‘ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்’’ (மத்தேயு 5:48). அவர் மத்தேயு 7:7–28 வசனங்களில் தேவனோடு தொடர்ப்புப்படுத்தி இந்த நீதியை நாம் *எப்படிப்* பின்தொடர வேண்டும் என்று சொல்லி மலைப்பிரசங்கத்தை முடிக்கிறார்.

வசனங்கள் 7–11 இயேசு இவ்வாறு சொல்கிறார்,

> கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

தேவனுடைய நீதியை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு அவர் தம்முடைய பிரசன்னத்தையும், வழிகாட்டுதலையும் கொடுக்கிறார். கதவைத் தட்டுகிறவர் கதவைத் திறக்கவைப்பர், கேட்கிறவர் பெற்றுக்கொள்வர், தேடுகிறவர்கள் கண்டடைவர். நாம் நேசிப்பவர்களுக்கு நல்ல பரிசுகளை நாம் வாங்கிக்கொடுக்கிறோம். அப்படியானால் தேவன் நம்மை எவ்வளவு ஆசீர்வதிக்க வேண்டும் என்று விரும்புவார் என்பதைக் கற்பனை செய்துபாருங்கள். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதை நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும்.

வசனங்கள் 13–14 இல் நாம் இயேசுவின் நீதியைப் பின்பற்றுவதற்கு நாம் ‘‘இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்’’ என்று நமக்கு எச்சரிக்கையளிக்கிறார். குறைவாக நடக்கப்பட்டிருக்கும் வழியில் நாம் நடந்துசெல்ல வேண்டும். ஏனென்றால் அழிவிற்குச் செல்லும் பாதை மிகப்பெரியதாகவும், அதிகக் கூட்டத்தைப் பெற்றதாகவும் இருக்கும். ஜீவனைக் கொடுக்கும் பாதையானது குறுகலாகவும், தனிமையானதாகவும் இருக்கும்.

வசனங்கள் 15–23இல் இயேசு இன்னும் இரண்டு எச்சரிக்கைகளைக் கொடுக்கிறார்: நாம் ‘‘கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்’’ என்றும் கிறிஸ்துவை அறிந்திருக்கிறேன் என்று கூறுகிற ஆனால் மெய்யாகவே அறிந்திராத சாதாரணமான மக்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றும்

கூறுகிறார்: ‘‘பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை’’ (மத்தேயு 7:21). இயேசுவின் அறிவுரைத் தெளிவாக இருக்கிறது: ஏமாற்றுகிறவர்களைக் குறித்துக் கவனமாக இருங்கள்.

ஏமாற்றம் இரண்டு வகையான மக்கள் குழுக்களிலிருந்து ஏற்படலாம். முதலாவது, மதத் தலைவர்கள் என்று வேடமிட்டிருப்பவர்களால் ஏற்படலாம். துரதிஷ்டவசமாக, இந்தத் தனிப்பட்ட நபர்கள் அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பது பலருக்கும் தெரியவில்லை. ஆபத்தான மக்கள் சீக்கிரத்தில் அவர்களுடைய வாழ்க்கையின் கனிகளின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவார்கள். ஆனால் மெய்யாகவே பின்தொடருகிறவர்களைப் போல நடிக்கிறவர்களிடத்திலிருந்தும் ஆபத்து ஏற்படலாம். நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதற்கு நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும் விசுவாசிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள் என்பதைச் செயலில் காண்பிப்பார்கள் ஆனால் அதைக் குறித்துப் பேச மாட்டார்கள்.

இயேசு தம்முடைய அழைப்பை வசனங்கள் 24–27இல் முடிக்கிறார்:

> ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளைச் செயல்படுத்தி ஞானத்தோடு கட்டியெழுப்ப வேண்டும். நாம் இப்படிச் செய்தோமானால் நாம் புயலிலிருந்து காப்பாற்றப்படுவோம். செயல்படுத்துதலை அடித்தளமாகப் பெறாத வாழ்க்கை நிச்சயமாக வீழ்ந்துவிடும்.

திருச்சபையானது ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெறும்படி அழைக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்திற்காகவும், அவருடைய நீதிக்காகவும் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் வழிநடத்துவது ஆவிக்குரிய முதிர்ச்சியாக இருக்கிறது. தேவனுடைய மக்கள் மெய்யாகவே பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து, அவர்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரால் அதிகாரமளிக்கப்பட்டு இருந்தால் மட்டுமே அவர்கள் தங்களுடைய தலைமுறையில் தேவன் தங்களுக்காக வைத்திருக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் செயல்பூர்வமாக இருக்க முடியும்: தாங்கள் வசிக்கும் இடங்களில் உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் உறவு மற்றும் பிரதிநிதித்துவத்தைக் குறித்த அவருடைய சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துரைத்தலே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது.

பகுதி 2

# திருச்சபைத் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக ஆயத்தப்படுத்துதல்

# 5

# இயேசு தம்முடைய திருச்சபைக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்தார்

தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தைப் பற்றி நாம் சிறிய விளக்கத்தைப் பார்த்தோம்: ஒவ்வொரு விசுவாசியும் தான் இருக்கும் இடத்தில் சுவிசேஷத்தை வாழ்ந்து காண்பிக்க வேண்டும், ஆவியின் வரங்களையும் கனிகளையும் வெளிப்படுத்த வேண்டும், தங்களுடைய கிருபையின் கதைகளைச் சொல்ல வேண்டும். இதன் மூலமாக ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் சுவிசேஷத்தைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப்பைப் பெறுவார்கள். நாம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான், இதை எப்படிச் செய்ய முடியும்?

மக்களைத் தங்களுடைய அழைப்பிற்கு ஆயத்தப்படுத்தும்படியாகத் திருச்சபைக்குத் தேவன் ஈடுஇணையில்லாத ஒரு ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறார்: தலைமைத்துவம். பவுல் இதைக் குறித்து மிகவும் தெளிவாக இருந்தார்:

> மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (எபேசியர் 4:11–13).

உள்ளூர் சபையின் தலைமைத்துவமானது தேவன் தம்முடைய மக்களுக்குக் கொடுத்திருக்கும் நோக்கத்தைத் தெளிவாக உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு இதைக் காட்டிலும் முக்கியமான வேலை கிடையாது. தேவன் தங்களைக் குறித்துக் கொண்டிருக்கும் ஆசையில் நடக்கும்படியான ஒரு சூழ்நிலையை உருவாக்கி மக்களைக் கவர்ந்திழுத்து அப்படிச் செய்ய வைப்பதே இந்தத் தலைமைத்துவத்தின் பணியாகும். வெறுமனே மக்கள் விசுவாசத்திற்குள் வந்தால் போதும் என்று இருந்துவிட்டு இயேசுவின் மூலமாகப் புதிய பிறப்பிற்குள் தேவன் அவர்களைக் கொண்டு வந்தப்பிறகு தேவன் வடிவமைத்திருக்கும் வழிகளில் அவர்கள் நடக்கும்படியாக அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு உதவாமல் இருந்தால் அது மிகவும் மோசமான தவறாக இருக்கும்.

தேவனுடைய மக்கள் தங்களுடைய அழைப்பில் நிலைத்திருக்கும்படியாக தவறுகளைக் கண்டுபிடித்து அவைகளைத் தவிர்க்கும்படியாக அவர்களுக்கு உதவுவதே தலைமைத்துவத்தின் பொறுப்பாக இருக்கிறது. இயேசுவானவர் கொடுத்த எச்சரிக்கையை மறுபடியுமாகப் பார்ப்போம்:

> கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத்தேயு 7:15–20).

நான் இறையியல்ரீதியான பயிற்சியைப் பெற்றப் பிறகு பல வருடங்களாக எனக்குக் கொடுக்கப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பாரம்பரியங்களைக் குறித்துச் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். அவை தவறில்லை ஆனால் அவை முழுமையாக இருக்கவில்லை அல்லது முழு கவனம் செலுத்துவதாக இல்லை. இருபத்தியோராம் நூற்றாண்டின் திருச்சபை மனிதனுடைய தத்துவங்களின் காரணமாகத் தனித்துவமானதாக இருக்கவில்லை. அது மேற்கத்திய திருச்சபையின் "வந்து பாருங்கள்" என்ற வரலாற்றுப்பூர்வமான அணுகுமுறையின் தவறை

வெளிப்படுத்தியிருக்கிறது.

''மக்களைத் திருச்சபைக்குக் கூடி வரச் செய்தல்'' என்பதை சீஷத்துவம் என்ற வரையறையின் மேல் ''வந்து பாருங்கள்'' என்ற திருச்சபை வாழ்க்கைமுறையைக் குறித்த அணுகுமுறை அதிகக் கவனம் செலுத்துகிறது. அதன் விளைவாக, பலராலும் வேண்டுமென்றே செய்யப்படாமலும் கூட, இயேசுவைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டியவரின் சாராம்சத்தைத் திருச்சபை இழந்துவிட்டது. நாம் திருச்சபைக்கான பெரும்பாலான காரணங்களைத் தொலைத்துவிட்டோம்: தேவனோடு உறவில் வாழும்படியாகவும், இந்த உலகத்தில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படியாகவும் மக்களைத் தேவன் கண்டுபிடிப்பது. தேவனுடைய முக்கியமான அழைப்பிற்கு ஒத்துழைப்பதே திருச்சபையின் தலைமைத்துவத்தின் பொறுப்பாக இருக்கிறது. இந்த நோக்கங்களில் வளரும்படியாக மக்களை ஊக்குவிப்பது: முதலாவது அவர்கள் பிதாவாகிய தேவனோடு தொடர்ந்து வளரும் உறவில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, அவர்கள் இந்த உலகத்தில் உண்மையுள்ளவர்களாகப் பிதாவானவரைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

''நீ பேசுவதைக் கேட்பதற்காக மக்களை நிரப்பும் சேமிப்புக் கிடங்கு என்று என்னுடைய திருச்சபையை நினைத்தாயா?'' என்ற வியப்பூட்டும் கேள்வியைத் தேவன் என்னிடம் முதன்முறை கேட்டபோது திருச்சபையைக் குறித்து நான் கொண்டிருந்த எண்ணம் தவறானது என்பதை உணர்ந்துகொண்டேன். வேதாகமத்தைப் போதிப்பதும், அதைக் குறித்துப் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்பதற்கு மக்களை வரச்செய்வதும் தவறு கிடையாது. ஆனால் தேவன் தம்முடைய கேள்வியின் மூலமாக இரண்டு பெரிய தவறுகளை எனக்கு வெளிப்படுத்தினார்: முதலாவது, திருச்சபை என்பது மக்கள் கூடிவரும் இடமாக இருக்கிறது. இரண்டாவது, ஒருவர் பிரசங்கிப்பதைக் கேட்பதற்காகக் கூடும் கூட்டம் அந்தத் தலைவரின் செயல்திறனை அளவீடும் ஒன்றாக இருக்கிறது.

தேவன் இந்தக் கேள்வியைக் கேட்டப் பிறகு, பல வருடங்களாக நான் பார்த்து சிந்தித்து, கிறிஸ்துவின் மக்களை ஊழியத்திற்காக அதிகாரமளித்தலே தலைமைத்துவத்தின் முக்கியமான அழைப்பாக இருந்திருந்தால் மேற்கத்திய தலைவர்கள் தங்களுடைய கட்டளையையும், செயல்பாட்டுத் திறனையும் தவறான அளவுகோலை வைத்து அளவீடு செய்வதற்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும். அவர்கள் மக்கள் நம்முடைய திருச்சபைகளுக்கு வருகிறார்களா என்று கேட்பதோ அல்லது அவர்கள் வரும்போது எப்படி உணர்கிறார்கள் என்பதைக் கேட்பதோ ஏமாற்றமான முடிவுகளையே அவர்களுக்குக் கொடுக்கும். தலைவர்கள் மிகவும் அமைதியாக அக்கறையோடு கேள்விகளைக் கேட்பார்கள், எத்தனைப் பேர் வந்தார்கள்? எவ்வளவு கொடுத்தார்கள்? அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா? கிறிஸ்துவின் மக்களாக நாம் விசுவாசிக்கக்கூடிய காரியங்களாகத் திருச்சபைக் கூறுபவைகளுக்கு இந்தக் கேள்விகள் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிராத நோக்கத்தின் மேல் இவர்கள் கவனம் செலுத்துகிறார்கள்.

தேவன் தம்முடைய மக்களுக்கு என்ன விரும்புகிறார் என்பதைத் தலைமைத்துவம் அறிந்திருக்க வேண்டும். அதன்பிறகு இந்தக் காரியங்களில் மக்கள் எப்படி வளர முடியும் என்பதின் மீது கவனம் செலுத்த வேண்டும். அதுபோலவே விசுவாசிகள் நிச்சயமாக இந்தக் காரியங்களின் வழியில் தான் நடக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படும் வகையில் அவர்களுக்கு ஏற்றவாறு சூழ்நிலைகளைக் கட்டியெழுப்ப வேண்டும். திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தில் நடக்கும்படியாக மக்களை வழிநடத்துவேன் என்ற அர்ப்பணிப்பு இல்லாமல் வெறுமனே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்ளும் பல தலைமுறை மக்களை உருவாக்குவதால் வெறுமனே பெயரளவில் ஏற்பட்டதாகத்தான் இருக்கும்.

சத்தியத்தைப் போதித்தால் மட்டும் போதாது. விசுவாசிகள் வேதாகமரீதியாக எப்படிப்பட்ட அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்பது மட்டும் போதாது. எவ்வளவு உணர்ச்சிப்பூர்வமானதாக இருந்தாலும் ஆராதனை மட்டும் போதாது. நாடகத்தின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது செயல்பூர்வமான ஆலோசனைகளின் மூலமாகவோ வெளிப்படுத்தலின் மீது கவனம் செலுத்துவது மட்டும் போதாது. வேதாகமத்தில் காணப்படும் வாழ்க்கையான அடிப்படைகளை நோக்கி மக்களை அழைத்துச் செல்லாத எந்த நல்ல செயல்களும் ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அபிஷேகித்திருக்கும் புதிய வாழ்க்கையைக் குறித்து ரோமர் 6ஆம் அதிகாரத்தில் பவுல் மிகவும் தெளிவாக எழுதுகிறார்:

ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று

சொல்லுவோமோ? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம்மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார் (ரோமர் 6:1–10).

இவை எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது முக்கிய கேள்விகள் எழுகின்றன. இப்படிப்பட்ட உண்மைத்தன்மையை ஆதரிக்கும் வகையில் சரீரமாகிய திருச்சபையின் வாழ்க்கையில் அதற்கேற்றதொரு சூழ்நிலையைத் திருச்சபையின் தலைமைத்துவம் உருவாக்கியிருக்கிறதா? தேவனோடு தாங்கள் கொண்டிருக்கும் உறவில் வளருவதற்குத் தேவையான ஆதாரங்கள் அனைத்தையும் மக்களுடைய கைகளில் அவர்கள் கொடுத்திருக்கிறார்களா? தேவனோடு தனிப்பட்ட உறவைக் கொண்டு வாஞ்சிப்பதற்குப் பதிலாகத் திருச்சபையின் நிகழ்வுகள் அறிந்தோ அல்லது அறியாமலோ மாற்றாகிவிட்டிருக்கின்றனவா? சரீரமாகிய திருச்சபையின் உறுப்பினர்கள் திருச்சபையில் தலைமைத்துவம் இல்லாமல் தேவனோடு தாங்கள் கொண்டிருக்கும் உறவைத் தொடரலாமா?

தேவன் தம்முடைய மக்களுக்காகக் கொண்டிருக்கும் வேதாகமரீதியான நோக்கத்தைத் தவிர தலைமைத்துவம் வேறு எதற்கு ஆசைப்பட்டாலும் அது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது. இந்த அழைப்பிற்காகத் தேவனுடைய மக்களை அதிகாரப்படுத்துவதைத் தாண்டி வேறு எதற்கும் தங்களைப் பொறுப்புள்ளவர்களாக அவர்கள் கருதினால் அது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

## தேவனுடைய தலைமைத்துவ மாதிரி

திருச்சபையானது தேவனுடைய அழைப்பைப் பின்பற்றுகிறதா இல்லையா என்று மதிப்பீடு செய்வதற்குத் தலைமைத்துவம் முதலில் தங்களிடத்திலிருந்து துவங்க வேண்டும். வேறு நிறுவனங்களில் காணப்படுவதைப் போல திருச்சபையில் இருக்கும் தலைமைத்துவம் இருப்பதில்லை. இதைக் குறித்துத் தம்முடைய சீஷர்களுக்கு மத்தேயு 20:25–28 வசனங்களில் இயேசு மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்:

அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

இந்த உலகத்தில் காணப்படும் தலைமைத்துவம் ஏதோ ஒரு வழியில் கெடுதல் உள்ளதாகவே இருக்கிறது. மாம்சம் அதை அப்படியாக்கிவிடுகிறது. ஏனென்றால் இயேசு இல்லாதவர்களின் மீது மாம்சம் தாக்கம் விளைவிக்கிறது. இயேசு கிறிஸ்துவில் மீட்கப்பட்டவர்களிலும் கூட நமக்குள் இருக்கும் தேவனுடைய ஆவியானவரோடு மாம்சம் யுத்தம் செய்கிறது. இந்த யுத்தத்தைக் குறித்து ரோமர் 6–8 அதிகாரங்களில் பவுல் சுருக்கமாகக் கூறுகிறார். தேவன் தம்முடைய குமாரனாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்குக் கொடுத்திருக்கும் நீதியின் ஜீவனுள்ள கருவிகளாக நாம் நம்முடைய சரீரங்களை ஆவியானவருக்குக் கொடுக்கும்போது நாம் அதை ஜெயித்துவிடுவோம் என்று அவர் கூறுகிறார். நாம்

நம்முடைய இருதயத்தையும், சிந்தனையையும் பாதுகாத்துக்கொள்ளாவிட்டால் நாம் இப்போது பெற்றிருக்கும் வெளிச்சம் மற்றும் ஜீவனுக்குப் பதிலாக மாம்சமானது கீழ்ப்படியாமையின் செயல்களை நம்மைச் செய்ய வைத்து நம்முடைய நோக்கங்கள் மற்றும் செயல்களைத் தவறானதாக்கிவிடும்.

தேவனுடைய மாதிரியில், தலைமைத்துவம் என்பது இந்த உலகத்திற்குரியதைக் காட்டிலும் பல காரணங்களால் வேறுபட்டிருக்கிறது. முதலாவது, அதற்கு தனிப்பட்ட முறையில் இழப்பு இருந்தாலும் மற்றவர்களுக்காக ஊழியம் செய்வதற்காகவே இருக்கிறது. இரண்டாவதாக, மற்றவர்களை வழிநடத்தும்படியான பொறுப்பு மக்களுக்குக் கொடுக்கப்படும்போது அவர்கள் ஒரு கணிசமான பதவியைப் பெற்றுவிட்டார்கள் என்று அர்த்தம் கிடையாது. தேவனுடைய மக்களுக்கு மத்தியில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் நீதியோடு இருக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அர்த்தம். மூன்றாவதாக, தலைமைத்துவம் என்பது தேவனைப் பின்பற்றுபவர்களுக்கு ஊழியம் செய்வதாகும். ஆனால் இந்த ஊழியம் தேவனால் கொடுக்கப்படும் பாதுகாப்பு அல்லது சமாதானம் அல்லது தேவைகளைச் சந்தித்தல் போன்றவை அளிக்கப்படும் என்று கூறுவது கிடையாது. அது தேவன் எப்படி அவர்கள் இருக்கவேண்டும் என்று நினைக்கிறாரோ அந்தப்படி அவர்களாகும்படி அவர்களை முதிர்ச்சியடையச் செய்ய உதவி செய்வதும், அவர்கள் செய்யும்படியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களை அவர்கள் செய்வதற்கு அவர்களுக்கு உதவுவதற்குமே ஆகும்.

தலைமைத்துவம் தன்னுடைய வேலையைச் சரியாகச் செய்யும்போது, அவர்கள் தினமும், நடைமுறைசார்ந்த வழியில் மக்களைத் தேவனுடைய வார்த்தைக்கு வழிகாட்டி, அவர்களைப் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்படிச் செய்வார்கள். சொல்லப்போனால், நல்ல சபைத் தலைவர்கள் மருத்துவச்சிகளைப் போல இருக்கிறார்கள் – அவர்கள் புதிய ஜீவனை உருவாக்குவதில்லை. அவர்கள் அந்த நடைமுறைகள் சரியாக இருக்கிறதா என்று மட்டுமே பார்க்கிறார்கள். ஆனால் தலைமைத்துவம் அவசியமானதாக இருக்கிறது. ஏனென்றால் அது இயேசுவால் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தலைமைத்துவம் என்றால் என்ன? எல்லாவற்றைக் குறித்தும் அதிகாரம் கொண்டவர் என்று அர்த்தம் கிடையாது. அவர்தான் சிறந்த பேச்சாளர் என்றோ அல்லது யுக்திகளைச் சிறப்பாகக் கையாளுபவர் என்றோ கிடையாது. நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போல இயேசு முற்றிலும் வேறுபட்ட மதிப்பீட்டைக் கொடுக்கிறார்.

மத்தேயு 20:26–28 வசனங்களில் தம்முடைய மக்களை வழிநடத்துபவர்களுக்கு இயேசு மூன்று தரநிலைகளைக் கொடுக்கிறார். தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்கு வேலையாட்களாக, தாசன்களாக, *diakonos* இருக்க வேண்டும் என்கிறார். அவர்கள் அடிமைகளாகவும் *doulos* இருக்க வேண்டும். கடைசியாக இயேசு கொடுத்ததைப் போல அவர்கள் தங்களுடைய ஜீவனை மற்றவர்களுக்காகக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். “உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது” என்று கொடுக்கப்படும் தலைமைத்துவத்திற்கான அழைப்பு இந்த உலகத்திற்கு நேர்மாறானதாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய திருச்சபையை வழிநடத்த விரும்புகிறவர்களுக்குக் கொடுக்கப்படும் கட்டளையாக இருக்கிறது.

எபேசியர் 4:11–16 வசனங்களில் திருச்சபைக்காகக் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட ஒரு மக்கள் குழு என்று பவுல் தலைமைத்துவத்தை விளக்குகிறார். அவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதால் அறியப்படமாட்டார்கள். அவர்கள் முழுமையான அர்ப்பணிப்போடு செய்வதால் கிடைக்கும் பலனைக் கொண்டு அறியப்படுவார்கள்:

> மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க்

கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

இந்த வேதாகமப் பகுதியைக் குறித்து நாம் சொல்லக்கூடிய காரியங்களில் நான்கு காரியங்கள் மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன: இயேசு திருச்சபைக் கொடுக்கும் தலைமைத்துவம் ஒரு நபரைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கிறது. அது மக்கள் குழுவாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கிறிஸ்துவின் மக்களை அதிகாரப்படுத்தும் கடினமான பணியை நிறைவேற்றுவதற்காகத் தலைமைத்துவ குழுவில் இருக்கும் நபர்கள் ஒவ்வொருவரும் மாறுபட்டவர்களாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பன்முகத்தன்மை ஒரே ஒரு நோக்கத்தையும், செயல்விளைவையும் சரீரத்தின் மேல் கொண்டிருக்கும். கடைசியாக நாம் திரித்துவத்தில் பார்ப்பதைப் போல பவுலால் பட்டியலிடப்பட்டிருக்கும் வேறுபட்ட நபர்கள், ஒவ்வொருவரும் பல்வேறு செயல்களைச் செய்பவர்கள் (அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், போதகர் மற்றும் ஆசிரியர்), ஒருவரையொருவர் சார்ந்திருப்பவர்களாக இருக்க வேண்டும்.

## தலைமைத்துவத்தைக் குறித்த தேவனுடைய நோக்கம்

இயேசு ஏன் தம்முடைய மக்களுக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்தார்? நாம் பார்த்ததைப் போல சரீரத்தில் தலைமைத்துவத்தின் பங்களிப்பானது தேவனுடைய நோக்கத்தில் நடக்கும்படியாகக் கிறிஸ்துவின் மக்களை அதிகாரப்படுத்துவதாகும். கிறிஸ்துவின் மக்கள் ஒவ்வொருவரும் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் வளர்ந்துகொண்டும், நெருக்கத்தைக் கொண்டும் இருக்க வேண்டும். அதற்குச் சமமாக அவர்களுக்கு இந்த உலகத்தில் தேவனால் கொடுக்கப்படும் எல்லா உறவுகளிலும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் இருக்க வேண்டும்.

தங்களுடைய வாழ்க்கையில் தொடர்ச்சியாகவும், இயல்பாகவும் மக்களைத் தேவனோடு ஈடுபடச் செய்யாத செயல்கள், ஆளுமைகள் மற்றும் நிகழ்ச்சிகள் போலியானவைகளாகவே இருக்கின்றன. அவை தேவனுடைய அழைப்பிற்கு நிகராகக் கொடுக்கப்படும் மிகவும் மோசமான மற்றும் ஆபத்தான காரியங்களாக இருக்கின்றன. கிறிஸ்துவின் மக்களை இந்த உலகத்தில் அவர்கள் இருக்கும் காலத்தில் தேவன் கொடுக்கும் உறவுகளில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் தேவனுடைய படைப்பின் நோக்கத்திற்குப் புறம்பாக இருந்து, தேவனுடைய மக்களை அவர்கள் வாழ்வின் அர்த்தத்தை அவர்களிடத்திலிருந்து பிடுங்கி, தேவன் தம்முடைய மக்களில் மனிதரூபமெடுப்பதை இந்த உலகத்திலிருந்து பிடுங்கி செயல்படும் செயல்பாடுகளும், நிகழ்வுகளும் சிறப்பானவைகள் கிடையாது.

சுருக்கமாகக் கூறப்போனால் தலைமைத்துவம் என்ற பணியானது தேவன் தங்களில் சிருஷ்டித்திருக்கும் நோக்கத்தை மக்கள் நிறைவேற்றுவதற்கு அவர்கள் எந்தத் தலைவரும் இல்லாமல் செயல்படும்படியாக அவர்களை ஆயத்தப்படுத்துவதேயாகும் (பார்க்க 1 பேதுரு 2:9). அவர்கள் கிறிஸ்துவைத் தங்களுடைய பிரதான ஆசிரியராகவும், தங்களுக்குள் தங்கிப் போதிக்கும் போதகராக பரிசுத்த ஆவியானவரையும் பெற்றிருப்பார்கள். அவர்கள் தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் காண்பிக்கும் கீழ்ப்படிதலின் மூலமாக தேவன் தம்மைச் சித்தரிக்கும் சித்திரமாக இருப்பார்கள்.

வேதாகமரீதியான வடிவமாக இருக்கும் புதிய ஏற்பாட்டின் தலைமைத்துவம் ஏன் முக்கியமானதாக இருக்கிறது? அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

*திரித்துவ தேவன் ஒவ்வொரு நபரிலும் சிருஷ்டித்த சாயலை வேதாகமரீதியான தலைமைத்துவம் வெளிப்படுத்துகிறது.* நமக்குள் இருக்கும் தேவனுடைய சாயல் உறவுகளையும் (நாம் யார்? நாம் அவருடையவர்கள்), பிரதிநிதித்துவத்தையும் (நாம் ஏன் இருக்கிறோம்? நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்திற்கு அவருடைய பிரதிநிதிகளாக இருக்கிறோம்) வெளிப்படுத்துகிறது. அது ஒருவரையொருவர் சார்ந்திருத்தலையும் வெளிப்படுத்துகிறது (நாம் தனியாக இருந்தால் முழுமையடைவதில்லை). நமக்குள் இருக்கும் அவருடைய சாயல் அன்பையும் வெளிப்படுத்துகிறது (மற்றவர்களுடைய ஆதாயத்திற்காக நம்மைக் கொடுத்தல்).

*தனிப்பட்ட நபர்களாக நாம் இருக்கும்போது முழுமையடையாதவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும்போது கிடைக்கும் ஒற்றுமையின் வல்லமையை வேதாகமரீதியான தலைமைத்துவம் வெளிப்படுத்துகிறது.* நாம் பாவத்தைப் பெற்றிராவிட்டாலும் தனித்தனி நபர்களாக நாம் இருக்கும்போது முழுமையானவர்களாக இருக்கமுடியாது. தலைமைத்துவத்திற்காகத் தேவன் திருச்சபைக்குக் கொடுக்கும்

ஒவ்வொரு நபரும் முழுமையின் வடிவமைப்பையும், வல்லமையையும் வெளிப்படுத்தும்படியாக மற்றவர்களோடு சேர்ந்து, ஒருமனப்பட்டு இருக்க வேண்டும். நாம் 1 கொரிந்தியர் 12:12–27 வசனங்களில் பார்க்கும் செய்தியின் சாராம்சம் இதுவாகவே இருக்கிறது: சரீரத்தின் எந்தப் பகுதியும் தேவையில்லை என்று கிடையாது; சரீரத்தின் எந்தப் பகுதியும் மற்றதைக் காட்டிலும் சிறப்பானது என்று கிடையாது. திருச்சபையை நாம் சரீரம் என்று அழைப்பதற்குத் தேவையான எல்லாப் பகுதிகளும் இருக்கவேண்டும், செயல்படவேண்டும். அதோடு அவை எல்லாம் மற்றவைகளோடு ஒருமனப்பட்ட ஒப்புதலோடு செயல்பட வேண்டும்.

*தேவன் தம்முடைய மக்களுக்கு முழுமையான அதிகாரமளிப்பதற்காகக் கொடுக்கும் சிறப்பானவைகளை வேதாகமரீதியான தலைமைத்துவம் வெளிப்படுத்துகிறது.* தேவனுடைய மக்களை விசுவாசத்தினாலும், ஜீவனைக் கொண்டும் அதிகாரப்படுத்துவதற்குத் தேவன் ஐந்து வகையான மக்களைக் கொடுத்திருக்கிறார் என்று எபேசியர் 4:11 வசனம் சுருக்கமாகக் கூறுகிறது: அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் மற்றும் ஆசிரியர்கள். தேவனுடைய மக்கள் புரளிகளிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள். அவர்கள் உறுதியில்லாத நிலையின் ஆபத்தை மேற்கொள்ளும்படியான முதிர்ச்சியளிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் சிறப்பான விளைவு: “மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்...” (எபேசியர் 4:11, 12).

தலைமைத்துவத்தின் இந்த ஐந்து அம்சங்களை நான் “செயல்பாடுகள்” என்று அழைக்கிறேன். கிறிஸ்துவின் மக்களின் எல்லாத் தேவைகளையும் சந்திப்பதற்கு இவைகள் ஐவரும் ஒருவரையொருவர் சார்ந்திருந்து செயல்படுவது அவசியம். திருச்சபையின் அப்போஸ்தல நோக்கத்தை நினைவுப்படுத்தும் வகையில் அப்போஸ்தல செயல்பாடு இருக்கிறது: நாம் இங்கு நமக்காகவோ அல்லது உலக வரலாற்றில் தடம் பதிப்பதற்காகவோ வரவில்லை. ஆதியிலே தேவன் உருவாக்கி, வரலாற்றின் சுவடுகளில் தேவனால் செயல்படுத்தி, இயேசுவில் முழுமையடைந்து, அவருடைய வருகையின்போது முடிவுபெறும் தேவனுடைய இரட்சிப்பின் வாக்குத்தத்தத்திற்காகவே வந்திருக்கிறோம். மற்ற நான்கு செயல்பாடுகளும் திருத்தல், சுவிசேஷ வேட்கை, அக்கறை அல்லது போதிக்கும் ஊழியங்களைக் கொடுக்கின்றன. ஆனால் திருச்சபைக்காகக் கிறிஸ்து கொடுத்த ஈவின் முழு நோக்கத்தையும் செயல்படுத்துவதற்கு இந்த ஐந்து செயல்பாடுகளின் தாக்கம் நிச்சயமாகத் தேவை.

*சுவிசேஷத்தை வெளிப்புறமாக விரிவடையச் செய்வதற்கும், அதனால் திருச்சபையை வளரச் செய்வதற்கும் ஆவியானவரோடு ஒத்துழைப்புக் கொடுப்பதற்குச் சிறப்பான வழியாக வேதாகமரீதியான தலைமைத்துவம் இருக்கிறது.* திருச்சபையின் அடிப்படை யுக்திசார்ந்த பண்பு அப்போஸ்தல நிலையைச் சார்ந்ததாகவே இருக்கிறது! வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், தேவனுடைய மக்கள் அனுப்பப்பட்டவர்களாக இருக்கிறார்கள். நம்மில் யார் எங்கு சென்றாலும், நாம் நம்மை வெறுத்து, நம்முடைய வாழ்க்கையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்தொடரும்படியாக அவரால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வெளிப்படுத்தும்போது தேவன் கொடுக்கின்ற அழைப்பின் பதிலாக அது இருக்கிறது. ஆனால் தேவனுடைய மக்கள் அவருடைய வடிவமைப்பில் மிகவும் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் மக்கள் எல்லோரின் மூலமாகவும் சுவிசேஷத்தின் செய்தி இந்தப் பூமியின் எல்லா இடங்களிலும் உள்ள மக்களினால் பார்க்கப்படவும், கேட்கப்படவும், புரிந்துகொள்ளப்படவும் வேண்டும் என்று தேவன் வடிவமைத்திருக்கிறார். நாம் கீழ்ப்படிதலோடு செயல்படும்போது திருச்சபையானது எல்லோரும் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளும்படியான வாய்ப்பைக் கொடுக்கிறது.

*பெரு மதிப்பு கொடுக்கப்படும் தலைவர்கள் கொண்டிருக்கும் ஆரோக்கியமில்லாத ஐக்கியத்தின் ஒழுங்குகளில் உள்ளார்ந்து இருக்கும் மிகவும் மோசமான ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வேதாகமரீதியான தலைமைத்துவமே சரியான வழியாகும்.* பெரும்பாலும் மக்கள் தங்களுடைய தலைவர்கள் கிறிஸ்துவின் மாதிரியாக இருப்பதின் காரணமாக கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குப் பதிலாகத் தலைமைத்துவத்தில் இருக்கும் சில நபர்களைப் பின்பற்றுகிறார்கள். இந்த நபர்கள் தாசன்களாகப் பணியாற்றும்படியாக மட்டுமே திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் (பார்க்க, மத்தேயு 20:25–28).

எனவே கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் தலைமைத்துவமானது ஒன்றிற்கும் மேற்பட்ட நபர்களையே கொண்டிருக்கிறது. ஒருவரில் ஒருவர் மாறுபாடு கொண்டவர்களையே அது பயன்படுத்தும். ஒவ்வொரு

தலைவரும் ஒருவரையொருவர் சார்ந்தே வாழ்கிறார்கள். தேவனுடைய மக்களைத் தங்களுடைய தேவன் கொடுத்திருக்கும் சுவிசேஷத்தை இந்த உலகம் முழுவதிற்கும் கொண்டு செல்வதற்காக அவர்களை முதிர்ச்சியடையச் செய்யும் பணியின் மீதே கவனம் செலுத்தும். எப்போதுமே தலைமைத்துவத்தில் இருக்கும் நபர்களையல்லாமல் ஆண்டவரையே மகிமைப்படுத்தும். இன்றைய தினத்தில் மேற்கத்திய உலகத்தின் திருச்சபைக்கு இப்படிப்பட்ட வேதாகமரீதியான தலைமைத்துவமே தேவைப்படுகிறது.

# 6

# திருச்சபைத் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்

புதிய ஏற்பாட்டின் தலைமைத்துவத்தின் மையமாக இருந்த இடைச்சாருமை (அதாவது ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்) எப்போதுமே தலைவர்களால் எளிதில் ஏற்றுக்கொள்ளும் ஒன்றாக இருக்கவில்லை. அது புதிய ஏற்பாட்டின் அடித்தளப்போதனையாகவும், திருச்சபையைக் குறித்தத் தெய்வீக வடிவமைப்பாகவும் இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதற்குக் கடினமாக இருக்கிறது. தலைமைத்துவம் என்பது பாரம்பரியமாக வரும் வழியில்பயிற்சியளிக்கப்பட்டும், பண்படுத்தப்பட்டும் வருகிறது. அது வேத வசனங்களைக் காட்டிலும் நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தைக் குறித்ததாகவே இருக்கிறது. ஆனால் ‘‘உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது’’ (மத்தேயு 20:26) என்று இயேசு அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

சீஷர்கள் சீஷத்துவத்தைக் குறித்துக் கொண்டிருந்த புரிதல் அவர்களைச் சுற்றியிருந்த யூத மற்றும் ரோம கலாச்சாரங்களின் அடிப்படையில் ஏற்பட்டதாக இருந்தது. அவை இரண்டும் மேலிருந்து கீழ் என்ற வழியைப் பின்பற்றுபவையாக இருந்தன. மேலே இருப்பவர்களுக்கு அதிகாரமும் அதோடு சேர்ந்து வரும் காரியங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் இயேசு போதித்து, வாழ்ந்து காண்பித்த தலைமைத்துவமானது தனிப்பட்ட உலகப்பிரகாரமான அதிகாரத்தைக் குறித்ததாகவோ அல்லது பிடிபடுதலைக் குறித்ததாகவே இருக்கவில்லை. அது மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதாக இருந்தது. தேவனால் வடிவமைக்கப்பட்டுத் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஈவுகள், திறமைகள் மற்றும் தேவைகளைப் பண்படுத்துவதைக் குறித்ததாக இருந்தது. எனவே கிறிஸ்துவின் சீஷர்கள் தாசன்களாகவும் அடிமைகளாகவும் இருக்க வேண்டும் என்று மத்தேயு தொடர்ந்து கூறுகிறார். அவர்கள் இயேசுவைப் பின்பற்றும் மாதிரிகளாக இருந்து, மற்றவர்களுக்குப் பதிலாகத் தங்களைக் கொடுப்பவர்களாக இருந்தார்கள்.

ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் தலைமைத்துவம் என்பது எப்படிப்பட்டது என்பதை நம்முடைய தலைமுறையினர் முழுமையாகப் பார்க்கவில்லை. ஆனால் அது தெய்வீக வடிவமைப்பையோ அல்லது தேவனுடைய எதிர்பார்ப்பையோ மாற்றிவிடவில்லை. அப்படியானால் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்றால் என்ன அர்த்தம்?

### ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்: அது என்ன, அது எது கிடையாது

SCPயில் நாங்கள் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தலைக் குறித்துப் பேசும்போது நாங்கள் இரண்டு காரியங்களை இதோடு சேர்த்துப் பேசுவதில்லை.

முதலாவது, ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்பது தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் உணர்ச்சிப்பூர்வமான உறவு என்றும், ஒருவர் மற்றொருவருக்குப் பிடித்திருத்தல் என்றும் நாங்கள் சொல்லவில்லை. அப்படிக் கூறினால் அது எளிமைப்படுத்துவதில் உச்சநிலையாக இருக்கும். தாங்கள் சேர்ந்து பணிசெய்யும் ஆட்களைத் தலைவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம் ஆனால் அவர்கள் அன்பின் வழியைத் தேர்ந்தெடுத்து ஒருவருக்கொருவர் சிறப்பான சார்ந்திருத்தலை ஏற்படுத்துவதற்காக அவர்கள் சேர்ந்து பணிசெய்ய வேண்டும் என்று தேவன் கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்வார்கள். நம்முடைய உணர்ச்சிகளினால் அதிகத் தாக்கத்தைப் பெற்று, திசைத்திருப்பப்படும் தலைமுறையாக நாம் இருக்கிறோம். சத்தியம் என்னவென்று பார்த்து அல்லது கிறிஸ்தவர்களுக்கு என்றால் தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்று பார்க்காமல் நம்முடைய உணர்ச்சிகளின் அடிப்படையில் செயல்படும்படியாகவும் சிந்திக்கும்படியாகவும் கற்றுத்தரப்பட்ட ஒரு தலைமுறையாக நாம் இருக்கிறோம். மத்தேயு 20:20–28 வசனங்களில் யாக்கோபுவும் யோவானும் இயேசுவின் வலது மற்றும் இடதுபுறங்களில் உட்காரவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை மற்ற சீஷர்கள் கேட்டபோது அவர்கள் ஒருவருக்கொருவர் பிடிக்காதவர்களாக இருந்தார்கள். யாக்கோபு மற்றும் யோவானின் செயலைக் கண்டு கோபம் கொண்டார்கள். ஆனாலும் தங்களைச் சுற்றியிருக்கும்

உலகம் பதிலளிப்பதைப் போல் அல்லாமல் வேறு வழியில் பதிலளித்து செயல்பட வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

இரண்டாவதாக, ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்று கூறுவதால் அவர்கள் உறவில் சேர்ந்திருக்கவேண்டும் என்றோ நண்பர்களாக இருக்க வேண்டும் என்றோ நாங்கள் கூறவில்லை. ‘‘எங்களுக்கு ஒருவரையொருவர் மிகவும் பிடிக்கும். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். எனவே நாங்கள் சிறப்பான அணியாகச் செயல்படுகிறோம்’’ என்று பலர் கூறுவார்கள். அதற்காகக் கிறிஸ்துவின் மக்களைக் கீழ்ப்படிதல் மற்றும் ஊழியத்தில் நடத்தும்போது எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. நல்ல உறவில் இருப்பதினால் நாம் செயல்பூர்வமான தலைவர்களாகிவிட முடியாது என்றுதான் சொல்லுகிறோன். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளை என்பதால் நாம் ஒரு உறவுமுறையில் இருக்கிறோம். தலைமைத்துவத்தில் தேவனுடைய பிள்ளைகளையும் அவருடைய உலகத்தில் அவர்கள் கொண்டிருக்கும் பொறுப்புகளையும் வழிநடத்தும்படியான உக்கிராணிகளாக நாம் சேர்ந்து செயல்படுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.

திருச்சபையில் இருக்கும் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் ஒரு அம்சமாக இருக்கிறது என்று நாங்கள் எந்த அர்த்தத்தில் கூற வருகிறோம்?

தேவத்துவத்தின் சுபாவமாக ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் இருக்கிறது. பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஒருவரையொருவர் சார்ந்து வழிநடத்துகிறார்கள். எனவே அவர்களே இப்படிப்பட்ட பண்பு எப்படியிருக்கும் என்பதற்கும் அது எப்படிச் செயல்படும் என்பதற்கும் சிறப்பான எடுத்துக்காட்டுகளாக இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சாயலில் இருந்து, அவரைப் போல செயல்படும்படியாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் மக்களைத் தலைமைத்துவத்தைச் சேர்ந்த அணியினர் எப்படி வழிநடத்துகிறார்கள் என்பதைக் காட்டிலும் வேறு எதுவும் தெய்வீக வடிவமைப்பை எடுத்துக் காண்பிக்கும்படியான யுக்தி சார்ந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருக்க முடியாது. சிருஷ்டிப்பு முழுமையையும் தம்மிடம் மறுபடியும் மீட்கும் பிதாவாகிய தேவனுடைய ஒருதலைப்பட்சமான செயலே வேதாகமத்தின் கதையாகும். அவர் முழு திரித்துவமும் சேர்ந்து செய்யும் செயல்களின் மூலமாகவே இதைச் செய்கிறார். பிதாவாகிய தேவன் மீட்பைச் சித்தப்படுத்துகிறார், குமாரனாகிய இயேசு பிதாவானவருக்குக் கீழ்ப்படிந்து மனிதனாக மாறுகிறார், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் குமாரனுடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் மீதும் செயல்படுத்துகிறார். வேதாகமம் முழுவதும் பல இடங்களில் தேவனுடைய திரித்துவத்தின் தெய்வீக வடிவமைப்பு ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுவதை நாம் பார்க்கிறோம்.

இதே வடிவமைப்பு வேறு உறவுகளிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மனிதன் வாழக்கூடிய இடமாக பூமி இருக்கும்படியாகப் போதுமான அளவு சார்ந்திருப்பின் அடிப்படையில் இந்த உலகம் கட்டப்பட்டிருக்கிறது. தேவனால் கொடுக்கப்பட்ட திருமணமானது ஆண் மற்றும் பெண் ஒருவரையொருவர் சார்ந்திருத்தலைக் குறித்ததாக இருக்கிறது. அதில் ஆணும் பெண்ணும் வேறு விதமானவர்களாக இருக்கிறார்கள் ஆனால் இந்த உறவைக் குறித்த தெய்வீக வடிவமைப்பை நிறைவுபடுத்தும் விதத்தில் போதுமான அளவிற்கு ஒன்றுபோலிருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்: இனப்பெருக்கம், நெருக்கமான உறவு, வேலையில் கூட்டுப் பங்காண்மை, மற்றும் கணவன் மற்றும் மனைவியாக தேவனுடைய இரக்கத்தின் இலக்கில் செயல்படுவதின் மூலமாக தேவனுடைய மகிமையை நிறைவேற்றுபவர்களாகச் சேர்ந்து செயல்படுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் இருக்கும் விசுவாசிகளுக்கிடையே இருக்கும் உறவின் சாராம்சமாக ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் காணப்படுகிறது:

> எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது (1 கொரிந்தியர் 12:12–14).

சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தனக்காக வடிவமைக்கப்பட்டிருக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் பெறும்படியாகத் திரித்துவ தேவன் சார்ந்திருக்கும்

வகையில் செயல்படுகிறார்.

> வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, *ஆவியானவர்* ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, *கர்த்தர்* ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (1 கொரிந்தியர் 12:4–6).

ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்பது வெறுமனே உள்ளூர் திருச்சபைகளுக்குள் இருக்க வேண்டும் ஒன்று மட்டும் கிடையாது. அது திருச்சபை என்னும் கிறிஸ்துவின் சரீரம் முழுவதிலும் காணப்பட வேண்டும். திருச்சபை அல்லது தேவாலயம் என்று இன்று நாம் அழைக்கும் ஒன்று முன்பெல்லாம் ஒன்று கூடிய சபை என்று அழைக்கப்பட்டது. அதாவது அது பெரிய புவியியல் சார்ந்த இடத்தைச் சேர்ந்தவைகளின் கூட்டமைப்பாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், ஒரு நகரம் அல்லது பிராந்தியத்தில் இருக்கும் திருச்சபை என்பது ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் சபைகளின் கூட்டமைப்பாக இருக்கிறது. அப்போஸ்தலர்களின் பெரும்பாலான போதனைகளை நாம் இந்த சார்ந்திருத்தலின் அடிப்படையில் பார்க்க வேண்டும். அப்படியில்லையென்றால் புதிய ஏற்பாட்டில் ஈவுகள், அதிகாரம் அல்லது நிதி சம்பந்தமான உக்கிராணத்துவத்தைக் குறித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளை நாம் ஒரு சிறிய வட்டத்திற்குள் அடைப்பதைப் போலாகிவிடும். ஆதாவது உள்ளூர் சபைகள் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டதைப் போலாகிவிடும்.

அதோடு எபேசியர் 4:11 வசனத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் தலைமைத்துவத்தின் ஐந்து செயல்பாடுகள் திருச்சபை என்றும் பெரிய அளவிலான கூடுகைக்கே சிறப்பாக பொருந்துபவையாக இருக்கும். இன்று நாம் அழைக்கும் திருச்சபை என்பது வெறுமனே ஒரு சபை கூடுவதையே குறிப்பதாக இருக்கிறது. எபேசியர் 4:12–16 வசனங்கள் தெளிவாகக் கூறுவதைப் போல இந்தச் செயல்பாடுகள் நல்ல விரிவடைந்த இடத்தைச் சார்ந்ததாகச் சிந்தித்தால் மட்டுமே புரிந்துகொள்ளப்படும் வகையில் இருக்கும். அவை ஒரு பணியைச் செய்வதற்காகவோ அல்லது ஒருவருடைய முக்கியத்துவத்தை மேன்மைப்படுத்துவதற்காகவோ கொடுக்கப்படவில்லை. ஆனால் சபைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும்போது அவை ஒரு பெரிய இடத்தைச் சார்ந்த திருச்சபையின் கீழ் வருகின்றன. அப்படிச் செய்யும்போது அதனுடைய பணியாளர்களுக்கு ஊழியத்தின் பணியைச் செய்வதற்கும், வேதாகமரீதியான சத்தியத்தோடு சேர்ந்து செயல்படவும் உதவி செய்யும் விதத்தில் இருக்கும். தலைமைத்துவம் இந்த வழியில் செயல்படும்போது மக்கள் தாங்கள் செய்வதிலும், செயல்படுவதிலும் தேவனின் பிரதிநிதிகளாக இருக்கும்படியாகத் தேவனால் வடிவமைக்கப்பட்டத் தங்களுடைய நோக்கத்தில் கீழ்ப்படிதலோடு வளர்வதற்கு உதவி செய்யும் வகையில் இருக்கும்.

தம்மைப் பின்பற்றுபவர்கள் கீழ்ப்படிதலில் நடந்து, சுயநலமான பாதுகாப்பை விட்டுவிட்டு தேவனுடைய அழைப்பை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்போது இயேசு அவர்களுக்குக் கொடுக்கும் மனமகிழ்ச்சியைக் குறித்து டி. ஏ. கார்சன் எடுத்துக் கூறுகிறார்:

> மனுக்குல வாழ்வானது கிறிஸ்து இயேசுவில் தேவனுடைய அன்பை அனுபவிக்காதவரையில் இந்த வீழ்ந்துபோன உலகத்தில் மனிதனுடைய மனமகிழ்ச்சி என்பது நிரந்தரம் இல்லாததாகவும், மேலோட்டமானதாகவும், முழுமையடையாததாகவும் இருக்கும். இந்த அன்பிற்காகத் தான் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இந்த அன்பு எந்தத் தயக்கமும் இல்லாமல் கீழ்ப்படிதலினால் ஏற்படுகிற பரஸ்பர அன்பாக இருக்கிறது. குமாரன் தம்முடைய சீஷர்களுக்குத் தம்முடைய மனமகிழ்ச்சியைத் தனித்தனியான தொகுப்பாகக் கொடுக்கவில்லை; அவர்கள் தம்முடைய கீழ்ப்படிதலைப் பகிர்ந்துகொள்ளும்போது அவர் தம்முடைய மனமகிழ்ச்சியைப் பகிர்கிறார், *இந்தக் கீழ்ப்படிதல் சுய விருப்பத்தைத் தாண்டி முழுமனதோடு மரணத்தைச் சந்திக்கும் ஒன்றாக இருக்கிறது*[1].

## ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் செயல்முறையை மேம்படுத்துதல்

தலைமைத்துவம் சில பண்புகளைப் பெற்றிருக்கும்போது ஒருவரையொருவர் சார்ந்து செயல்படும்படி வாழ்வது எளிதாகிறது.

*ஆவிகுரிய அளவில் முதிர்ச்சியடைந்தவர்களிடத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் செயல்பூர்வமாகக் காணப்படுகிறது.* தேவனுடைய வார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு,

கீழ்ப்படிதலுள்ள இருதயத்தைப் பெற்று, மாம்சத்தின் அழிக்கும் உந்துதல்களை எதிர்க்கும் திறனில் வளர்ந்துகொண்டிருப்பவர்கள் முதிர்ச்சியடைந்தத் தலைவர்கள் என்று அழைக்கப்படுவார்கள். தீமோத்தேயுவிற்குத் தான் எழுதிய முதல் கடிதத்தில் பவுல் இப்படிப்பட்ட தலைவர்களைக் குறித்து விளக்குகிறார்:

> கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சிப் பெற்றவனாயுமிருக்கவேண்டும் (1 தீமோத்தேயு 3:1–7).

தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆம், இந்த அசை என்பது தேவனால் வழிகாட்டப்படுவதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அது கெடுதலையே ஏற்படுத்தும்.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் வேத பகுதியில் முதிர்ச்சியடைந்த தலைமைத்துவம் எப்படியிருக்கும் என்ற பண்புகளைப் பவுல் விளக்குகிறார். தலைமைத்துவத்தில் இருப்பவர் நிந்தனைக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். பரிபூரணமானவர் என்று கூறவில்லை ஆனால் அவர் சந்தேகமோ அல்லது குற்றச்சாட்டிற்கோ உட்பட்டவராக இருக்கக்கூடாது. பவுல் இந்தக் கருத்தைக் குறித்து மேலும் சில குறிப்புகளைத் தீமோத்தேயுவிற்கு 1 தீமோத்தேயு 5:19 வசனங்களில் கொடுக்கிறார். சாட்சியில்லாமல் ஒரு மூப்பருக்கு எதிராகக் குற்றச்சாட்டில் நுழையக் கூடாது என்கிறார். ஒரு தலைவர் என்பது ஒரே ஒரு பெண்ணை மணந்தவராக இருக்க வேண்டும். அவர் தம்முடைய மனைவியின் மீது கொண்டிருக்கும் விசுவாசம், உண்மையுள்ள நிலை மற்றும் அக்கறை நன்றாகத் தெரியும் விதத்தில் இருக்க வேண்டும். அது அந்த ஒருவர் மீதுதான் காண்பிக்கப்பட வேண்டும். அவர் மிதமான குணநலனைப் பெற்றிருக்க வேண்டும். எளிதில் கோபப்படுபவராக இருக்கக்கூடாது. எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னையும் மற்றவர்களையும் கையாளக்கூடியவராக இருக்க வேண்டும். அவர் தன்னைக் கட்டுப்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும். சில காரியங்களிலிருந்து தன்னை விலக்கி வைப்பவராக இருக்க வேண்டும். மற்றவர்களை நோக்கிச் செயல்படுபவராக இருக்க வேண்டும். மற்றவர்களால் மரியாதைக் கொடுக்கப்படக்கூடியவராக இருக்க வேண்டும். அதற்காக அவர் எல்லோராலும் விரும்பப்பட வேண்டும் என்று அவசியமில்லை. அவர் மற்றவர்களிடத்தில் தன்னுடைய வீட்டையும், தனிப்பட்ட இடங்களையும் பகிர்ந்துகொள்பவராக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை மற்றவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவி செய்பவராக இருக்க வேண்டும். விசுவாசிகள் தங்களுடைய சமய செயல்பாட்டில் அதிகாரப்படுத்துபவராக இருக்க வேண்டும். அதையே தன்னுடைய பொறுப்பின் மையமாக வைத்திருக்க வேண்டும். அவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருக்கக்கூடாது. அவர் மற்றவர்களிடத்தில் கடுமையாக நடந்துகொள்ளாமல் எல்லாச் சூழ்நிலைகளிலும் மென்மையாக நடந்துகொள்ள வேண்டும். மென்மையாக நடந்துகொள்ளுதல் என்பது எல்லாவற்றிற்கும் சரி என்று சொல்லுதல் என்று கூற முடியாது. அவர் வாக்குவாதம் செய்பவராக இருக்கக்கூடாது. அவர் பணத்தையோ, பதவியையோ, பெருமையையோ, சுய ஆசையில் ஈடுபடுவதையோ விரும்புபவராக இருக்கக்கூடாது. அவர் தம்முடைய குடும்பத்தை நன்றாக நிர்வாகம் செய்பவராக இருக்க வேண்டும். அதிகாரத்திற்குக் கீழ்ப்படியும் பிள்ளைகளே இதற்குச் சாட்சியாக இருக்கிறார்கள்.

இவை எல்லாம் நமக்கு இரண்டு ஆர்வமூட்டும் முடிவுகளைக் கொடுக்கின்றன: தலைவர் என்பவர் தன்னுடைய விசுவாசத்தின் ஆரம்ப நிலையில் இருப்பவராக இருக்கக்கூடாது. அதுபோலத் திருச்சபைக்கு வெளியிலும் கூட அவர் நல்ல பெயரைக் கொண்டவராக இருக்க வேண்டும். தலைவர் ஏன் ஒரு இளம் விசுவாசியாக இருக்கக்கூடாது? மேலே சொல்லப்பட்டுள்ள பண்புகளைப் பெறுவதற்குத் தனிப்பட்ட

ஆவிக்குரிய ஒழுக்கங்களை வளர்க்க வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கு நேரம் தேவைப்படும். இளம் விசுவாசிகளுக்கு நாம் வளர்வதற்கான நேரத்தைக் கொடுக்க வேண்டும். ஒருவேளை நாம் முதிர்ச்சியடையாத தலைவர்களை ஏற்படுத்தி, அதனால் தவறுகள் நேரிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திவிடலாம். தீமோத்தேயுவிற்குப் பவுல் பட்டியலிடும் பண்புகள் தலைமைத்துவத்தில் இருந்து, அது முதிர்ச்சியடைந்துகொண்டே இருந்தால் அதை வெளியில் இருப்பவர்கள் கூட கண்டுபிடித்துவிடுவார்கள்.

திருச்சபையானது தன்னுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் தலைமைத்துவத்தின் அழைப்பு சாத்தானிடத்திலிருந்து விசேஷமான ஆபத்துக்களைப் பெற்றிருக்கிறது. ஆதிகாலத்தினுடையதும், மிகவும் மோசமானதுமான பாவமான பெருமை, தேவனைப் போல இருக்க விரும்புதல் அல்லது தேவனாகவே இருக்க விரும்புதல் போன்ற பாவங்களில் தலைவர் ஈடுபடுவதற்கான ஆபத்து அதிகமாக இருக்கிறது (பார்க்க, எசேக்கியேல் 28:2). விசுவாசத்தின் நற்பெயரைக் கெடுத்து அழிப்பதே சாத்தானின் சிறப்பான வழியாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக அந்த விசுவாசத்தின் பிரதிநிதியாக இருப்பவர்களையே அவன் குறிவைக்கிறான்.

*ஊழியத்தின் விளைபயனைக் குறித்து கவனம் செலுத்தி அதற்காக அர்ப்பணிப்போடு செயல்படுபவர்களிடத்தில் ஒருவரையொருவர் சார்ந்து செயல்படும் திறனான செயல்பூர்வமானதாக இருக்கிறது.* அப்படிப்பட்ட மக்கள் அடுத்தவர்களிடத்தில் காணப்படும் பலதரப்பட்ட வரங்களையும் செயல்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு பாராட்டுபவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவைத் தவிர்த்து கண்ணைமூடிக்கொண்டு ஒரு நபரை நம்புவதைக் குறித்து நான் கூறவில்லை. இந்த அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கை திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் வடிவமைப்பைப் புரிந்துகொள்வதிலிருந்து ஏற்படுகிறது. திருச்சபை தேவனுடைய ரூபமாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய வடிவமைப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு மக்களை வழிநடத்துவது என்பது ஒரு நபரைக் காட்டிலும், ஒரு குறிப்பிட்ட வரத்தைக் காட்டிலும் அல்லது ஒரே ஒரு செயல்பாட்டை அதிகமாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும் அதிகமாகத் தேவைப்படும் என்று ஒரு தலைவரைப் புரிந்துகொள்ளச் செய்யும். விரிவான இட அளவை வைத்துப் பார்க்கும்போது ஏற்கெனவே இருக்கும் சபைகளை இயேசுவைப் போலாக்கி, சுவிசேஷப் பணியைச் செய்து, புதிய சபைகளை உருவாக்கச் செய்வதற்கு இந்த ஐந்து செயல்பாடுகளும் அவசியமானதாகவே இருக்கும்.

*திருச்சபையின் மூலமாக இந்த உலகத்தைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் இலக்கே தங்களுடைய சார்ந்திருத்தலின் முக்கியமான விளைவாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டிருக்கும் மக்களிடத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் செயல்பூர்வமானதாக இருக்கிறது.* இதைத் தவிர்த்துத் தேடப்படும் மற்ற விளைவுகள் எல்லாம் திருச்சபையைக் கிறிஸ்துவின் சாயலாக இருக்க விடாமல் செய்து, தேவன் இந்த உலகத்தைச் சிருஷ்டித்ததன் காரணத்திற்கான பணியைச் செய்யவிடாமல் செய்து, குழப்பம், நோக்கம் பிரளுதல் அல்லது தடை செய்துவிடும்.

நான் முதல் அத்தியாயத்தில் கூறியுள்ளதைப் போல என்னுடைய ஆவிக்குரிய வழிகாட்டிகள் தொடர்ந்து எனக்கு வேத வசனங்கள் மட்டுமே என்னுடைய அடித்தளமாகவும், ஊக்குவிப்பாகவும் இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிக்கொண்டே இருந்தார்கள். தேவன் தம்முடைய தெய்வீக வடிவமைப்பான உறவு மற்றும் பிரதிநிதித்துவத்திற்கு ஆண்களையும் பெண்களையும் மறுசீரமைப்பதற்குத் தேடுவதே வேதாகமரீதியான தேவனுடைய கதைக்களம் என்றும் அதில் தான் திருச்சபையின் நோக்கத்தின் வேர் விட்டிருக்கிறது என்றும் அவர்கள் புரிந்திருக்கிறார்கள். இன்றைய தினத்தில் திருச்சபையில் காணப்படும் பெரும்பாலான மக்கள் திருச்சபையைக் குறித்தும், அதனுடைய நோக்கத்தில் தங்களுடைய பங்களிப்பைக் குறித்தும் தவறான எண்ணத்தைக் கொண்டு அதனால் ஏற்படும் எதிர்பார்ப்புகளினால் ஆட்கொள்ளப்படும்படி தலைமைத்துவத்தினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆதித் திருச்சபையை வரையறுத்த எதையும் இப்படிப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பதில்லை. அதற்குமாறாக அவர்கள் திருச்சபையில் இருக்கும்படியாக அவர்களுக்குப் பிடித்தவாறு இருக்கும்படி எல்லாவற்றையும் தலைமைத்துவம் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கார்களை நிறுத்துவதற்கு வசதியான இடம், பெரிய கட்டிடங்கள், நீண்டு நிகழும் திட்டங்கள் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான ஆராதனை மற்றும் போதனைக் கூட்டங்கள் போன்றவைதான் முக்கியமானவை என்று பெரும்பாலும் மேற்கத்திய திருச்சபை மக்களுக்குப் போதித்திருக்கிறது. மனிதனுடைய உள்ளான தற்காத்தல் தன்மையையும், நம்முடைய கலாச்சாரத்தின் சுயநலத்தையும் ஆதரிக்கும்படியாகத் திருச்சபை இருக்கிறது. இயேசுவின்

வார்த்தைகளின்படி நடக்குமாறு இப்போது தலைமைத்துவம் அழைப்புக் கொடுக்க வேண்டும்.

இது நெடுந்தூரப் பயணமாக இருக்கும்

- பெயரளவு கிறிஸ்தவர்கள் என்று கூறுவதோடு விசுவாசிகள் அல்லாதவர்கள் என்று கூறக்கூடிய அளவில் இருக்கும் பல மக்களுக்கு *மறுபடியுமாகச் சுவிசேஷத்தை அறிவிக்க* வேண்டும்.

- தாங்கள் புரிந்துகொண்டிருக்கும் விசுவாசமானது தவறு என்பதைப் புரிந்துகொள்ளும்படி பல மக்களுக்கு *மறுபடியும் போதிக்க* வேண்டும்.

- தேவனோடு தாங்கள் கொண்டிருக்கும் தினசரி உறவே அவர்களுடைய வாழ்க்கையின் மையமாக இருக்க வேண்டும் என்று எல்லா மக்களையும் *மறுபடியும் கொண்டு* வரவேண்டும்.

*ஒருவரையொருவர் சார்ந்திருத்தலில் ஆவிக்குரிய நடைமுறைகளே மையமாக இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்ட மக்களிடத்தில் சார்ந்திருத்தல் செயல்பூர்வமானதாக இருக்கிறது.* தலைமைத்துவ அணியில் இருப்பவர்களுக்கிடையே நண்புணர்வும், உறவும் முக்கியமானது தான் ஆனாலும் தேவனுக்குச் சொந்தமான மக்களுக்கு மத்தியில் தெய்வீக நோக்கம் மற்றும் பொறுப்பைப் பெற்றே தலைமைத்துவம் அழைக்கப்பட்டிருக்கிறது. முதலில் தேவனுடைய மக்களிடத்திலும், பிறகு அவர் நமக்கு வாழலாம் என்று கொடுத்திருக்கும் உலகத்திலும் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதே தலைமைத்துவமாக இருக்கிறது.

தேவனுடைய மக்களை அவருடைய ஆதி வடிவமைப்பிற்குள் கொண்டு வருவதற்கு போஷாக்குக் கொடுப்பதே தலைவர்களின் வேலையாகும்: அவரோடு உறவு கொள்ளுதல் மற்றும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துதல். இயேசு கிறிஸ்துவில் இந்த ஆதி வடிவமைப்பு மீட்கப்பட்டிருக்கிறது. அவர் புதிய உலகத்தைக் கொண்டு வரும்போது இது முழுவதுமாக மீட்கப்படும். அவருடைய மக்கள் பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்குள் தங்க வைத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் எப்படி வளர வேண்டும் என்று நினைக்கிறாரோ அப்படி வளரும்படியாக அவர்கள் ஒத்துழைப்பார்கள். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், தேவனுடைய மக்கள் தங்களுடைய இரட்சகரான இயேசு கிறிஸ்து சென்ற வழியைப் பின்பற்றி தியாகம் மற்றும் பலியாகக் கொடுக்கும் வாழ்க்கையை வாழலாம். தலைமைத்துவத்தின் பணியே அவர்கள் அப்படிச் செய்யும்படியாக அவர்களுக்கு உதவுவதுதான். ஆவியானவராகிய தேவன் இதைச் சிறிய அளவில் தனிப்பட்ட நபர்களிடமும், பெரிய அளவில் சபைகள் மற்றும் திருச்சபைகளிலும் பயன்படுத்தி தம்முடைய செய்தியைப் பெருகச் செய்து மற்றவர்களைத் தம்மிடம் வரச்செய்வார்.

தாங்கள் அறிக்கையிட்டிருக்கும் விசுவாசத்தின்படி தங்களுடைய வாழ்க்கையை நடத்தும்படியாக இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு உதவி செய்வதே தலைமைத்துவத்தின் அழைப்பாகும். புதிய ஏற்பாடு மற்றும் கிரேக்க அறிஞரான மெரில் டென்னி யோவானின் புத்தகத்திலிருந்து நாம் அறிக்கையிடும் விசுவாசத்திற்கும், நாம் வாழும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் மெல்லிய இடைபடுதலைக் குறித்த வல்லமையான உட்பார்வையை நமக்குக் கொடுக்கிறார்:

> சுவிசேஷங்களில் விசுவாசத்திற்கான கிரேக்க வார்த்தையான என்பது தொன்னூற்றி எட்டு முறைப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது நம்பிக்கை என்றும் சில இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அர்ப்பணிப்பு அல்லது நம்பு என்றும் அர்த்தம் பெறுகிறது. அது ஒரு முன்மொழிதலுக்குச் சம்மதம் கொடுத்தல் என்று ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. சில தனிப்பட்ட உரிமைகளையோ அல்லது ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது நபரின் மீது கொள்ளும் தனிப்பட்ட அர்ப்பணிப்பையோ ஒப்புக்கொள்ளுதல் என்று அர்த்தமாகும். யோவான் தன்னுடைய வாசகர்களை மெய்யான அடையாளங்களாக இருக்கும் வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட சீரமைக்கப்பட்ட விசுவாசத்திற்குள் வழிநடத்த விரும்பினார். அந்த நிகழ்வுகள் அதற்குப் பின்னால் இருக்கும் ஆவிக்குரிய உண்மையையும் குறிப்பிடும்படியாகவும் இருக்கின்றன.
>
> ஜீவன் என்ற வார்த்தையில் முடிவு வெளிப்படுத்தப்படுகிறது. நான்காவது சுவிசேஷத்தின்படி ஜீவன் அதாவது *zoe* என்பதற்கு மிருக உயிர் அல்லது மனித வாழ்வின் பயணம் என்பதற்கும் அப்பால் அர்த்தம் இருக்கிறது. அது மிகவும் கவனமாக இயேசுவானவரால் யோவான் 17:3 வசனத்தில் வரையறுக்கப்படுகிறது... அப்படி வரையறுக்கப்பட்ட ஜீவன் பல அம்சங்களைப்

பெற்றிருக்கிறது. அது உணர்வைக் குறித்துக் குறிப்பாக எடுத்துரைக்கிறது; ஏனென்றால் நாம் இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கும் உணர்வில்லாமல் அறிவு இருக்க முடியாது. மேலும் அது தொடர்பைக் குறிக்கிறது; ஒருவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒன்றோடு தொடர்பு கொள்ளாவிட்டால் அதைக் குறித்துப் புரிந்துகொள்ள முடியாது. மறுபடியுமாக அது தொடர்ச்சி அல்லது கால அளவை உள்ளடக்கியதாக இருக்கிறது ஏனென்றால் தேவனைக் குறித்த அறிவு அவரோடு சகவாழ்வை முன்னிருத்துகிறது. கடைசியாக, அது வளர்ச்சியைக் கருதுகிறது. தேவனைக் குறித்த அறிவு வளரவேண்டும், அது அப்படியே வளர்ச்சியில்லாமல் இருக்கும் என்று கிடையாது. நித்திய வாழ்வு, மனிதனுடைய முழு அர்த்தமே இந்தச் சுவிசேஷத்தின் போதனையின் மைய கருத்தாக இருக்கிறது.[2]

இந்த உலகத்திற்குச் சுவிசேஷத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற கட்டளையை ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் தலைமைத்துவம் தெளிவாகப் பார்க்கிறது. அது அதை நிறைவேற்றுவதற்கு அவசியமானவைகளை நடைமுறைக்கேற்றவாறு செயல்படுத்துகிறது. அவர்கள் பணம், இடம், மக்கள் மற்றும் வாய்ப்புகளை விளைவுகளுக்கு ஏற்றவாறு பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின் பேரில் தினமும் செலவிடுகிறார்கள். புகழ்ச்சியடைதல், எல்லோராலும் விரும்பப்படுதல், மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று உறுதிப்படுத்துதல் மற்றும் நிறைய பொருட்களையும், இடங்களையும் வாங்குவது போன்றவை திருச்சபையின் மிகவும் முக்கியமான பணியிலிருந்து கவனத்தைத் திருப்புபவைகளாக இருக்கின்றன: தேவனுடைய தெய்வீக வடிவமைப்பையும், நம்முடைய இரட்சகரின் கடைசி கட்டளையையும் நிறைவேற்றுவது.

*தலைமைத்துவ அணிகளைப் பரிசுத்த ஆவியானவர் தான் கட்டியெழுப்புகிறார் என்பதை உணர்ந்துகொள்ளும் மக்கள் ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுவதில் செயல்பூர்வமானவர்களாக இருக்கிறார்கள்.* தன்னுடைய சொந்தத் தரிசனத்தை இன்னும் விரிவுபடுத்துவதற்கோ அல்லது அதனுடைய நிகழ்ச்சிகளை வழிநடத்துவதற்கோ உதவிக்காகத் தேடிக்கொண்டிருக்கும் திருச்சபை ஒரு தலைமைத்துவ அணியை உருவாக்கக்கூடாது. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை தேவன் கொடுத்திருக்கும் தெய்வீக அறிவைப் புரிந்துகொண்டு அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களைத் தான் திருச்சபைத் தலைமைத்துவத்திற்கு அழைக்க வேண்டும். அப்படியிருந்தும் தேவனுடைய ஆவியானவரே அவர்களைக் கூட்டிச்சேர்ப்பார் என்பதைத் திருச்சபை நினைவில் கொள்ள வேண்டும். ஆனாலும் உறவுகளையும், மக்களிடம் பிரதிநிதித்துவத்தையும் மீட்டெடுக்கும் தேவனுடைய நோக்கத்தை ஏற்றுக்கொள்பவர்கள் கிடைக்கிறார்களா என்று கவனமாகத் தேடிக்கொண்டிருக்க வேண்டும். தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் திருச்சபை அவ்வளவு நன்றாகச் செயல்படுவதில்லை. ஆனால் தேவனால் தலைமைத்துவத்திற்காக அழைக்கப்பட்டவர்கள் இந்த உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களைக் கண்டுபிடித்து, தரிசனமளித்து, பயிற்சியளித்து, வெளியே அனுப்பும்படியாகக் காத்திருக்கிறார்கள். அவர்களிடம் நம்மை வழிநடத்துமாறு ஆவியானவரைக் கேட்பதே நம்முடைய பணியாகும்.

## தலைமைத்துவத்திற்கென்று ஒரு தனித்துவமான அழைப்பு

ஒருவருக்கொருவர் சார்ந்து செயல்படுவதை இன்னும் செயல்பூர்வமாக்கும் கடைசி குறிப்பானது இன்னும் விரிவாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. *எபேசியர் 4:11 வசனத்தில் காணப்படும் ஐந்து செயல்பாடுகளைக் கொண்டவர்களையும், சில செயல்பாடுகளை மட்டும் கொண்டவர்களையும், கிறிஸ்துவின் மீதமிருக்கும் மக்களோடும், 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் சொல்லியதைப் போல ஆவியின் எல்லாக் கனிகளையும் பெற்றவர்களோடும் ஒப்பிட்டுப்பார்க்காத மக்களிடத்தில் சார்ந்து செயல்படுவது செயல்பூர்வமானதாக இருக்கும்.* தலைமைமைத்துவ செயல்பாடுகளைக் கொண்டவர்களும் கிறிஸ்துவின் சரீரத்தின் பிற உறுப்பினர்களும் ஒருவருக்கொருவர் சார்ந்து செயல்பட வேண்டும். ஆனால் எபேசியர் 4:11 வசனத்தில் காணப்படும் ஐந்து செயல்பாடுகளையும் செயல்படுத்துபவர்கள் மூன்று கருத்துக்களை சரீரத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு எதிர்மறையாகச் செயல்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள்.

முதலாவது, எபேசியர் 4:11 வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தலைமைத்துவ செயல்பாடுகளைச் செயல்படுத்தும்படியாக அழைக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவால் அவருடைய திருச்சபையை ஊழியத்திலும் கிறிஸ்துவிலும் அவருடைய வார்த்தையிலும் வாழும்படியாக மக்களிடையே விழிப்புணர்வதை

ஏற்படுத்துவதற்கு உதவுவதிலும் செயல்படும்படியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்: பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (எபேசியர் 4:12–13).

இரண்டாவதாக, இந்த ஐந்து செயல்பாடுகளைக் கொண்டவர்களுக்கு ஆவியானவர் ஈவுகளைக் கொடுக்கிறார் ஏனென்றால் முதலில் இவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகவும், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு தலைவரும் ஒரு செயல்பாட்டைச் செயல்படுத்தும்படியாகப் பெற்றிருந்தாலும் ஒவ்வொருவரும் தங்களுடைய ஊழியத்தைத் தனித்துவமாகக் காண்பிக்கும்படியாக வரங்களையும் பெற்றிருப்பார்கள். தலைமைத்துவ அணி பெற்றிருக்கும் வரங்கள் ஒரு அழகான நிறத்திட்டுக்களின் வடிவமைப்பாக மாறிவிடுகிறார்கள். வெவ்வேறு திட்டுக்கள் பரிசுத்த ஆவியானவரால் சரீரத்தில் சேர்க்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, சரியான வகையில் பொறுத்தப்படுகின்றன. அவை பிதாவானவருடைய சித்தம் சிறப்பாக நிறைவேறுவதற்குப் பயன்படும்படியாக இந்த உலகத்தில் வைக்கப்படுகின்றன. தலைமைத்துவம் தன்னுடைய செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கான இயந்திரமாக இந்த வரங்கள் இருக்கின்றன என்று நாம் கூறலாம்.

*அப்போஸ்தல செயல்பாடு சுவிசேஷம் தொடர்ந்து விரிவுபடுத்தப்படுவதை நடப்பிக்கிறது.* அதிலும் குறிப்பாக புதிய இடங்களில் செயல்படுத்தி, புதிய திருச்சபைகள் ஸ்தாபிக்கப்படுவதை விளைவிக்கிறது. *தீர்க்கதரிசன செயல்பாடு* முழுமையாக முடிக்கப்பட்ட சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஆபத்துக்களைக் குறித்துத் திருச்சபைக்கு அறிவித்து, தேவையான இடங்களில் திருத்தங்களை எடுத்துரைத்து, கிறிஸ்துவின் சரீரத்தைக் கீழ்ப்படிதலுக்குள் வைக்க உதவுகிறது. *சுவிசேஷ செயல்பாடு* சுவிசேஷத்தின் பண்பு சரீரத்திற்குள்ளும், அதன் வழியாகவும் செயல்பட உதவுகிறது. இந்தச் செயல்பாட்டைக் கொண்டவர்கள் கிறிஸ்துவிற்காக ஜெயிக்கப்பட்ட புதிய மக்களைச் சந்திப்பார்கள். அதுபோலவே அவர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட சாட்சியைக் குறித்து திருச்சபைக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருப்பார்கள். *போதகத்துவ செயல்பாடு* மக்களைக் குறித்து அக்கறைக் காட்டும் செயலைச் செய்கிறது. ஒருவருக்கொருவர் தங்களுடைய தேவைகளை அறிந்துகொள்ளும்படி செய்கிறது. தனிப்பட்ட உறுப்பினர்களால், அவர்களுக்காக, அவர்களின் மூலமாகச் செயல்களைச் செய்கிறது. *கற்பிக்கும் செயல்பாடு* ஒவ்வொரு உறுப்பினரும் இணைக்கப்பட்டிருப்பதும், அவர்கள் வாழும் எல்லைகளும் வேதாகமரீதியான சத்தியத்தின் அடித்தளத்தில்தானா என்பதை உறுதிப்படுத்தும் தேவையைக் குறித்ததாக இருக்கிறது. தலைமைத்துவ அணியின் நிறத்திட்டுக்களின் வரங்கள் தனித்துவமானவைகளாகவும் வேறுபட்டவைகளாகவும் இருப்பதால் ஒவ்வொருவரும் தங்களுடைய செயல்பாடுகளைச் செயல்படுத்துவது தனித்துவமானதாகவும் வேறுபட்டும் இருக்கும்.

மூன்றாவதாக, நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போல இந்த ஐந்து செயல்பாடுகளையும் பெற்றவர்கள் சபையில் பெரும்பாலான உறுப்பினர்களைப் போல வெறுமனே உள்ளூர் சபைகளுக்காக மட்டும் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் பரந்துவிரிந்த வாழ்க்கைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். பவுல், யோவான், பேதுரு மற்றும் யாக்கோபு போன்றவர்கள் தங்களோடு பணியாற்றுவதற்குக் குழுக்களை வைத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் இருக்கவில்லை[3]. (ஆதியில் அனுப்பப்பட்ட அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவால் நேரடியாக அனுப்பப்பட்டார்கள். இன்றைய தினத்தில் எபேசியர் 4:11 வசனத்தில் உள்ள செயல்பாடுகளைக் கொண்டவர்கள் கிறிஸ்துவால் நேரடியாக அனுப்பப்படுவதோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதோ கிடையாது. அவர்கள் திருச்சபையின் மூ லமாக அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்). அதனால் நாம் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட தலைமைத்துவம் பரந்துவிரிந்து செயல்பட்டதை இன்று நமக்கு உள்ளூர் திருச்சபையில் காணப்படும் தலைமைத்துவம் செயல்படுத்த வேண்டும் என்று நாம் குழப்பிக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.

எபேசியரை விளக்கமாகப் புரிந்துகொள்வதின் மூலமாகவும், அதிலும் குறிப்பாக எபேசியர் 4ஆம் அதிகாரத்தைப் புரிந்துகொள்வதின் மூலமாகவும் இந்த ஐந்து செயல்பாடுகளும் உள்ளூர் திருச்சபைத் தலைமைத்துவத்திற்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நினைப்பது குறைந்திருக்கிறது. பவுல், பர்னபா, பேதுரு மற்றும் பிறரிடம் நாம் பார்க்கும்போது தலைமைத்துவம் ஒரு நேரத்தில் ஒரு உள்ளூர் இடத்தில் இணைக்கப்பட்டிருந்தாலும் அவர்களுடைய ஊழியமானது பரந்துவிரிந்த இடத்தைக் கொண்டதாகவே இருந்தது. புதிய ஏற்பாட்டுத் தலைவர்கள் ரோம ராஜ்யம் முழுவதிலும் செயல்பட்டு, கவனம் செலுத்தினார்கள்.

தோமா இந்தியா முழுவதையும் பார்த்துக்கொண்டார். அவர்கள் முழு உலகத்திலும் செயல்பட்டார்கள். இந்த ஐந்து செயல்பாடுகளையும் செயல்படுத்தும்படியாக அழைக்கப்பட்டவர்கள் மக்கள் நினைப்பதைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்களுடைய எளிதான மற்றும் பரந்துவிரிந்த இடங்களுக்குச் செல்லும் பணியானது மற்றவர்களோடு ஒத்துழைப்போடு செயல்படும்போது இந்த உலகம் முழுவதையும் சென்றடைய வேண்டும் என்று எல்லோரையும் கேட்பதாக இருக்கவில்லை.

இந்தச் செயல்பாடுகளைக் கொண்ட நபர்கள் ஆவியானவரால் கொடுக்கப்படும் வரங்களையும் பெற்றிருப்பதால், கிறிஸ்துவின் மக்கள் அனைவரையும் போல அவர்களுடைய செயல்பாடுகளில் பல அவர்களுடைய வரங்களின் மூலமாக உள்ளூர் அளவில் செயல்படுத்தப்பட முடியும். எடுத்துக்காட்டாக, திருச்சபையின் அப்போஸ்தல பண்பைக் குறித்து நன்றாக அறிந்திருக்கும் ஒரு தலைவர் அந்தத் திருச்சபைக்கு அருகில் இருக்கும் இடங்களில் ஊழியத்தை விரிவடையச் செய்து புதிய திருச்சபைகளை ஸ்தாபிக்க உதவி செய்யலாம். சுவிசேஷத்தை அறிவிக்கும் வரத்தைப் பெற்றிருக்கும் தலைவர் தான் இருக்கும் இடத்தின் அருகில் இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து அவர்களைக் கிறிஸ்துவிற்காக ஜெயித்துக் கொடுக்கலாம். திருச்சபைப் பெற்றிருக்கும் சாட்சியின் கட்டளையை அதற்கு எடுத்துரைக்கலாம்.

இன்றைய தினத்தில் திருச்சபைத் துண்டு துண்டாக இருப்பதே திருச்சபையில் எபேசியர் 4:11இல் கொடுக்கப்பட்டிருக்கும் செயல்பாடுகளைப் புரிந்துகொண்டு செயல்படுத்துவதில் காணப்படும் கடினமான காரியமாக இருக்கிறது. உள்ளூர் திருச்சபைகள் கிறிஸ்துவின் சரீரத்தின் முழுமையான மற்றும் தனித்துவமான வெளிப்பாடுகளாக இருக்கின்றன என்று பலர் நினைக்கிறார்கள். எனவே உள்ளூர் பின்னணியில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்ற முக்கியமான ஒன்று தொலைந்துவிடுகிறது. திருச்சபையானது மில்லியன் துண்டுகளாக உடைந்திருக்கிறது. ஆனால் பெரிய திருச்சபையில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் இருந்ததாகப் புதிய ஏற்பாடு காண்பிக்கிறது.

வேதாகமத்தில் உள்ள நிருபங்கள் இன்று நாம் திருச்சபை என்று அழைக்கும் ஒன்றிற்காக எழுதப்படவில்லை. அவை இன்று நாம் ஒரு குறிப்பிட்ட நகரத்திலோ அல்லது பிராந்தியத்திலோ இருக்கும் சபைக் கூட்டத்திற்காக எழுதப்பட்டவையாக இருக்கின்றன. இந்தச் சபைகள் மூப்பர்கள் மற்றும் டீக்கன்மார்களால் வழிநடத்தப்பட்டிருக்கும். அவைகளில் சில திருச்சபைகள் உள்ளூர் பின்னணியைக் காட்டிலும் சற்று விரிவடைந்த இடங்களையும் பார்த்துக்கொண்டிருக்கும். எனவே அப்போஸ்தலரோடு பணியாற்றிக்கொண்டிருந்த அணியினர், அவர்கள் பெரும்பாலும் பரந்துவிரிந்த இடங்களில் சுவிசேஷத்தை அப்போஸ்தலரீதியாக விரிவடைவதற்காகப் பணியாற்றுபவர்களாக இருந்திருப்பார்கள், சுவிசேஷம் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது ஸ்தாபிக்கப்பட வேண்டிய உள்ளூர் இடங்களுக்கு வந்துபோய் இருந்தார்கள். அவர்கள் சென்ற அந்த இடங்களில் இருந்தத் திருச்சபைகளுக்குத் தேவனுடைய வார்த்தையை அவர்கள் புரிந்துகொள்ளும் தன்மையை மேம்படுத்துவதற்கும், அவர்கள் அழைக்கப்பட்டிருப்பதற்குள் இயேசுவின் வாழ்வை உட்புகுத்துவதைப் புரிந்துகொள்ளும் தன்மையை மேம்படுத்துவதற்கும் உதவி செய்தார்கள். மதங்களுக்கு எதிராகச் சொல்லப்படும் கொள்கைகளிலிருந்தும், மதவெறியர்களிடத்திலிருந்தும் சரீரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான வேதாகமரீதியான எல்லைகளைத் திருச்சபைகள் புரிந்துகொள்வதற்கு உதவி செய்யவும் இந்த அனுப்பப்பட்டவர்கள் உதவி செய்தார்கள். இந்தச் சபைகளில் இருந்த மக்களின் வாழ்க்கை மற்றும் சாட்சியின் மூலமாகச் சுவிசேஷம் விரிவடையச் செய்வதைத் தொடர்ந்து செய்தார்கள்.

நேரம், வரலாறு, மதவெறி, அதிகமாக ஒழுக்க வடிவத்தைப் பெற்ற திருச்சபை வாழ்க்கை மற்றும் மனிதனுடைய தற்பெருமை போன்றவை அமெரிக்கத் திருச்சபையை வேதாகமரீதியான வடிவமைப்பிலிருந்து பிரித்துவிட்டன. நாம் அது மீண்டும் நிலைநிறுத்தப்படுவதைப் பார்ப்போமா? எனக்குத் தெரியாது. ஆனால் அதைக்குறித்து இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்வது தேவனை நாம் விசுவாசிப்பதற்கு அழைப்புக் கொடுத்து மீண்டும் நிலைநிறுத்துவதற்கான முயற்சியைச் செய்கிறது.

திருச்சபையின் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்பது திரித்துவ தேவனின் சுபாவத்தை வெளிப்படுத்துவதைப் போன்றதாகும். ஒவ்வொருவரும் வெவ்வேறு செயல்பாட்டைச் செயல்படுத்துவார்கள் ஆனால் அதனுடைய விளைவின் மூலமாக மற்றவர்களோடு ஐக்கியப்பட்டிருப்பார்கள். எது அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது அல்லது எது மிகவும் முக்கியமானது அல்லது யுக்தி சார்ந்தது என்று கேட்பது வேதாகமரீதியாகப் பார்த்தால் முட்டாள்தனமாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு தலைவரின் முக்கியத்துவமும் அவர் அந்தத் திருச்சபைக்கான ஈவாகத் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதில் வரையறுக்கப்படுகிறது. அப்படியே அது ஒவ்வொரு தலைவரின் பங்களிப்பையும் வரையறுக்கிறது.

எல்லாவற்றிலும் முக்கியமாக தேவன் அந்தத் தலைவருக்குக் கொடுத்த தரிசனத்தின் விளைவை வரையறுக்கிறது.

தம்முடைய பிள்ளைகளுக்கு மத்தியில் விசுவாசத்தைப் பிறப்பிக்கச் செய்து அதை வளர்ப்பதற்காகவே தலைமைத்துவத்தை வைத்திருக்கிறார். தலைமைத்துவம் இரட்சிப்பை ஏற்படுத்துவதில்லை, அது தேவனால் மட்டுமே கூடும். ஆனால் தலைமைத்துவம் மற்றவர்கள் விசுவாசத்தைப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, அதில் வளர்வதற்கு உதவி செய்கிறது. இந்த உலகம் முழுவதிலும் இரக்கம் விரிவாக்கப்படுதல் என்ற விளைபயனானது வேலையிடங்கள், திருமணம், குடும்பங்கள் மற்றும் சபைகளில் இருக்கும் தேவனுடைய மக்கள் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் முதிர்ச்சியடைந்து, அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் வளர்ச்சியடையும்போது செயல்பூர்வமானதாக இருக்கும்.

இயேசு தம்முடைய சீஷர்களிடம், ‘‘உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது’’ என்ற அழுத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தியது ஆச்சரியமான காரியமாக இல்லை.

# 7

# அமெரிக்கத் திருச்சபை இப்போது என்ன செய்ய வேண்டும்?

நாம் இப்போது என்ன செய்யலாம்? அமெரிக்கத் திருச்சபையின் வடிவமைப்பில் இருக்கும் பெரிய பிரச்சினைகளை நாம் பார்த்துவிட்டோம். இவைகளையெல்லாம் கையாண்டு தேவனுடைய நோக்கத்திற்கு ஏற்றவாறு செயல்படும் திருச்சபையாக நாம் எப்படி மாறுவது?

அமெரிக்கத் திருச்சபையில் காணப்படும் எல்லாவற்றையும் மாற்றவேண்டும் என்று நான் வாதிடவில்லை. ஆனால் நம்முடைய தற்காலத்திய மேற்கத்திய திருச்சபை வடிவமைப்பானது விசுவாசிகள் எப்படிச் சிந்திக்கிறார்கள், எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதின் மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன். நாம் சரியான செய்தியைக் கொண்டிருந்தாலும், நாம் *எப்படி* செயல்படுகிறோம் என்பது நாம் சொல்லுவதை மறைத்துவிடும்.

கடந்த சில வருடங்களாக மேற்கத்திய உலகத்தில் காணப்படும் திருச்சபையில் இருக்கும் மிகப்பெரிய தவறாகக் கருதப்படுவது அது பொருத்தமாக இருக்க வேண்டும் என்ற முயற்சியை எடுப்பதுதான். நம்மைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு ஏற்றாற்போல நாம் இருந்தோமானால் அவர்கள் இயேசுவின் மீதும் திருச்சபையின் மீதும் அதிகமான ஆர்வத்தைப் பெறுவார்கள் என்று பலர் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்கள் (சில நேரங்களில் திருச்சபையின் மீது கொள்ளும் ஆர்வமே மக்களின் எண்ணங்களில் மேலோங்கியிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்)!

இன்றைய தினத்தில் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பது திருச்சபையின் முக்கியமான தேவை கிடையாது. சுவிசேஷத்தை மக்கள் பெற்றுக்கொள்ளும்படியான அணுகுமுறையைக் கொடுப்பதுதான் உண்மையான தேவை. திருச்சபையானது ஏற்கெனவே வேதாகமரீதியாகவும், யுக்திரீதியாகவும் மக்கள் அணுகும் வகையில் பெரும்பாலான மக்களுக்கு இருக்கிறது என்பதுதான் இதில் புதிராக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் படிக்கிறார்கள், வேலை செய்கிறார்கள், சுற்றுலா செல்கிறார்கள், இந்த உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் பெரும்பாலும் தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாகவோ அல்லது தங்களைச் சுற்றியிருப்பவர்களோடு தொடர்புகொள்ள விரும்பாதவர்களாகவோ இருக்கிறார்கள். ஆனாலும் கிறிஸ்துவிற்குள் வரும் பெரும்பாலான மக்கள் தாங்கள் ஒரு கிறிஸ்தவரோடு கொண்ட உறவின் மூலமாகத்தான் யார் ஆண்டவர் என்று புரிந்துகொண்டு, அவரைக் குறித்தச் செய்தியைக் கேட்டதாகக் கூறுகிறார்கள்.

தற்காலத்திய திருச்சபையானது எப்படிப்பட்ட ஆராதனை நடத்துகிறோம், பிரசங்கிக்கிறோம், கட்டிடங்களைக்கட்டுகிறோம், தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம், ஏன் கார்களை நிறுத்துவதற்கு இடம் ஏற்படுத்துகிறோம் என்பதில் பொருத்தமாக இருக்க வேண்டும் என்று கூறுவது நம்முடைய திருச்சபைக்குப் பிற கிறிஸ்தவர்களை இழுப்பதற்காகத் தான் என்று நான் சந்தேகம் கொள்கிறேன். அவர்கள் தாங்கள் ஏற்கெனவே வைத்திருக்கும் கிறிஸ்தவர்களைத் தங்களிடத்திலிருந்து செல்லாதபடி பார்த்துக்கொள்ளவும் நினைக்கிறார்கள். அவர்கள் தொலைந்துபோனவர்களை மந்தைக்குள் கொண்டு வர வேண்டும் என்று நினைக்கவில்லை. நாம் சலிப்பு மிகுந்த மக்களாக இருக்கிறோம். நாம் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு சலிப்படைகிறோம். அதனால் அதைத் தயாரிப்பவர்கள் நம்மைக் கவர்வதற்குப் பல வழிகளைக் கையாளுகிறார்கள். நாம் நம்முடைய வேலைகளில் சலிப்படைகிறோம். அதனால் புதிய வேலைகளைத் தேடுகிறோம். நாம் நம்முடைய வீடுகளைக் கண்டு சலிப்படைகிறோம். அதனால் நம்முடைய சுயத்தை மையமாகக் கொண்டு தேவைகள் என்ற போர்வையைப் போர்த்தியிருக்கும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்வதற்கு புதிய வீடுகளை வாங்குகிறோம். நாம் நம்முடைய திருச்சபைகளைக் கண்டு சலிப்படைந்திருக்கிறோம். அதனால் நாம் உணர்ச்சிப்பூர்வமான "பொருத்தத்தைப்" பெற்றிருக்கும் புதியவைகளைத் தேடுகிறோம். ஆராதனையை மேம்படுத்தவேண்டும், பிரசங்கத்தை மேம்படுத்தவேண்டும், சிறுபிள்ளைகளின் நிகழ்ச்சியை மேம்படுத்தவேண்டும், சிறப்பான கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று

நாம் சந்தித்துச் செலவிடும் நேரம் மற்றும் பணம் நமக்காக நாம் செலவழிப்பதாக இருக்கிறது.

பொருத்தமாக இருக்க வேண்டும் என்று திருச்சபைத் தலைத்தெரிக்க ஓடிக்கொண்டிருந்தாலும் ஆய்வுகள் தொடர்ந்து மூன்று முற்றிலும் உண்மையான காரியங்களை எடுத்துரைக்கின்றன. முதலாவது, மேற்கத்திய நாடுகளில் திருச்சபைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கைக் குறைந்து மிகவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது, நாம் நம்முடைய திருச்சபைக்குள் இழுக்க வேண்டும் என்று நினைக்கும் இங்கும் அங்குமாக அலைந்துகொண்டிருக்கும் மக்கள், அவர்கள் உணர்ச்சிக் குறைவான திருச்சபையில் இருக்கலாம் அல்லது தற்போது புகழ்பெற்றுவரும் ஒன்றான ‘‘சபை இல்லாதவர்களாக’’ இருக்கலாம், புதிதாக வரும் திருச்சபையில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் இருப்பதில்லை. அவர்கள் மறுபடியுமாக இடம்பெயர்கிறார்கள்! அவர்களில் பலர் இரண்டு அல்லது மூன்று முறை இடம்பெயர்ந்தபிறகு எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கும் சபை இல்லாதவர்கள் பட்டியலில் சேர்ந்துவிடுகிறார்கள். மூன்றாவது, நாங்கள் இயேசுவிற்குச் சொந்தமானவர்கள் என்று சொல்பவர்களின் எண்ணிக்கை அதிகப்படுவதைக் கொண்டு இது அளவீடு செய்யக்கூடிய பக்தி என்று சொல்லமுடியாது. ஒழுக்கம் அதிகமாக இப்போது காணப்படவில்லை. திருமணங்களில் அன்புறுதியும் நம்பிக்கையும் இப்போது அதிகமாகக் காணப்படுவதில்லை. அதிகமாகிக்கொண்டே வரும் திருச்சபைத் தலைவர்களும்கூட இப்போது ஒழுக்கரீதியாக உள்நோக்கி வெடிக்கும் நிலையில் இருக்கிறார்கள்.

இதில் கடைசியாகப் பேசப்பட்டதைக் குறித்து நான் அதிகம் கவலைப்படுகிறேன். மக்களுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டிலும் அவர்கள் அணுகும்படியாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய முக்கியமான தேவையாக இருந்தால், தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கைச் செய்பவர்கள் இந்த உலகத்தில் எப்படி வாழ்கிறார்கள் என்பது முக்கியத்துவம் பெறுகிறது. சுவிசேஷத்தை அறிவித்ததில் இது நடைமுறைசார்ந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இந்தப் பிரச்சினையின் புதிர் இதுதான்: ‘‘நாங்கள் உங்களுடைய எதிர்பார்ப்புகளைச் சந்திப்போம்’’ என்று பொருந்துவதை மையமாகக் கொண்டு மேற்கத்திய திருச்சபை இப்போதும் தன்னை வடிவமைத்திருக்கிறது. இதனால் தேவன் திருச்சபையை எப்படி வடிவமைத்தாரோ அது மாறிவிட்டது. அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் தங்களைச் சுற்றியிருக்கும் மக்கள் அணுகும்படியான கருவிகளாக இருக்க வேண்டும் என்ற செய்தி மறைக்கப்பட்டிருக்கிறது. அது முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்றுகூட சொல்லலாம்.

## பொருந்தும்படியாக முயற்சித்தலும் அதனுடைய விளைவுகளும்

பொருந்தும்படியாக முயற்சித்தலினால் ஏற்படும் பிரச்சினைகள் இரண்டு வகையாக இருக்கின்றன.

முதலாவது, நம்முடைய கலாச்சாரம் திருப்தியடைவதற்கு ஏற்றவாறு நம்முடைய திருச்சபைகள் செயல்படும்போது சுவிசேஷத்தின் அடிப்படை செய்தி உருக்குலைந்து, ஏமாற்றமளிப்பதாகிவிடுகிறது. வேதாகமத்தின் நற்செய்தி இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வாக்குத்தத்தமே சுவிசேஷத்தின் முக்கியமான பங்காக இருக்கிறது. ஆதியாகமத்தின் அதிகாரங்களில் காணப்படும் சிருஷ்டிப்பு மற்றும் மனிதனுடைய வீழ்ச்சியிலிருந்து துவங்குகிற இந்த வாக்குத்தத்தம் இதுதான்: தேவனே மனிதனுடைய கீழ்ப்படியாமையின் விளைவுகளை மாற்றியமைப்பார். தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து, அவர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் தம்மோடு உறவில் இருக்கவேண்டும் என்றும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்றும் விரும்பினார். கடைசி ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவில் தேவனால் வடிவமைக்கப்பட்ட இந்த இரண்டும் தம்மை விசுவாசிக்கும் ஆதாம் மற்றும் ஏவாளின் பிள்ளைகளிடத்தில் சீரமைக்கப்பட்டது. எனவே திருச்சபையின் கவனம் மிகவும் தெளிவாக இருக்கிறது: ‘‘நீங்கள் தேவனோடு உறவாட விரும்புகிறீர்கள், அப்படியானால் நீங்கள் அவருடைய பிரதிநிதிகளாக இருக்க விரும்புகிறீர்களா?’’ என்று நாம் மக்களிடம் கேட்க வேண்டும். இல்லை என்று ஒரு நபர் பதிலளித்தார் என்றால் அந்த நபர் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்று அர்த்தம்!

இரண்டாவதாக, அதிகமான போதகர்கள் சுவிசேஷத்தின் மைய நோக்கத்தை கெடுத்துவிட்டார்கள். அவர்கள் சுவிசேஷத்தின் கதையைப் பொருத்தமாக இருக்கவேண்டும் என்று பேசி பேசி அதனுடைய மைய செய்தியைக் குலைத்துத் தவறான கருத்துக்களைக் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் இப்படிச் சுவிசேஷத்தை அறிவிப்பது ஒரு விளைவையும் ஏற்படுத்துவதில்லை. அவர்கள் இறந்துபிறந்த பிள்ளைகளைப் போல இருக்கிறார்கள்.

இப்படி இறந்துபிறந்தவர்களைப் போல இருப்பவர்கள் ஒரு உள்ளூர் சபையில் இருந்துகொண்டு அந்தச் சபைக்கு அழுத்தம் கொடுப்பார்கள். அவர்கள் “எங்களுக்கு ஏற்றாற்போல சூழ்நிலையை உருவாக்குங்களேன்” என்ற ஒரு நிலையை உருவாக்குவார்கள். அதனால் திருச்சபையானது இப்படிப்பட்டவர்களுக்கேற்றவாறு பொருந்தும்படியாக கலாச்சாரரீதியாக ஒத்துப்போகும்படியாக முயற்சி செய்கிறது. இப்படிப்பட்டவர்கள் மெய்யான வேதாகம சத்தியங்கள் மற்றும் சவால்களால் சலிப்படைகிறார்கள். அவர்களால் சிலர் வேதாகமத்திலுள்ளவைகளை நாவுக்கினிய வகையில் எடுத்துரைக்கும் நிலையும் ஏற்படும். மீண்டும் உருவாக்கப்படாத மக்களுக்கு நாவுக்கினிய வகையில் இருக்கும்படியாக வேதாகமம் இருக்கவில்லை. அது அவர்களுக்குக் குற்றஉணர்ச்சியைக் கொடுப்பதற்காகவே இருக்கிறது. டைட்ரிக் போன்ஹிஆப்பர் தம்முடைய புத்தகமான *Ethics* அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுவிட்டார்கள் என்று அவமானப்படும்படியாகவும், அப்படியிருக்கும்போது தேவன் நம்மைச் சிருஷ்டித்த நிலையிலிருந்து குறைவுபட்டவர்களாகிவிட்டோம் என்பதை உணரும்படியாகவுமே இருக்கிறது என்று கூறுகிறார்.

திருச்சபைத் தன்னை எப்படி வடிவமைக்கிறது என்பதைச் சார்ந்து இவை எப்படியிருக்கிறது? பல முக்கியமான சிந்தனைகள் எனக்குத் தோன்றுகின்றன:

முதலாவது, பொருத்தமாக மாறுதல் என்பதின் மையக் கவனம் பொழுதுபோக்காக இருப்பதாக இருக்கிறது. அப்படியானால் திருச்சபையானது தன்னுடைய செய்தியையும், பின்னணியையும் தேவனுக்கு எதிராக முரண்பாடு கொண்டு கலகம் செய்யும் கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம். வேதாகமத்தில் தேவன் பேசி, பாதுகாத்திருக்கும் காரியங்களை அவரைக் காட்டிலும் சிறப்பாக நம்மால் எடுத்துரைக்க முடியுமா? வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு, உயிரூட்டப்பட்டு, “தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது” (எபிரெயர் 4:12) என்றால் அதைச் “சிறப்பானதாக்குவது” நம்முடைய பணியா அல்லது வெறுமனே அதைத் தெளிவுபடுத்துவது நம்முடைய பணியா? இன்றைய பிரசங்கங்கள் ஒருங்கிய, சிதைக்கப்பட்ட, கற்பனையூட்டப்பட்ட மற்றும் பேச்சுதிறனை வெளிக்காட்டுபவையாக இருக்கின்றன. அவை தேவன் ஏற்கெனவே கூறியதைத் தெளிவாக எடுத்துரைப்பதற்குப் பதிலாக மக்களுக்கு என்ன பிடிக்கும் என்பதை நோக்கியே கவனம் செலுத்துகின்றன.

இரண்டாவதாக, நாம் பொருத்தமாக இருக்க வேண்டும் என்று எடுக்கும் முயற்சிகள் நம்முடைய சபை சூழ்நிலையும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்ற நிலையை இயற்கையாகவே அடையச் செய்கின்றன. வேதாகமத்தில் போதிக்கப்படும் போதனைகளை நாம் தெளிவாகவும், மாற்றம் இல்லாமலும் பார்க்கும்போது தன்னுடைய சபைகள் இருக்கும் சூழ்நிலையைக் குறித்துத் திருச்சபைகள் எடுக்கும் முடிவுகள் தேவனுடைய செய்திக்கு நேர் எதிர்மறையானதாக இருப்பதை அறிந்துகொள்வார்கள்.

பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு எடுக்கப்படும் முடிவுகள் வெளிப்படையாக எளிதில் கண்டுபிடிக்கப்படும் வகையில் இருக்கும். எடுத்துக்காட்டாக, தங்க மூலாம் பூசிய பேச்சாளர்கள் நம்முடைய மத்தியில் தேவன் பெற்றிருக்கும் இடத்திற்கு நிகரான இடத்தைப் பெற்றவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் ஆராதனைக் குழுவும் செல்லும் திருச்சபைகள் தங்களுடைய கூட்டங்களை இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் கூடும் இடத்தைப்போல் அல்லாமல் ஒரு இசைக் கச்சேரியைப் போல் ஏற்பாடு செய்திருப்பார்கள். புகை மண்டலமும், இருண்ட மேடைகளும், ஆராதனை செய்யும் குழுவின் சத்தமான குரல்களும், முக்கியமான நேரமும் கவனமும் ஒரே ஒரு பேச்சாளருக்குக் கொடுக்கப்படும் விதமும் இயேசுவையே பின்பற்றுவோம் என்ற பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று தேவனுடைய ஆவியானவர் கூறுவதைக் கேட்பதற்கு எதிரானதாக இருக்கிறது. சபையார் யாவரும் தங்களுடைய வாழ்க்கையில் உள்ள பரிசுத்தத்தை வெளிப்படுத்தாத பாடல்களைப் பாடுகிறார்கள். அவர்களுடைய நோக்கத்தைக் கூட அந்தப் பாடல்கள் வெளிப்படுத்துவதில்லை. சிரிப்பூட்டும் கேலிகளும், ரசிக்கும்படியான கதையும், அழகான காணொலியும் இருப்பதால் மக்கள் அந்தப் பிரசங்கங்களைக் கவனிக்காமல் இருந்தாலும் கூட தங்களுக்குப் பிடிக்கும் என்று கூறுகிறார்கள். இந்த “பொருத்தம் பார்க்கும்” பின்னணி அந்தச் செய்தியினால் வரக்கூடிய சிந்தனையைக் கூட அழித்துவிடும்.

இப்படிப்பட்ட நிலைக்கு மிகவும் சிறப்பாக வேதாகமரீதியான செய்திகளை எடுத்துரைப்பவர்கள் கூட வீழ்ந்துவிடக்கூடும். ஆனால் கார் நிறுத்துவதற்குச் சிறப்பான இடம், உணர்ச்சியூட்டப்பட்ட ஆராதனை,

தொடர்புகொள்வதற்குத் தற்காலத்திய வழிகள், இசைக்கச்சேரியைப் போன்ற நிகழ்ச்சிகள் என்று மக்கள் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் நாம் செய்துவிட்டு அதன்பிறகு இயேசுவின் வார்த்தைளான, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15) நம்மால் அவர்களுக்குச் சொல்ல முடியுமா?

நித்திய முக்கியத்துவம் பெற்றதாக நாம் விசுவாசிக்கும் செய்தியை நாம் எப்படி அறிவிக்கிறோம் என்பதும் நம்முடைய ஊழியத்தின் விளைவில் பெரிய பங்கு வகிக்கிறது. மாம்சத்தின் தேவைகளையும் சந்தித்து, முழுமையான சுவிசேஷத்தை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நினைப்பது சேர்ந்து செய்யமுடியாத காரியமாக இருக்கிறது.

"பொருத்தமாக" இருக்க வேண்டும் என்பதற்காக நாம் கட்டிடங்களிலும், இடங்களிலும் எவ்வளவு பணத்தைச் செலவு செய்கிறோம் என்பது நாம் வேத வசனங்களில் தெளிவான அர்த்தங்களிலிருந்து வழிதவறியதில் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கிறது. அமெரிக்காவில் இந்த உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் 5 சதவீதம் பேர் தான் இருக்கிறார்கள். அமெரிக்காவின் திருச்சபை இந்த உலகத் திருச்சபைக் கூட்டத்தில் ஒரே ஒரு சதவீதத்தை மட்டுமே பூர்த்திசெய்கிறது. அப்படியிருக்கும்போது நம்மால் நாம் செய்யும் செலவுகளை நியாயப்படுத்த முடியுமா? அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் திருச்சபைக்கு வருவதின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டே வரும்போது நம்மால் இந்தச் செலவுகளை நியாயப்படுத்த முடியுமா? இயேசுவைப் பின்பற்றுபவர் இப்படித்தான் என்ற வேதாகமரீதியான மதிப்பீடுகளுக்கு ஏற்றவாறு திருச்சபையானது சிறிதளவும்கூட மதிப்பு பெற்றிராமல் இருக்கும்போது நம்மால் இந்தச் செலவுகளை நியாயப்படுத்த முடியுமா? இயேசுவின் வாழ்க்கை மற்றும் செய்தியின் சாராம்சம் எளிமையானதாகவும், தியாகத்தோடும், மற்றவர்களின் மீது கவனம் செலுத்துவதாகவும் இருக்கும்போது நாம் இப்படிச் சுயத்தின் மீது கவனம் செலுத்தும் செலவுகளை நியாயப்படுத்த முடியுமா? திருச்சபையின் மக்கள் ஊழியம் செய்ய வேண்டும் என்பதே திருச்சபையின் சுபாவமாக இருக்கும்போது தேவனுடைய மக்களை "அதிகாரப்படுத்துவதற்கு" அதிகப்படியான பணத்தைச் செலவு செய்வதை நியாயப்படுத்த முடியுமா?

மேலே கேட்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கேள்விக்குமான பதில் இல்லை என்பதாகவே இருக்க வேண்டும். ஆனால் அவைகள் கொடுக்கும் ஆலோசனைகள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய வடிவமைப்பு இப்படி எதிர்பார்ப்பதால் அவை தேவனுடைய பண்புகள் (தேவன் அதைச் செய்யும்படி வழிநடத்தினார்!) என்றும் மோசமாகக் கூறப்படுகின்றன.

## பொருத்திப்பார்ப்பதை நிறுத்துதல்

நம்முடைய தற்காலத்திய பொருத்திப் பார்க்கும் திருச்சபையைச் சுவிசேஷம் கேட்கவில்லை. அதுபோல நிருபங்களில் காணப்படும் திருச்சபையும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. நமக்கு வேண்டும் என்று நினைத்தால் ஒவ்வொரு விசுவாசியின் முன்னாலும் எப்போதுமே இயேசுவின் வாழ்க்கையை வைத்து நம்மை நாம் ஒழுங்குபடுத்துவதற்கான வழிகளைத் தேடலாம். ஆனால் இன்றைய தினத்தில் மேற்கத்திய திருச்சபை வேதாமரீதியான ஒழுக்கத்திலிருந்து தவறிவிட்டிருக்கும் நிலையில் நாம் அப்படிச் செய்ய விரும்பவில்லை என்று நான் சொல்லி முடிக்கிறேன். சீர்தூக்கிப்பார்த்து, அறிக்கையிட்டு, மறுசீரமைப்பதைப் பெரும்பாலான திருச்சபைகள் விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்து கீழ்ப்படியாமையிலேயே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

மேற்கத்திய திருச்சபைத் தான் போகும்போக்கிலேயே போகட்டும் என்று தேவன் விட்டுவிடவில்லை என்று அக்கறைக்கொண்டிருக்கும் விசுவாசிகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று நாம் யூகித்துக்கொண்டு தேவன் நிச்சயமாகவே நம்மை ஒழுக்கப்படுத்துவார் என்று நாம் எதிர்பார்ப்போம். ஏனென்றால், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபிரெயர் 12:6–7).

நம்மை நாமே ஒழுக்கப்படுத்திக்கொள்வதற்கு அமெரிக்கத் திருச்சபையைச் சேர்ந்த நாம் சில காரியங்களைச் செய்ய முடியும். முதலாவது, நாம் நம்முடைய கூடுகைகளில் எல்லாம் தூய்மையான வழியில்

வேதாகமத்தை எடுத்துரைப்பதைக் கொண்டு வரலாம். அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் மந்தையைவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்ற நிலை இருந்தாலும் நாம் இதைப் பற்றுறுதியோடு செய்யலாம். இரண்டாவதாக, தலைமைத்துவத்தின் வடிவமைப்பைப் பரவலாக்குவதற்கு வீட்டு ஜெபக் குழுக்களையும், பணியிடத்தில் ஜெபக் குழுக்களையும், மக்களால் வழிநடத்தப்படும் பிற ஊழியங்களையும் அதிகமாக உருவாக்கலாம். மூன்றாவதாக, போதிக்கும் மற்றும் கற்பிக்கும் பொறுப்புகளை ஒரே ஒருவருக்கு மட்டும் கொடுத்து மக்கள் அவரையே சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு நபர்களிடம் இந்தப் பொறுப்புகளைக் கொடுக்கலாம். நான்காவதாக, நாம் நம்முடைய சபைகளின் உறுப்பினர் எண்ணிக்கையை ஒரு குறிப்பிட்ட அளவாக வைத்துக்கொள்ளலாம். இடங்களை வாங்கிச் செலவிடுவதற்குப் பதிலாக கிடைக்கும் வாடகை இடங்களில் இன்னும் அதிகமான சபைகளைத் துவங்கலாம். நாம் இயேசுவிற்குச் சொந்தமானவர்கள். எனவே அவருடைய மக்களாகிய நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம். நமக்கு இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆலயங்கள் தேவையில்லை. தேவன் தம்முடைய மக்கள் தங்களுடைய சமுதாயங்களுக்குள் சென்று செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார். ஐந்தாவதாக, நாம் மக்களுடைய எதிர்பார்ப்புகளை மாற்றியமைக்கலாம். நாம் கூடும்போது ஊழியத்தை நடத்துவதற்கு இன்னும் அதிகமான ஆர்வமுள்ள தன்னார்வலர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். ஏற்கெனவே இருக்கும் வடிவமைப்பைத் தற்காத்துக்கொள்வதற்காக நாம் செலவிடும் பணம் மற்றும் ஆள்பலத்தைக் குறைத்துக்கொள்ளலாம்.

நாம் இன்னும் பல ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளலாம். ஆனால் தேவனுடைய மக்கள் சுவிசேஷத்திற்குள் வாழ்ந்து சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக எப்படிச் செயல்படுவது என்பதை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தாங்கள் இருக்கும் இடத்திற்கு ஏற்றாற்போல ஆவியானவரிடம் கேட்டறிந்து செயல்பட வேண்டும். வேத வசனங்கள் சில ஆலோசனைகளைக் கொடுக்கின்றன. இயேசுவை அறிக்கையிடுகிறவர்கள் சுவிசேஷத்தைத் தங்களுடைய தினசரி பின்னணயில் வாழ்ந்துகாண்பிக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைப்பதைத் தவிர்த்து அது வேறு பல ஆலோசனைகளைக் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் மக்களுக்கு அதிகாரமளிக்கும்படியாகவும், ஒவ்வொரு விசுவாசியிலும் காணப்படும் ஆசாரிய நிலையை எடுத்துக்கூறும்படியாகவும், நமக்காகக் குறைந்த அளவில் பணம் செலவிடும்படியாக நமக்கு உதவி செய்யும்படியாகவும், வேத வசனங்களைக் குறித்துத் தேனெழுகப் பேசும் பேச்சாளர்களின் மீது கவனம் செல்லாமல் பார்த்துக்கொள்ளும்படியாகவும், இந்தப் பூமியில் இருக்கும் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், சிறுபிள்ளைக்கும் கிறிஸ்து தம்முடைய மக்களிடத்தில் ரூபமெடுக்கிறார் என்பது அறியப்படும்படியாகவும் நாம் நம்முடைய திற்காலத்திய திருச்சபையின் வடிவமைப்பை மாற்ற வேண்டும்.

## மாற்றம் எளிதாக நிகழாது

எனவே மேற்கத்திய திருச்சபைக்குப் புதுப்பித்தல் தேவைப்படுகிறது! நாம் செல்லக்கூடிய இடமாகத் திருச்சபை இருக்கிறது என்ற பழைய சிந்தனையை மறுபடியுமாகக் கொண்டு வருவது மட்டும் போதாது. நாம் என்ன செய்கிறோம் என்பதைக் குறித்துக் கேள்வி எழுப்ப வேண்டும். அதுமட்டுமல்லாமல் நாம் எந்த வழியில் சிந்திக்கிறோம் என்பதும் முக்கியமானதாக இருக்கிறது. ஆனால் நம்முடைய சிந்தனையைச் சீரமைப்பது என்பது எளிதில் நிகழக்கூடிய காரியமில்லை என்பது தான் பிரச்சினை.

முதலாவது, திருச்சபையைக் குறித்து நாம் கொண்டிருக்கும் வரலாற்றுப்பூர்வமான இறையியல் சிந்தனைக் குறுக்கே வருகிறது. மேற்கத்திய உலகத்தில் இருக்கும் திருச்சபையானது எல்லோரும் கூடும் ஒரு இடமாகச் சிந்திக்கும்படி பழக்கப்பட்டிருக்கிறது. விசுவாசத்தின் செயல்பாடுகளில் வளர்ந்து தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் ஊழியத்தில் பங்குபெறுவதைக் குறித்ததுதான் என்பது அழுத்தமாக எடுத்துரைக்கப்படுவதில்லை. இதனால் திருச்சபைப் பல பின்னடைவுகளை அடைந்து, பல தவறுகளைச் செய்கிறது. திருச்சபை என்பது வேதாகமரீதியாகக் குறைவுப்பட்ட நிலையில் மக்கள் அங்கு வந்து அமர்ந்திருக்கும்படியாகத் தலைமைத்துவம் சிந்தனைகளை மாற்றிவிட்டது. அவர்கள் அங்குக் கூடி, ஆராதனையை அனுபவித்து, ஒரு பிரசங்கத்தைக் கேட்கிறார்கள் என்பதே அடிப்படை சிந்தனையாக இருக்கிறது. இது பல வருடங்கள் நிகழ்ந்தபிறகும் தலைமைத்துவம் காண்பிக்கும் வரிசையில் மக்கள் இன்னும் நின்றுகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்து, அவருடைய சுவிசேஷம், அவருடைய எதிர்பார்ப்புகள் மற்றும் அவருடைய மக்களிடையே அவருடைய வாழ்க்கையைக் குறித்த வெறுப்புகள் நம்முடைய கலாச்சாரத்தில் இப்போது அதிகமாக வளர்ந்துகொண்டிருப்பதால் தேவனுடைய மக்கள் அசைக்கப்படுவதற்கு முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

‘‘நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்’’ (யோவான் 14:15) என்று இயேசு சொல்கிறார். அறிக்கையிடும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இதைத் தேர்ந்தெடுக்காமல் விட்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். சிலர், *இது உண்மையான அர்ப்பணிப்பைக் கொண்டவர்களுக்குத் தான் சரியாக இருக்கும்* என்று நினைக்கிறார்கள். அல்லது *இயேசு என்ன சொல்கிறார் என்பதை நான் அறிந்திருக்கிறோன் ஆனால் அப்படிப்பட்ட அர்ப்பணிப்பிற்கு நான் இன்னும் ஆயத்தமாகவில்லை.* அல்லது இன்னும் மோசமாக, *நான் இதைச் செய்வதற்கு மனதாக இல்லை.* ஆனால் திருச்சபை என்பது தேவனோடு உறவில் இருக்கும் மக்கள். அவர்கள் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் திருச்சபையானது அனுப்பப்பட்ட மக்கள். நாம் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் நாம் சென்றுகொண்டுதான் இருக்கிறோம். அதற்குக் குறைவாக இருக்கும் எந்தச் சிந்தனையும் பொருத்தமில்லாததாகவும், எதிர்மறையானதாகவும் இருக்கிறது.

திருச்சபையைச் சீரமைக்க முடியாமல் தடுப்பது தலைமைத்துவத்தில் இருப்பவர்களின் பலரின் தற்பெருமையாக இருக்கிறது! திருச்சபை என்பது எல்லோரும் கூடிவரும் இடம் என்ற சிந்தனை அதை வழிநடத்துபவர்களுக்குத் தனிப்பட்ட அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் பல மக்களைக் கூடி வரச் செய்யமுடிந்தவர்களாக இருந்தால் இன்னும் தனிப்பட்டதாகிறது. இந்த மக்கள் தங்களுடைய தலைவர்களை ‘‘நேசிக்கக்’’ கற்றுக்கொள்கிறார்கள். அவர்களைப் பாராட்டி, அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நிதி உதவி கூடச் செய்கிறார்கள்.

ஆனால் இயேசுவால் திருச்சபையை வழிநடத்தும்படி அழைக்கப்பட்டிருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமளிக்கும் கட்டளையினால் தலைமைத்துவம் அசைக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய சொந்தத் தனித்துவம் தேவனோடு கொண்டிருக்கும் தனிப்பட்ட, தினசரி நெருக்கமான உறவிற்கு வழிவகுக்கும். தலைவர்கள் வெறுமனே மருத்துவச்சிகளைப் போல இருப்பார்கள். அவர்கள் தேவனுடைய மக்களைச் சத்தியத்தில் வாழும்படியாகவும், அந்தச் சத்தியத்தைக் கொடுப்பவரோடு அர்த்தமுள்ள உறவு கொள்ளவும் உதவி செய்வார்கள்! இப்படிச் செயல்படும்போது அவர்களுடைய சுயம் குறைந்து, தேவன் மேன்மைப்படுவார்!

கடைசியாக, நம்மால் நம்முடைய சிந்தனையைச் சீரமைக்க முடியவில்லை ஏனென்றால், நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போலத் திருச்சபையில் இருக்கும் பெரும்பாலான மக்கள் திருச்சபையைக் குறித்தும், அதில் தங்களுக்குரிய ஈடுபாட்டைக் குறித்தும் தவறான சிந்தனையைப் பெற்றிருக்கிறார்கள். திருச்சபை ஆராதனையில் கலந்துகொள்வதற்குத் தங்களைக் கவர்ந்திழுக்கும்படியாகவும், தங்களுக்கு எளிதாக இருக்கும்படியாகவும் தலைவர்கள் எல்லாவற்றையும் ஆயத்தம் செய்துவிடவேண்டும் என்று மக்கள் இன்று எதிர்பார்க்கிறார்கள். இதில் தலைமைத்துவம் மனிதனுடைய மற்றும் நம்முடைய கலாச்சாரத்தினுடைய சுய நலத்தை ஊக்குவித்திருக்கிறது. இயேசுவின் வார்த்தைகளின் படி செயல்பட வேண்டும் என்று இந்த நிலையில் நாம் மக்களை அழைப்பதற்குப் புதுப்பித்தல் பெரிய அளவில் நடக்கவேண்டும்.

## புதுப்பித்தலை ஏற்றுக்கொள்ளுதல்

திருச்சபையாக நாம் செய்யும் காரியங்களை மட்டுமல்லாம் நாம் எப்படிச் சிந்திக்கிறோம் என்பதையும் நாம் எப்படி மறு மதிப்பீடு செய்துபார்ப்பது?

முதலாவது, நாம் திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, அதை நிறைவேற்றுவதற்குத் தேவையான இலக்குகளை ஏற்படுத்த வேண்டும். தம்முடைய திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் தெளிவான வேதாகமரீதியான நோக்கத்தைத் துவங்குவதற்கு முதலில் பரிசுத்த ஆவியானவரிடம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கும்படியாக அடையாளம் காண்பிக்கும்படி கேட்க வேண்டும். அந்த இடத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுபிள்ளையும் திருச்சபையைப் பார்க்கும்படியாகவும், கேட்கும்படியாகவும், தொடும்படியாகவும், கிறிஸ்துவிற்காக ஒரு முடிவை எடுக்கும்படியாகவும் வாய்ப்பு கிடைக்கும்படியாக வழியை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, நம்முடைய பொறுப்புகளின் வட்டத்தைச் சார்ந்தவர்கள் முழுவதுமாக சுவிசேஷத்தை அறிந்துகொள்ளும்படியாக யுக்திகளை ஏற்படுத்த வேண்டும். தேவனுடைய மக்களைத் தலைமைத்துவம் அதிகமாக ஊக்குவித்துவிட்டது என்று ஒருபோதும் சொல்ல முடியாது. தலைமைத்துவம் தங்களுடைய

மக்களுக்குப் போதிக்கவேண்டும், அவர்களை விடுவிக்கவேண்டும், தேவன் அவர்களைக் கொண்டு செல்லும் எல்லா இடங்களிலும் மறுரூபமாக்கப்பட்ட வாழ்வின் கருவிகளாக அவர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, திருச்சபையானது மேல் நோக்கி வளராமல் பக்கங்களில் விரிவடைய வேண்டும். அதாவது உயரமான கட்டிடங்களைக் கட்டி மக்களை ஈர்ப்பதற்கு முயற்சி செய்வதற்குப் பதிலாக நம்முடைய சமுதாயங்களில் இருக்கும் எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்தலாம். ஒரு இடத்தில் இருநூறு அல்லது முந்நூறு பேருக்கும் மேல் கூடும்படியாக அனுமதிக்கக் கூடாது. நாம் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டிய தேவையில்லாதவைகளை நாம் சொந்தமாக்கிக்கொள்ளக்கூடாது. மக்களால் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய காரியங்களுக்காக நாம் பணியாளை நியமிக்கக்கூடாது. தேவன் நமக்குக் கொடுப்பவைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பக்கக்கிளைகளைப் பெற்றுத் திருச்சபை வளர்வதற்குத் தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பது திருச்சபையால் செய்யக்கூடிய ஒரு முக்கியமான காரியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய மக்களிலும், மக்களின் மூலமாகவும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட இடங்களிலும், அவர்கள் கூடி வரும் இடங்களிலும் செய்ய விரும்பும் காரியங்களைச் செய்வதற்குத் தன்னை அர்ப்பணிக்கும் திருச்சபையானது வரலாற்றில் இதுவரை இருந்ததைப் போல மேல் நோக்கிச் செல்லும், மக்களை ஈர்க்கும் மாதிரியாக இல்லாமல் இன்னும் கூடுதல் அம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும். (நான் இங்கு சம்பளம் கொடுத்துப் பணியாற்றுகிறவர்களைக் குறித்துப் பேசவில்லை. அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கைக் குறைக்கப்பட வேண்டும். ஊழியத்தில் பங்குவகிக்க மனதுள்ள பயிற்சிபெற்ற தன்னார்வலர்களைக் குறித்து நான் பேசுகிறேன்.) திருச்சபையின் வாழ்வில் இப்படிப்பட்ட மருத்துவச்சியின் பங்களிப்பைப் போன்று பல நிலைகளில் ஊழியத்தில் சேர்ந்துகொள்ளும் பயிற்சி பெற்ற மக்கள் தலைமைத்துவ செயல்பாட்டை பரவலாக்கும் நம்முடைய முயற்சியில் உதவி செய்வார்கள். தலைமைத்துவம் அதிகமான மக்களுக்குப் பயிற்சியளித்துவிட்டது என்ற நிலை வருவதற்கான வாய்ப்பில்லை.

திருச்சபையானது தன்னையும் தன்னுடைய மக்களையும் சரியானவழியில் ஒழுங்குபடுத்தினால் அதில் இருக்கும் தலைமைத்துவமானது மற்ற தலைவர்களை உருவாக்குவதற்கான நேரத்தைச் செலவிட உதவிட முடியும். இதை அவர்கள் தொடர்புநிலையில் செயல்படுத்தலாம். முகமுகமாக அவர்கள் தலைவர்களாகக்கூடியவர்களோடு அதிக நேரம் செலவிட வேண்டும். இந்தத் தனிப்பட்ட நேரத்தில் அவர்கள் மூன்று விரிவான பிரிவுகளில் கவனம் செலுத்த வேண்டும் (தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கை, தனிப்பட்ட ஊழிய புரிதல், மற்றும் தொடர்ந்து வேத ஆய்வில் ஈடுபடுவதின் மூலமாக இறையியல்ரீதியான முதிர்ச்சியைப் பெறுதல்). அந்தப் புதிய தலைவர்கள் இளம் வயதாக இருக்கும்போதே இந்தப் பயிற்சியைத் துவங்கிவிட வேண்டும். தேவனுடைய வார்த்தையினைத் தொடர்ந்து வாசிப்பதின் மூலமாகத் தேவனோடு உள்ள உறவிற்கு ஊட்டம் கொடுப்பதை இளம் தலைவர்கள் ஆரம்பத்திலிருந்தே கற்றுக்கொள்ளாவிட்டால், தொடர்ந்து அவரிடம் பேசுவதைக் கற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் வெறுமனே தெய்வீக வடிவமைப்பின் சாராம்சத்தை மட்டும் தொலைத்துவிடமாட்டார்கள், அவர்கள் தேவனுடைய மக்களிடத்தில் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க முடியாது. புதிய தலைவர்களை ஏற்கெனவே இருக்கும் தலைவர்கள் நிறுவனம் சார்ந்தும் பயிற்சியளிக்கலாம். சிறிய மற்றும் பெரிய கூட்டங்களை வழிநடத்தி, நோக்கத்தைக் குறித்துப் போதித்து, கிறிஸ்துவின் சரீரத்திடமிருந்து எதிர்பார்க்கும் விளைவுகளைக் குறித்துப் பயிற்சியளிக்கலாம்.

நான்காவதாக, நாம் மற்றத் திருச்சபைகளோடு நண்பர்களாக வேண்டும். நான் இதை அழுத்தமாகக் கூறும்போது வேதாகமரீதியான ஒற்றுமை என்றால் என்ன மற்றும் எது கிடையாது என்பதைக் குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இதிலிருந்து தேவன் நடைமுறை சார்ந்த கூட்டுப்பங்காண்மையைக் கொண்டு தேவன் என்ன செய்கிறார் என்பதை நாம் முயற்சி செய்து பார்க்கும்போதே இந்தச் சிந்தனை நிகழ வேண்டும்.

இருப்பதினால் ஏற்படும் ஐக்கியமும் இருக்கிறது. தேவனுடைய திருச்சபைகள் எல்லாம் ஒன்றுதான் ஏனென்றால் நாம் எல்லோரும் கிறிஸ்துவில் இருக்கிறோம். அவர் நம்மை ஒன்றாகவே உண்டாக்கியிருக்கிறார். யோவான் 17:20–23 வசனங்களில் இயேசு இவ்வாறு சொல்கிறார்:

> நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.அவர்களெல்லாரும்

ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சுவிசேஷத்தில் *கூட்டுப் பங்காண்மையினால் ஏற்படும் ஒற்றுமையும்* இருக்கிறது. தேவனுடைய ஆவியானவர் நாம் செய்ய வேண்டும் என்று அழைத்த ஒரு காரியத்தைச் சேர்ந்து செய்வது என்று இதற்கு அர்த்தம். பிலிப்பியர் 1:3–5 வசனங்கள் இதைக் குறித்துக் குறிப்பிடுகின்றன: ‘‘சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் *பங்குள்ளவர்களானதால்*, உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.’’ சுவிசேஷப் பணியில் ஒவ்வொரு திருச்சபையும் எவ்வளவு செய்கிறது என்பது இங்குத் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அவர்களுடைய பங்களிப்பு தேவன் பவுலுக்கும் அவருடன் பணிசெய்தவர்களுக்கும் தேவன் கொடுத்த ஊழியத்தின் மீது கவனம் செலுத்துவதாக இருந்தது. உள்ளூரில் இருக்கும் சபையிலிருந்து இப்படிப்பட்டக் கூட்டுப்பங்காண்மை அதிகம் எதிர்பார்ப்பதில்லை. இந்தப் பங்களிப்பு எளிதானதாகத் தெரிந்தாலும் மிகவும் குறைவான திருச்சபைகளே இப்படிப்பட்ட கூட்டுப்பங்காண்மையோடு செயல்படுகின்றன.

கடைசியாக, சுவிசேஷத்திற்காகக் *கூட்டுப்பங்காண்மையில்* ஐக்கியம் இருக்கிறது. இப்படிப்பட்ட ஐக்கியம் முன்பு கூறப்பட்ட இரண்டைக் காட்டிலும் ஆழமானதாக இருக்கிறது. தங்களுடைய தனிப்பட்ட முழுமையின்மையை ஏற்றுக்கொண்டு அதே சமயத்தில் தாங்கள் இருக்கும் இடங்களைச் சந்திக்கவேண்டிய தனிப்பட்ட பொறுப்பைப் பெற்றிருப்பதையும் ஏற்றுக்கொள்ளும் உள்ளூர் சபைகளைச் சேர்த்துக்கொண்டு அந்த இடம் முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிப்பதில் அது கவனம் செலுத்துகிறது. இப்படிப்பட்ட திருச்சபைகள் நித்தியத்தினால் வரையறுக்கப்பட்ட நேரத்தின் மதிப்பை அறிந்திருக்கின்றன. சுவிசேஷத்தில் தேவன் செய்திருக்கும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய எல்லாச் சொத்துக்களையும் பயன்படுத்தத் தயாராக இருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்குச் சுவிசேஷம் எப்படியாவது கிடைக்கும்படியாக வழிகளை உண்டாக்குவார்கள். எவ்வளவு காலம் எடுத்தாலும் அவர்கள் அதைச் செய்துமுடிப்பார்கள். சித்தமுள்ள பிற திருச்சபைகளோடு சேர்வதற்கும் தயங்கமாட்டார்கள். கூட்டுப்பங்காண்மை இப்படிப்பட்ட ஆழத்தை எட்டாமல் நாம் சுவிசேஷத்திற்கான ஒரு மெய்யான கூட்டுப்பங்காண்மையைப் பார்க்க முடியாது.

ஐக்கியத்தின் அல்லது ஒற்றுமையின் முதல் இரண்டு நிலைகள் திருச்சபைகளைத் தேவன் தம்முடைய மக்களுக்காகச் சிருஷ்டித்து, அவர்களுக்காக வைத்திருக்கும் செயல்பூர்வமான சீரமைப்பை ஏற்படுத்தும் மூன்றாம் நிலையான ஐக்கியத்திற்கு வழிநடத்தும். ஆனால் பெரும்பாலும் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. அதனால் அவர்கள் இந்த உலகத்திற்காக, ஒவ்வொரு சபையும் இருக்கிற இடத்திற்காகத் தேவன் ஏற்படுத்திய இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தகுதியில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவில் இருக்கும் நம்முடைய தேவன் ஐக்கியத்தின் இந்த மூன்று அம்சங்களையும் நமக்குக் கொடுக்கிறார். அவை எல்லாம் திருச்சபைக்காக அவர் கொண்டிருக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. தேவனுடைய ஆதி வடிவமைப்பிற்கு அவர் தேவனால் இயேசு கிறிஸ்துவில் நம்மைச் சீரமைத்திருப்பதால் நாம் *இருக்கிறோம்*. இயேசு தம்முடைய திருச்சபையாக, தம்மால் அழைக்கப்பட்டவர்களாக நம்மை இந்த உலகத்திற்குள் அனுப்பியதால் நாம் இயேசுவில் ஐக்கியப்பட்டிருக்கிறோம். திருச்சபைக்காகத் தேவன் வடிவமைத்திருக்கும் மக்கள் அணித்திரட்டல் மற்றும்

ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், சிறுபிள்ளைக்கும் சுவிசேஷம் கிடைக்கும்படியாகத் திருச்சபைப் பெற்றிருக்கும் பொறுப்பையும், இயேசுவின் வாழ்வின் பண்பையும் நாம் முழுமையாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும்போது கிடைக்கும் ஐக்கியம். ஒவ்வொரு அம்சமும் நம்மிடத்திலிருந்து மாறுபட்டவைகளை எதிர்பார்க்கிறது. இருக்கிறதிலேயே, சமாதானத்தின் பிடியில் நாம் ஆவியானவரின் ஐக்கியத்தைப் பாதுகாக்கிறோம். ஐக்கியத்தில், நாம் தொடர்ந்து எல்லாம் இந்த உலகத்தின் திருச்சபையின் பண்பிலும், தேவனுடைய அப்போஸ்தல அழைப்பிலும் மாறிவிடுவார்கள் என்று நம்முடைய கரங்களை நம்பிக்கையோடு திறந்து வைத்திருக்கிறோம். ஐக்கியத்திற்காக, முழு திருச்சபையின் ஆதாயத்திற்காக, நாம் சிறிது காலம் தனியாகத் தான் நடக்க வேண்டும் என்றாலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்படுகிறோம்.

ஐந்தாவதாக, சுவிசேஷம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய இடங்களில் இருக்கும் மக்களுக்குப் புதிய சபைகளை உருவாக்குவதற்காக நிதியுதி செய்வதற்காகத் தேவனுடைய மக்களைத் தலைமைத்துவம் ஆயத்தப்படுத்த வேண்டும். நாம் பெற்றிருக்கும் எல்லாம் தேவனுடையவைகள். ஏனென்றால் நாம் நம்முடைய வாழ்க்கையையும், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லாவற்றையும் உக்கிராணத்துவப்படுத்துவதில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும்படியாக அவரோடு நாம் உறவுகொள்ளும்படியாகச் செய்திருக்கிறார்.

ஆறாவதாக, தேவன் திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தின் மிகவும் முக்கியமான அம்சங்களைத் திருச்சபையானது எப்படிப்பட்ட முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிறது என்பதை அளவீடு செய்ய வேண்டும். கிறிஸ்துவின் மக்களை அதிகாரப்படுத்துதல், மக்களை அணிதிரட்டுதல், மற்றும் அதனுடைய பொறுப்பில் இருக்கும் இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்தல் ஆகியவை நோக்கத்தின் அம்சங்களாக இருக்கின்றன. தேவனால் என்ன செய்ய முடியும், அவர் என்ன செய்வார் என்பதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்துத் திருச்சபைத் தன்னைத் தானே தாழ்த்திக்கொள்ளக்கூடாது.

நமக்குப் புதுப்பித்தல் தேவைப்படுகிறது! மேற்கத்திய திருச்சபை மேற்கொள்ள வேண்டிய பயணத்தின் முன்னோடியாக இந்தப் புத்தகம் இருக்குமென்று நான் நம்புகிறேன். இந்தப் பயணமானது இன்றைய கிறிஸ்தவ உலகில் எளிதாகக் கிடைக்கக்கூடிய பதில்களுக்கு நேர்மாறானவையான தேர்ந்தெடுப்புகளை எடுக்கச் செய்யும்.

திருச்சபையில் சீர்திருத்தம் வருவதற்கு நேரமும், சிந்தனையும் தேவை. இது திருத்தத்திற்கு வழிவகுக்கும். ஒரு இடத்தில் இருக்கும் திருச்சபைகள் ஒன்றுக்கொன்று கூட்டணியாகும்போது சிறப்பாக நிறைவேறும். விளைவுகள்? திருச்சபைகள் எல்லா அம்சங்களிலும் தாங்கள் பெற்றிருப்பதைக் காட்டிலும் கொடுப்பது அதிகமாக இருக்கும். விசுவாசிகள் தாங்கள் இருக்கும் இடத்தில் இருக்கும் மக்களை யுக்தியோடு அணுகுவார்கள். கடைசியில் புதுப்பித்தலின் மூலமாகத் திருச்சபைகள் பிறக்கும். இந்தத் திருச்சபைகள் தங்களுடைய ஆலய வடிவமைப்பின் மூலமாக அல்லாமல் மக்கள் தங்களுடைய விசுவாசத்தைக் கொண்டு என்ன செய்கிறார்கள் என்பதின் அடிப்படையில் தங்களுடைய செயல்திறனை அளவீடு செய்வார்கள்.

# பிற்சேர்க்கை 1: தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துதல்

தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தைக் குறித்தும், இந்த நோக்கத்திற்காகக் கிறிஸ்துவின் மக்களை அதிகாரப்படுத்த வேண்டும் என்று தலைமைத்துவம் கொண்டிருக்கும் பொறுப்பையும் குறித்து நாம் விவாதித்துவிட்டோம். இந்தச் செயலைச் செய்வதற்குத் திருச்சபை எப்படி வேதாகமரீதியான யுக்திகளைச் செயல்படுத்த முடியும்?

முதலாவது, நாம் திருச்சபையின் அதிகாரத்தோடு – பரிசுத்த ஆவியானவர் தம்முடைய மக்களிடத்தில் ஜீவித்திருப்பது – ஒத்துழைக்க வேண்டும். கிறிஸ்துவின் மக்களின் மூலமாக ஆவியானவர் ஜீவித்திருக்கும்போது, நாம் அத்தியாயம் 3இல் பேசிய ஐந்து தொடக்கநிலை மதிப்பீடுகளைக் கொண்டு தேவனுடைய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, மக்கள் தேவனுடைய மகிமையைக் காணும்படியாகவும், அவருடைய நீதியைத் தொடும்படியாகவும், அவரை ஏற்றுக்கொள்ளும்படியாக அவரிடம் ஈர்க்கப்படும்படியாகவும் தேவனுடைய சிந்தனையின் மையம் வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய மக்கள் தங்களுடைய ஆசாரியத்துவத்தைத் தங்களுடைய சாதாரணமான வாழ்க்கையில் செயல்படுத்தும்போது, தங்களுடைய கிருபையின் சாட்சிகளை வாழ்ந்துகாண்பிக்கும்போது, தங்களுக்குள் இருக்கும் ஆவியின் ஜீவனினால் கிடைக்கும் கனிகளில் முதிர்ச்சியடையும்போது, ஊழியத்திற்காக ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்த வரங்களையும் திறமைகளையும் வெளிப்படுத்தும்போது, தேவன் தங்களுக்கென்று கொண்டிருக்கும் வடிவமைப்பிற்காகக் கீழ்ப்படிதலோடு தங்களுடைய சொத்துக்களையெல்லாம் உக்கிராணத்துவப்படுத்தும்போது திருச்சபையானது இருளைச் சுவிசேஷத்தின் வெளிச்சத்தைக் கொண்டு நிரப்புவதில் செயல்பூர்வமானதாக இருக்கும்.

இரண்டாவதாக, நாம் பொருளாதார உண்மைநிலையோடு ஒத்துழைக்க வேண்டும். நம்முடைய தலைமைத்துவ வடிவமைப்பிலும், நாம் கூடிவரும் இடங்களிலும் நாம் வாழும் பொருளாதார உண்மைநிலையோடும், தேவன் நமக்குக் கொடுக்கும் சொத்துக்களை நாம் பொறுப்புள்ளவர்களாகவும், நியாயமானவர்களாகவும் நடந்துகொள்வதிலேயும் ஒத்துழைப்பவர்களாக இருக்க வேண்டும். நாம் மேலே கூறியதைப் போல தேவனுடைய மக்கள் அவருடைய வல்லமையில் நடக்க வேண்டும் எனவே நாம் வீடுகள் மற்றும் பணியிடங்களுக்கிடையே உள்ளூர் சபைகளின் வாழ்க்கை மற்றும் வடிவமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதனால் தலைமைத்துவத்தைப் பெரும்பாலும் சம்பளம் இல்லாமல் தன்னிச்சையாகச் செய்பவர்களைக் கொண்டதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கும் பயிற்சியளிப்பதிலும், சமுதாயத்தின் ஜீவியத்தில் வேதாகமச் சத்தியத்தைப் பாதுகாப்பதிலும் தங்களுடைய முக்கியமான பொறுப்புகளைக் கொண்டிருக்கும் சம்பளம் வாங்கும் தலைமைத்துவம் கவனம் செலுத்தும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக நாம் பரிசுத்த ஆவியானவரின் குற்றஉணர்ச்சியை ஏற்படுத்தும் ஊழியத்தோடு ஒத்துழைக்க வேண்டும். நாம் நம்மைச் சுற்றியிருக்கும் வட்டத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது தேவன் ஏற்கெனவே தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்படியாகக் கிரியைச் செய்துகொண்டிருக்கும் மக்களை நாம் தேடிப்பிடிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் யாருக்குக் குற்ற உணர்ச்சியைக் கொடுத்து, சம்மதம் தெரிவிக்க வைக்க முயன்று, அழைக்கிறார் என்பதைத் தேவனுடைய ஆவியானவர் நமக்குக் காண்பிக்கும்படியாக நம்முடைய யுக்திகள் அப்படிப்பட்ட நபர்களின் அருகில் நம்மைக் கொண்டு சேர்க்க வேண்டும். நம்முடை பொறுப்பு அங்குப் பொருத்தமானதாகக் கூட இருக்கவேண்டும். அல்லது சுவிசேஷத்தைப் பொதுவெளியில் அறிவிப்பதாகக் கூட இருக்க வேண்டாம். ஆனால் நாம் மக்கள் சாதாரணமாக வாழும் மற்றும் பணியாற்றும் இடங்களில் இருந்தால் போதும்.

நான்காவதாக நாம் தலைவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஒரே இடத்தில் தலைமைத்துவம் முழுவதும் இல்லாமல் இருக்கும்படியாக நாம் உண்மையுள்ளவர்களாகவும், வேதாகமரீதியாகவும் நம்முடைய ஐக்கியத்தில் இருக்கும் எல்லோருக்கும் அதிகாரமளிக்கும் பொறுப்புகளைக் கொடுக்கும்படியாகப் போதுமான

தலைவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். திட்டங்களை நிர்வகிப்பதோ அல்லது வேத வசனங்களை மட்டும் அறிவிப்பதோ திருச்சபையின் மையத் தலைமைத்துவத்தின் பணி கிடையாது. விசுவாசத்தின் சமுதாயத்தில் சத்தியத்தைப் பாதுகாப்பதும், ஒவ்வொரு நிலையிலும் தலைவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை வெளியில் அனுப்புவதுதான். இதன்மூலமாக இந்தத் தலைவர்கள் இந்த உலகத்தின் திருச்சபையைக் குறித்துத் தேவன் கொண்டிருக்கும் நோக்கத்தை நிறைவேற்றும்படியாகக் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதிகாரமளிக்கமுடியும்.

ஐந்தாவதாக, இதே நடைமுறையில் நமக்கு உதவி செய்யும்படியாக நம் இருக்கும் சமுதாயத்தில் மற்றொரு ஆர்வமுள்ள திருச்சபையை நாம் கண்டுபிடிக்க வேண்டும். நம்மைச் சுற்றியிருக்கும் இடத்தையும் தாண்டி இந்தத் தரிசனம் செல்லும்படியாக நாம் நம்முடைய நேரத்தைப் போதுமான அளவிற்கு நம்முடைய விரிவடைந்த விசுவாச சமூகங்களில் நேரத்தைச் செலவிட வேண்டும். நம்முடைய நகரங்கள், கிராமங்கள் மற்றும் மாநிலங்கள் போன்ற இடத்தில் திருச்சபையின் பொறுப்பைச் செயல்படுத்தும்படியாக நாம் உதவி செய்யக்கூடிய கூட்டுத் திருச்சபைகளை நாம் அடையாளம் காணும்படியாக நேரம் செலவிட வேண்டும். சுவிசேஷத்திற்காகக் கூட்டுப்பங்காண்மை என்ற தேவனுடைய நோக்கத்திற்காகத் திருச்சபைகள் சேரும்போது, தங்களுடைய இடங்களில் முழுவதுமாகச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற இலக்கோடு சேர்ந்து, அவர்களுக்கிடையே செயல்பூர்வமான, செயல்படக்கூடிய ஒத்துழைப்பு ஏற்படக்கூடும். நாம் இந்தப் புத்தகத்தின் 7ஆம் அத்தியாயத்தில் விவாதித்ததைப் போல பிற ஐக்கியங்கள் ''தேவன் தம்முடைய மக்களின் மூலமாக ஊழியம் செய்கிறார்'' என்ற ஆக்கப்பூர்வமான விளைவை ஏற்படுத்தாது.

கடைசியாக, திருச்சபைகள் எல்லையெங்கிலும் சபைகளை ஸ்தாபித்தல் இன் பயிற்சி பாடத்திட்டங்களைக் கொண்டு தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கலாம்: *the SCP Journey* மற்றும் *the SCP Reader.*[1] இந்த இரண்டு பாடத்திட்டங்களிலும் திருச்சபைகள் தங்களுடைய தரிசனத்தைக் கட்டியெழுப்பி, அந்தத் தரிசனத்தை அளவீடுசெய்வதற்காக அர்ப்பணித்துத், தங்களுடைய மக்களை முழுவதுமாக அணிதிரட்டி, ஆவியானவராகிய தேவன் தங்களுடைய இடத்தில் ஆயத்தப்படுத்தியிருக்கும் காரியங்களை அறுவடை செய்வதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பயிற்சிப் பாடத்திட்டங்களைத் திருச்சபையானது தங்களுடைய தலைவர்களுக்குப் பயிற்றுவித்தப்பிறகு தேவன் அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று வைத்திருக்கும் பணியைச் செய்வதற்கு அது உதவியாக இருக்கும். அறுவடைக்கும் உதவியாக இருக்கும். அதே நேரத்தல் மேல் நோக்கி வளர்வதற்கு மாறாக பக்கக்கிளைகளைக் கொண்டு திருச்சபையை விரிவுபடுத்துவதற்காக வடிவமைப்பை மாற்றியமைக்கிறது. வேதாகமரீதியான கொள்கைகள் செயல்படுத்தப்படும்போது மக்களின் மீது இருக்கும் இயேசுவானவரின் சாயல் நம்முடைய இடத்தில் இருக்கும் மக்களோடு நேரடியான தொடர்பைப் பெறும். இதன் மூலமாக அவர்களைத் தேவன் தம்மிடத்திற்குள் சேர்த்துக்கொள்ள முடியும்.

# பிற்சேர்க்கை 2: உலகின் பிற இடங்களில் தொலைநோக்கோடு நம்முடைய நோக்கத்தைப் பரப்புதல்

அர்ப்பணிப்பின் சுழற்சியில் ஒரு பரிமானமாக நாம் அழைப்பது தொலைநோக்குப் பார்வையாகும். வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், ஒவ்வொரு சபையும் தேவனுடைய இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை அறிவிக்கும்படியாகத் தனக்குத் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பைத் தன்னுடைய சொந்த இடத்தில் மட்டுமல்லாமல் உலகத்தில் தன்னிடமிருந்து வெகு தொலைவில் இருக்கும் வேறு இடத்திலும் செய்ய வேண்டும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் மிஷனரிகளை அனுப்புவதின் மூலமாகவோ அல்லது குறுகிய காலம் பணியாற்றும்படியாக ஆட்களை அனுப்புவதின் மூலமாகவோ இதற்கு முன்பாக இருந்தத் தலைமுறைச் செய்ததைப்போலச் செய்யாமல் தான் இருக்கும் இடத்திலிருந்தே உலகத்தின் பிற பகுதிகளில் உள்ள விசுவாசிகளோடு கூட்டுப்பங்காண்மை செய்ய வேண்டும்.

இயேசுவானவர் தம்முடைய கடைசி வார்த்தைகளைச் சீஷர்களுக்குக் கூறினார். அவர்களின் மூலமாக அவர் அதை நமக்கும் கூறினார். உலகத்தில் உள்ள எல்லா தேசங்களுக்கும் போய் சீஷர்களை உருவாக்க வேண்டும் என்று சொன்னார் (பார்க்க, மத்தேயு 28:19). இப்படி அனுப்பப்படுவதை நாம் எல்லா சுவிசேஷங்களிலும் பார்க்கிறோம். அப்போஸ்தலர் 1:8 வசனத்தில் இயேசுவின் கடைசி வார்த்தைகளாக இதைப் பார்க்கிறோம்: ‘‘ன’’ நான் இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் காண்பிக்க முயற்சித்ததைப் போலவே இயேசுவின் சீஷர்கள் நம்முடைய ஆண்டவரிடத்திலிருந்து பெற்ற இந்தக் கட்டளைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாகத் தங்களுடைய சொந்த இடங்கள், தலைமுறைகள் மற்றும் வழிகளின் மூலமாகப் பதிலளித்திருக்கிறார்கள். மறுமலர்ச்சிக்குப் பிறகு அவர்களுடைய இடத்தை எடுத்துக்கொள்வதற்காக வந்தவர்களையும் இது உள்ளடக்கியிருக்கிறது. அதற்கு முன்பே தங்களுடைய இருதயங்கள், சிந்தனைகள், சித்தங்கள் மற்றும் வாழ்க்கைகளைத் தேவனுடைய இரட்சிப்பின் வாக்குத்தத்தமும், இயேசுவில் மனுக்குலம் பெற்றிருக்கும் மிகவும் தெளிவான நற்செய்தியையும் நிறைவேறுவதற்காகக் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள்.

இந்த முன்னாள் தலைமுறைகள் எல்லாம் இயேசுவின் வார்த்தைகளில் எதிர்பார்க்கப்பட்டவைகளைக் காணாமல் மரித்துவிட்டார்கள் – அதாவது உலகத்தின் எல்லா மூலைகளுக்கும் சுவிசேஷம் சென்றடையவேண்டும் என்பதும், அதன் பிறகு இந்தக் கலகத்திற்கு ஒரு முடிவு வரும் என்றும், நாம் ஒரு புதிய வானத்தையும், புதிய பூமியையும் எதிர்பார்க்கலாம் என்பதுமே அந்த எதிர்பார்ப்பு (பார்க்க, மத்தேயு 24:14). ஆனால் நாம் இப்போது வேறு ஒரு காலகட்டத்தில் வாழ்கிறோம். கடைசியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்வைப் பார்ப்பதற்கு நாம் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும்என்று நான் நினைக்கிறோன். கிறிஸ்தவ வரலாற்றில் இப்படிப் பல இடங்களைச்சேர்ந்த பல மக்கள் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கும் வேறு காலத்தை நான் அறிந்திருக்கவில்லை. கடந்த தலைமுறைகளைக் காட்டிலும் திருச்சபை இப்போது பெரியதாக இருக்கிறது. இன்றைய தினத்தில் நாம் உணர்வதைக் காட்டிலும் அது மிகவும் பெரியதாக இருக்கிறது. ஆண்டவர் இன்னும் திரும்பி வரவில்லை என்ற சத்தியத்தின் மூலமாக நம்முடைய வேலை இன்னும் முடியவில்லை என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். கிறிஸ்துவை அறியாத இடங்களில் சுவிசேஷத்திற்காகக் காத்திருப்பவர்களும் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்களானப்பிறகும் இரட்சிப்பிற்குள் வராதவர்கள் பலரும் இருக்கிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்நாட்களில் சுவிசேஷத்தை உலகம் முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உலகளாவிய முயற்சியானது ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்குச் சுற்றிச் சென்றது. கடந்த முப்பது ஆண்டுகளாக, இந்த உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற உலகத் தலைமைத்துவம் மறுபடியுமாகச் சுழன்று வந்துள்ளது. இந்த முறை அது அமெரிக்கத் தலைமைத்துவத்திலிருந்து விலகிச்சென்றுவிட்டது. ஆனால் யாரிடம் அது போய்ச் சேர்ந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை! சுவிசேஷத்தை இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் தேசங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உணர்ச்சி மிகுதியும், அர்ப்பணிப்பும், தியாகமும் கடந்த ஐந்நூறு ஆண்டுகளில் இருந்ததைப் போல ஒருவேளை எந்த ஒரு தேசத்திற்கும் இல்லாமல் இருக்கலாம். இப்போது நாம் இந்த உலகம் முழுவதிலும் பல இடங்களில் அறிக்கையிடும் கிறிஸ்தவர்களைப் பார்க்கிறோம். அதனால் ஆவியானவர்

தேவைக்கேற்ப எங்கிருந்தும், எங்கு வேண்டுமானாலும் அனுப்பும் நடைமுறையை இயற்ற முடிகிறது.

இந்தப் புதிய யதார்த்தம் அமெரிக்கத் திருச்சபையில் ஏற்படுத்தியிருக்கும் உட்குறிப்பைக் குறித்து தான் என்னுடைய கவலை இருக்கிறது. நான் அத்தியாயம் 1இல் கூறியதைப் போல பல அமெரிக்கப் போதகர்கள் மனுக்குல வரலாற்றிற்குத் தேவன் கொடுத்த சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தின் மையத்தன்மையை அறிந்திராமல் இருக்கும் நிலையைக் குறித்தும், அதனால் அவர்களுடைய திருச்சபைகளும் அதைக் குறித்து அறியாமல் இருக்கும் நிலையைக் குறித்தும் நான் வியந்து பார்க்கிறேன். தேவனைக் குறித்தும், தேவன் வரலாற்றை இயற்றும் முறையைக் குறித்தும் உணர்திறன் இல்லாமல் இருப்பதால் (அதிலும் குறிப்பாக நம்முடைய தனிப்பட்ட வரலாற்றையும் கூட) பலருக்குத் தேவன் இந்த உலகளாவிய அளவில் என்ன செய்திருக்கிறார் என்பதும் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதும் தெரிவதில்லை.

தேசங்கள் எங்கிலும் சீஷர்களாக்க வேண்டும் என்ற வேத வசனத்தின் கட்டளையினால் நாம் அசைக்கப்படாவிட்டாலும், இந்த உலகத்தின் மக்கள்தொகையில் அமெரிக்கர்கள் ஐந்து சதவீதம் இருக்கிறார்கள் என்ற உண்மையும், இந்த உலகத்தில் அறிக்கையிடும் கிறிஸ்தவர்களில் ஒன்று அல்லது இரண்டு சதவீதம் இருக்கிறோம் என்ற உண்மையையும் நாம் உணர்ந்து தாழ்மையோடு நாம் பெற்றிருக்கும் பல சொத்துக்களைச் சுவிசேஷத்தைப் பிற இடங்களுக்கு அறிவிப்பதற்குப் பயன்படுத்தலாம். திருச்சபையானது சுவிசேஷத்தை இந்த உலகத்திற்குக் கொண்டு செல்வதற்காகத் தான் இருக்கிறது என்பதை நாம் உணரும்போது நம்முடைய சுயத்தை மையமாகக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு நம்முடைய வாழ்க்கை மற்றும் நாம் பெற்றிருக்கும் ஆதாரங்களை இன்னும் பொருத்தமானவைகளின் மீது கவனம் செலுத்தும்படியாக மாற்றலாம்.

## நம்முடைய தற்போதனை மாதிரியில் காணப்படும் பிரச்சினைகள்

நித்தியமானதும் இந்த உலகத்திற்கேதுவானதுமான உண்மை நிலையில் நாம் கிறிஸ்துவிடம் முழுமையாகக் கீழ்ப்படிவதற்கு என்ன செய்யலாம் என்று நான் கூறுவதற்கு முன்பாக இந்த உலக முழுவதும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்வதில் தற்போதைய அமெரிக்கத் திருச்சபைக் கொண்டிருக்கும் மாதிரிகளில் காணப்படும் இரண்டு பிரச்சினைகளைக் குறித்து நான் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது, இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் எல்லாப் பகுதிகளிலும் சுவிசேஷம் இருக்கிறது என்ற உண்மையை அறிந்த மிஷனரி நிறுவனங்கள் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தாங்கள் தொடர்ந்து இருக்கும்படியான வழிகளைத் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இப்படி எப்படியாவது கலைந்துவிடாமல் இருக்க வேண்டும் என்ற மனநிலையினால் அந்த மிஷனரிகளால் அந்த நிறுவனத்திற்கு மட்டுமல்லாது அதற்கு ஆதரவு தருபவர்களுக்கும் வீண் செலவாகியிருக்கிறது. மிஷனரிகள் இப்படித்தான் என்று பழைய தலைமுறைகளில் இருந்ததைப் போல இவர்கள் நினைத்துத் தொடர்ந்து செலவிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். தேவன் தம்முடைய மக்களைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தை ஒரு முழு தலைமுறை அமெரிக்க மிஷனரிகளுக்குத் தெரியவில்லை. இதன் விளைவாக அவர்கள் தேசங்களை ஒழுக்கப்படுத்துவதில் எந்தப் பங்களிப்பும் கொள்வதில்லை. திட்டங்களைத் துவக்குவது, கட்டிடங்களைக் கட்டுவது என்று எல்லாவற்றையும் செய்தாலும் வெகு சிலரே தாங்கள் சென்றிருக்கும் இடத்தில் காணப்படும் தொலைந்துபோன ஆத்துமாக்களின் மேல் குறிப்பிடத்தகும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்.

சில இடங்களில் மில்லியன் கணக்கானோர் இயேசுவைப் பின்தொடருகிறவர்களாக இருந்தாலும் அமெரிக்க மிஷனரி நிறுவனங்கள் இன்னும் தொடர்ந்து அந்த இடங்களுக்கு ஆட்களை அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மிஷனரிகள் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அந்த இடங்களில் இருக்கும் திருச்சபைகள் அந்த மிஷனரிகளைக் காட்டிலும் அதைச் சிறப்பாகச் செய்வதற்கு அறிந்தவர்களாக இருக்கிறார்கள். அல்லது சந்திக்கப்படாத ஒரு மக்கள் கூட்டம் இருப்பதைப் பார்த்துவிட்டு அங்கு அவர்கள் செல்கிறார்கள். அந்த நாட்டின் திருச்சபையின் பொறுப்பைக் கொஞ்சம்கூடக் கண்டுகொள்ளாமல் அவர்கள் தங்களுடைய சொந்த மக்களை அனுப்புகிறார்கள். அதில் பலர் சுவிசேஷத்தை அறிவிப்பதில், சபை ஸ்தாபிப்பதில் அல்லது உள்ளூர் தலைவர்களை உருவாக்குவதில் அனுபவம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

ஏற்கெனவே ஒரு இடத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவிட்ட வெற்றியைக் கொண்டாடி அங்கிருந்து

நாம் கலைந்துசெல்வதைக் குறித்து அறியாதவர்களாக நாம் இருக்கிறோம். அமெரிக்கக் கிறிஸ்தவம் என்பது மிஷனரி தொழிற்சாலையாகிவிட்டது. இந்த உலகம் முழுவதும் புதியதாக ஏற்பட்டிருக்கும் நல்ல மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இரண்டாவதாக, தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கும் அமெரிக்கத் திருச்சபைகள் இந்த மிஷனரி நிறுவனங்கள் செயலிழந்துவிட்டதை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் வெற்றிடம் இருப்பதாக நினைத்துத் தங்களுடைய மக்களை இந்த உலகம் முழுவதும் அனுப்புகிறார்கள். அவர்களுடைய பார்வையில் அப்படி அனுப்புவதற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கம் மிகவும் தெளிவானதாக இருக்கிறது: ‘‘அந்த நிறுவனங்கள் எங்களுக்கு அனுமதியளிப்பதைக் காட்டிலும் உள்ளூர் திருச்சபைகள் இன்னும் அதிகமான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.’’ ‘‘எங்களுடைய மக்களுக்குத் தெரியாது. நெடுந்தூரத்திற்கு மக்கள் அனுப்பப்படுவதைக் குறித்து அவர்கள் அக்கறைக் கொள்வதில்லை.’’ ‘‘நாம் உண்மையானதைத் தொடுவதைப் போன்ற உணர்ச்சியைப் பெற வேண்டும்.’’ ‘‘எங்களுடைய மக்களை நேரில் அழைத்துச் சென்று காட்டி கற்பிக்கும்போது அதிகப்படியான காணிக்கைகளையும், ஜெபங்களையும் பெற்றுத்தருகிறது.’’ இவை எல்லாம் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கின்றன! இது மிகவும் நன்றாக இருப்பதால் மிஷன் நிறுவனங்களும் இவர்களோடு சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் பயண நிறுவனத்தைப் போலாகிவிட்டார்கள். மிஷனரிகளின் களம் அமெரிக்கக் குழுக்கள் சென்று பார்க்கும் இடமாகிவிட்டது.

இப்படிக் குறிகிய காலத்திற்குச் சென்றுவருவது சில நன்மைகளை ஏற்படுத்தினாலும் கள நிலவரம் எதிர்மறையான ஆதாரங்களையே கொடுக்கின்றன. அங்கு ஒரே குழப்பமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதிகப்படியான குழுக்கள் ஒரே இடத்திற்குச் செல்கிறார்கள். உள்ளூர் தலைவர்களால் சமாளிக்க முடியவில்லை. இது தேவையில்லாத சார்புத்தன்மையை ஏற்படுத்துகிறது. சில அமெரிக்கர்கள் அங்குள்ளவர்களோடு நெருக்கத்தைப் பெற்று அவர்களுக்குப் பணம் அனுப்பும் நிலை ஏற்படுகிறது. அவர்கள் நேரடியாகக் கேட்பதால் இவர்களும் கொடுக்கிறார்கள்.

ஆனால் இந்த அணுகுமுறையின் மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பது இது சுவிசேஷத்தைக் கெடுத்துவிடுவதுதான். இந்தக் குழுக்களுக்கு எவ்வளவு பயிற்சி கொடுத்தாலும் அங்குள்ள மக்களின் கலாச்சாரம் மற்றும் மொழிக்கு ஏற்றவாறு அவர்களால் சரியான வழியில் சுவிசேஷத்தைக் கொண்டு சேர்க்க முடியாது. ஆம் சில இடங்களில் நல்ல காரியங்கள் நிகழ்கின்றன. ஆனால் இவைகள் எல்லாம் பல வருடங்களாகப் பயிற்சிபெற்று அனுபவம் பெற்ற மிஷனரிகளால் ஏற்படுகின்றன. குறுகிய காலத்திற்குச் செல்லும் மிஷனரிகள் கலாச்சாரரீதியாகத் தொடர்புகொள்வதைக் குறித்து நன்கு அறிந்திருக்கும், நிரூபிக்கப்பட்டிருக்கும் விதிகளை மீறுகிறவர்களாக இருக்கிறார்கள். ஒரே ஒரு வெயில் காலத்தில் மட்டும் ஒருவருக்கொருவர் சரியான தொடர்பில்லாத நிறுவனங்கள் மற்றும் திருச்சபைகளின் மூ லமாகப் பத்தாயிரம் அமெரிக்க வாலிபர்கள் ஒரு குறிப்பிட்ட நகரத்திற்கு ‘‘உள்ளூர் மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக’’ அனுப்பப்பட்டார்கள் என்று ஒரு மிஷனரி என்னிடம் புலம்பினார். அது நன்மையைச் செய்வதற்குப் பதிலாகத் திருச்சபையும் சுவிசேஷமும் வெளிநாட்டினருடையதா அல்லது அமெரிக்கர்களுடையதா என்ற குழப்பத்தைத்தான் ஏற்படுத்தியது.

இன்றைய தினத்தில் யாரும் எங்கும் எளிதாகச் செல்லலாம் என்ற இந்த யுக்தியானது உள்ளூர் திருச்சபைகள் தங்களுக்கென்று பணத்தை எடுத்துச் செலவுசெய்வதற்குப் பயன்படுத்தும் ஒரு போர்வையாக இருக்கிறது என்று நான் சந்தேகம் கொள்கிறேன் (நான் தவறாக எண்ணியிருந்தால் நல்லது என்று நம்புகிறேன்). குறுகிய காலத்திற்குச் செல்லும் அணிகள் தங்களுடைய செலவைத் தாங்களே பார்த்துக்கொள்வதால் முன்பெல்லாம் தங்களுடைய கணக்கிலிருந்து வெளி தேசங்களுக்கு பத்து முதல் இருபது சதவீதம் நிதி ஒதுக்கிய திருச்சபைகள் இப்போது அதைக் குறைத்துக்கொண்டு தங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

நான் திகைத்துப்போயிருக்கிறேன். இந்த உலகத்தில் பாவம், நீதி மற்றும் நியாயத்தீர்ப்பைக் கொண்டு உணர்ச்சியை ஏற்படுத்தும் வேலையைச் செய்யும் தேவனுடைய ஆவியானவர் புண்பட்டிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். திருச்சபை எப்படிச் ‘‘சிறப்பாக’’ நடக்க வேண்டும் என்பதைக் குறித்த ஆய்வின்படி வேறு எந்தத் தலைமுறையும் இதுவரை செய்திராத வகையில் நாம் இருக்க வேண்டும் என்பதனால் அது நம்மைக் கஞ்சத்தனமாக்குகிறது. நாம் பொறுப்பேற்றுக்கொள்ளும்படியாகத் தேவன் நமக்குக் கொடுத்திருப்பவர்களிடத்திலும் இதே மனோபாவத்தை நாம் பெறும்படியாக நிகழ்கிறது.

உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயத்தில் இரண்டு சதவீதம் கூட இல்லாத நாம் அதனுடைய சொத்துக்களில் பெரிய பகுதியைப் பெற்றிருக்கிறோம் என்ற உண்மையை நான் தேவனுக்கு முன்பாகவும் சுவிசேஷத்தின் மூலமாக இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் அவருடைய வாக்குத்தத்தத்தின் மூலமாகவும் நாம் எப்படி நியாயப்படுத்தப்போகிறோம்.

## நம்முடைய நோக்கத்தைத் தொலைநோக்குப் பார்வைக்குக்கொண்டுபோகும் வழிகள்

தேவனுடைய இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் பணியை நிறைவேற்றுவதற்காகத் திருச்சபைகள் முழுமையாகப் பங்களிக்கும் பொறுப்பைப் பெற்றிருக்கும்போது நாம் இந்தப் பணியில் எப்படிப் பகிர்ந்துகொள்ள முடியும்? அமெரிக்கத் திருச்சபைகள் இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் தேசியத் திருச்சபைகளோடு கூட்டுப்பங்காண்மைக் கொள்வதே சிறப்பான வழி என்று நான் விசுவாசிக்கிறேன். இதுதான் நான் தொலைநோக்கம் என்று கூறுவதற்கான வரையறையாக இருக்கிறது.

இது நம்மை இன்னும் அதிகமாக விரிவடையச் செய்யும். சொல்லப்போனால் இது அழுத்தம் கொடுக்கிற ஒன்றாக இருக்கும். நாம் இதுவரை எதிர்மறையான விளைவுகளுக்காக நம்முடைய மக்களை ஆயத்தப்படுத்தியிருக்கிறோம். இதனால் நாம் இந்த மாற்றத்தை ஏற்படுத்தமுடியுமா என்று நான் சந்தேகம் கொள்கிறேன். தேவன் தம்முடைய சர்வவல்லமையுள்ள சித்தத்தின் மூலமாக தம்முடைய சொந்த ஆசைகளை நிறைவேற்றுவார் என்று நான் நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவருடைய கிரியையில் அமெரிக்கக் கிறிஸ்தவர்கள் செயல்பூர்வமான உலகளாவிய பங்காளர்களாக இருப்பார்களா? எனக்குத் தெரியாது!

திருச்சபைக் கூட்டுப்பங்காண்மையைக் குறித்த இந்தப் பரிமாணம் அதிகப்படியான புதுப்பித்தலின் மூலமாகத்தான் ஏற்பட முடியும். இதற்கு முன்பு கொடுக்கப்பட்டிருக்கும் ஏழு அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள சிந்தனைகளின் அடிப்படையில் செய்யக்கூடிய யுக்திகள் பின்வரும் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை தற்போதைய அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதைப்போல கிடையாது. புதிய தைரியமான ஆலோசனைகளாக அவை இருக்கின்றன.

முதலாவது, அமெரிக்கச் சபைகள் தாங்கள் செயல்பூர்வமாகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும் கூட்டுப்பங்காண்மையில் ஈடுபடக்கூடிய உள்ளூர் திருச்சபைக் கூட்டமைப்புகளையும் தலைவர்களையும் பெற்றிருக்க இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த இடத்தில் அவர்களும் அவர்களோடு பங்களிப்பைப் பெற்றிருக்கும் சபைகளும் தங்களுடைய இடத்தில் என்ன செய்கிறார்களோ அதை அந்தப் புதிய இடத்தில் செய்வார்கள். இது தேவன் நம்மைச் சுற்றியிருக்கும் உலகத்தில் செய்யப்போகும் காரியங்களைக் கிறிஸ்துவின் மக்கள் எல்லோரையும் கொண்டு செய்வார் என்பதின் இயற்கையான விரிவாக்கமாக இது இருக்கிறது. நமக்கு அருகாமையில் இருக்கும் இடங்களில் இது நிகழ்வது சாத்தியமான காரியமாக இருக்கும். நாம் இன்னும் தூரமாகச் செல்லும்போது இது கடினமான காரியமாகிவிடுகிறது. ஆனால் அனுப்பும் சுபாவத்தைக் கொண்டிருக்கும் சுவிசேஷத்தின் அடிப்படையிலும், கிறிஸ்தவர்கள் இந்த உலகம் முழுவதிலும் இருக்கிறார்கள் என்ற உலகளாவிய உண்மைநிலையை அடிப்படையாகக் கொண்டும், ஒவ்வொரு திருச்சபையும் இந்தப் பணியில் தன்னை உட்படுத்திக்கொள்ள ஒரு வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போல, வரலாற்றுப்பூர்வமாகப் பார்த்தால் மிஷனரிகள் என்று அழைக்கப்பட்டவர்களை இந்த உலகைச் சுற்றியிருக்கும் மக்களிடமும், இடங்களுக்கும் அனுப்புவதே அர்த்தமாக இருந்திருக்கிறது. இந்த வழி எப்போதுமே சிறப்பாக வேலை செய்யும் என்று சொல்ல முடியாது. ஆனாலும் தேவன் தம்முடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு இந்த வழியைப் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் இந்த உலகம் மாறிவிட்டது. அமெரிக்கத் திருச்சபைத் தொடர்ந்து சில மிஷனரிகளை அனுப்ப வேண்டும் என்றாலும் முன்பு போல் பலரை அனுப்ப வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்குமாறாக உள்ளூர் சபையானது தன்னையும் தன்னுடைய மக்களையும் இந்த உலகத்தில் இன்னும் நிறைவேற்றி முடிக்கப்படாத பணியைச் செய்வதற்குத் தொடர்புபடுத்தப் புதிய வழிகளைத் தேட வேண்டும். இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் திருச்சபைகளில் தேசியப் பங்காளர்களைக் கண்டுபிடிப்பதோடு சிறப்பான வழி எனக்கு வேறு எதுவும் தெரிவில்லை.

யாரைவேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்று கூறவில்லை, தங்களுடைய இலக்கு

இவர்கள்தான் என்றோ அல்லது இந்த இடமே தன்னுடைய இலக்கு என்றோ அடையாளம் கண்டு, இந்த இடத்திற்குள் இருப்பவர்களைச் சந்திக்கும்படியாகத் தங்களுடைய மக்களையும் சொத்துக்களையும் அணிதிரட்டும் பங்காளர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வட்டம் ஒரு முழு நகரத்தையோ அல்லது தேசத்தையோ உட்படுத்தியிருந்தால் மிகவும் நல்லது. திருச்சபையானது ஒரு லட்சம் அல்லது அதற்கும் மேல் இருக்கும் மக்களைக் கொண்ட பிராந்தியத்தை அடையாளப்படுத்தி, அங்கு ஏற்கெனவே திருச்சபைகள் எங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கிட்டு, எங்கு சுவிசேஷத்தின் சாட்சித் தேவைப்படுகிறது என்பதையும் காண வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில் ஆயத்தமாகும்போது அந்த இடத்தை எப்படி முழுமையாக சுவிசேஷத்திற்குள் கொண்டு வருவது என்று எல்லோருக்கும் தெரியும்போது அமெரிக்கர்களாகிய நாம் உலகத்தைச் சுற்றியிருக்கும் இந்தத் திருச்சபைகள் நாம் பெற்றிருக்கும் அதே அழைப்பைத்தான் பெற்றிருக்கின்றன என்று நாம் உடனடியாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்: தேவனுடைய மக்களை அணிதிரட்டி, தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல். இதை நாம் அறிந்துகொள்ளும்போது திருச்சபைக் கட்டிடங்கள் கட்டுவது, மருத்துவமனைகள் அல்லது பள்ளிகள் கட்டுவது என்று நம்முடைய பங்களிப்பின் முக்கிய கவனம் திசைதிரும்பிவிடாதபடி நம்மைக் காப்பாற்றிவிடும். ஆனாதைகள் மற்றும் கைம்பெண்களிடத்தில் ஊழியம் செய்தல் போன்று அவர்கள் இலக்காகக் கொண்டிருப்பவர்களிடத்தில் செல்வதற்கு நாம் அவர்களுக்குத் தேவையான வழிகளில் அவர்கள் நிலைத்துப் பணியாற்றும்படியாக உதவி செய்யலாம்.

இரண்டாவதாக, அமெரிக்கத் திருச்சபை அவர்களுடைய உள்ளூர் திருச்சபைகளோடு சேர்ந்து அந்த வெளியூர் திருச்சபையோடு கூட்டுப்பங்காண்மையைக் கொண்டிருக்க வேண்டும். நமக்கு அருகில் உள்ள திருச்சபைகளோடு நாம் சேர்ந்து இந்தப் பணியில் பங்களிக்கும்போது நெடுந்தூர கூட்டுப்பங்காண்மையை நாம் செயல்பூர்வமாகச் செய்ய முடியும். வெளியூரில் இருக்கும் நம்முடைய இலக்கைப் பெரிதாக வைக்கவும் இது உதவும். வெளியூரில் இருக்கும் ஒரே ஒரு உள்ளூர் திருச்சபையோடு நாம் பங்காளிகளாகுவதைத் தவிர்க்க வேண்டும். பெரிய கூட்டமைப்பாக இருக்கும் திருச்சபைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் திருச்சபைகளின் உள்ளூர் பொறுப்புகளைக் கெடுக்கும் விதமாக நாம் எந்த முதலீட்டையும் செய்யக்கூடாது. அவர்களால் தற்காத்துக்கொள்ள முடிந்த திறனைக் கொண்டிருக்கும் அளவீட்டையும் தாண்டிய அமைப்புகளைக் கட்டியெழுப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

மூன்றாவது, அமெரிக்கத் திருச்சபைகள் அதிகப்படியான சிறு குழுக்களை மற்ற நாடுகளுக்கு அனுப்பக்கூடாது. நம்முடைய தலைவர்களைத் தான் நாம் வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடிய முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய பொறுப்பின் சொந்த வட்டத்தில் நம்முடைய சொந்த மக்களுக்கு ஊழியம் செய்து தலைமைத்துவத்தில் முதிர்ச்சிபெற்றவர்களைத் தான் அனுப்ப வேண்டும். நாம் ஆசைப்பட்டாலும் மற்ற நாடுகளில் இருக்கும் மக்களுக்கு நம்முடைய பிரசங்கங்கள் தேவையில்லை. திருச்சபைகளைச் சுவிசேஷத்தின் அடிப்படையில் கொண்டு வருவது மற்றும் திருச்சபை ஸ்தாபிப்பதில் அதிகப்படியான உதவி அவர்களுக்குத் தேவையில்லை. அதுபோல நம்மிடம் அதிகப்படியாக இருக்கும் பயிற்சி உபகரணங்களும் அவர்களுக்குத் தேவையில்லை. அமெரிக்கர்கள் திருச்சபையை எப்படி செயல்டுத்துகிறார்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எனவே நாம் அதிகப்படியான மக்களை அனுப்புவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வெறுமனே கள பணியாற்றுவதற்காக மட்டும் நாம் ஒரு குழுவை அனுப்ப வேண்டும் என்று விரும்பினால் அதைக் குறித்து நாம் மறுபடியும் சிந்திக்க வேண்டும். அவர்களை அனுப்புவதற்கு நாம் அமெரிக்காவில் ஒரு இடத்தைக் கண்டுபிடிக்கலாம்.

நான்காவதாக, அமெரிக்கத் திருச்சபைகள் தங்களுடைய மக்களுக்கு இந்த உலகத்தைக் குறித்துத் தெரியப்படுத்துவதற்கு நேரம் செலவிட வேண்டும். நம்முடைய மக்களை வெளிநாட்டிற்கு அனுப்பாமல் பொதுவாக இந்த உலகத்தைக் குறித்து அவர்களுக்குக் கற்பித்து, உலகத்தில் சுவிசேஷமயமாக்குவதற்கான முயற்சிகளைக் குறித்து அவர்களுக்குப் பயிற்றுவித்தால் மட்டும் போதும் என்று நான் நினைக்கிறேன். நாம் சரியாக அவர்களுக்கு நாம் சரியான பயிற்சியை அளித்தோமானால், நம்முடைய வெளிநாட்டு பங்காளர்களும் இந்தப் பணியில் நமக்கு உதவ முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற கட்டளையைக் குறித்து நம்முடைய தலைமைத்துவம் நம்பிக்கைக் கொண்டிருந்து, நித்தியப் பார்வை மற்றும்

உலகப் பார்வையைக் குறித்து அவர்கள் தங்களுக்குத் தாங்களே கற்பித்திருந்தார்கள் என்றால், அதுமட்டுமே அமெரிக்கத் திருச்சபைகளில் காணப்படும் சூழ்நிலைகளை மாற்றக்கூடும். வரலாற்றுப்பூர்வமாகவும், உலகளாவிய அளவிலும் சுவிசேஷத்தின் எழுப்புதல் எத்தகையது என்பதைக் குறித்தப் புரிதல் இல்லாததே நாம் அறிவில்லாமல் இருக்கும் நிலைக்குக் காரணமாக இருக்கிறது.

ஐந்தாவது, அமெரிக்கத் திருச்சபைகள் தங்களுடைய மக்களிடம் அந்த இடங்களுக்கு அவர்கள் செல்லாவிட்டாலும் அந்த இடங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதிலும் இருக்கும் இடங்களுக்காக ஜெபிப்பதைக் கற்றுக்கொள்ளும்போது தங்களுடைய பிள்ளைகளை நித்திய பார்வையோடும், உலகளாவியப் பார்வையோடும் எப்படி வளர்க்கத்துவங்குவது என்பதை நாம் நம்முடைய மக்களுக்குப் போதித்துக் காண்பிக்கத் துவங்கலாம். அமெரிக்கர்கள் இருபத்திநான்கு மணிநேரமும், வாரத்தின் ஏழு நாட்களும் சந்திக்கும் கலாச்சாரத்தின் தற்காப்பு சிந்தனையைக் களைவதற்கு இது உதவியாக இருக்கும்.

ஆறாவது, அமெரிக்கத் திருச்சபைகள் இப்படிப்பட்ட தொலைநோக்கு ஊழியத்திற்குத் தங்களுடைய நிதி ஒதுக்கீட்டிலிருந்து அதிகமாகக் கொடுக்க வேண்டும். நம்முடைய திருச்சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து உள்ளூருக்கு 50 சதவீதத்தைக் கொடுத்துவிட்டு, வெளிநாட்டு இலக்குகளுக்கு மீதமிருக்கும் 50 சதவீதத்தைக் கொடுக்கக் கேட்பது அதிகப்படியானதா?

ஏழாவது, அமெரிக்கத் திருச்சபைகள் தங்களுடைய முக்கியமான தலைவரை வெளிநாட்டு இலக்கிற்கு அனுப்ப வேண்டும். நம்முடைய உள்ளூர் இலக்குகளில் விசுவாசிகள் செய்யும் காரியங்களைச் செய்யும்படியாக அங்கு அவர்கள் உதவி செய்வார்கள். தலைவர் அக்கறைக்கொண்டு, புரிந்துகொண்டு, நிதி ஆதாரங்களைக் கொடுப்பதைப்போலவே நம்முடைய சபைகளும் அக்கறைக்கொண்டு, புரிந்துகொண்டு, நிதி ஆதாரங்களைக் கொடுப்பார்கள். நாம் தலைமைத்துவத்தை அனுப்பிவிட்டு, மக்களை இங்கேயே இருக்கச் சொல்ல வேண்டும்.

எட்டாவதாக, மற்ற தேசங்களில் இருக்கும் உள்ளூர் திருச்சபைகள் முக்கிய இடத்தைப் பெறாமலும், சுவிசேஷத்தை அறிவித்தல் மற்றும் சபை ஸ்தாபித்தலில் நேரடியாக உதவிசெய்யாமலும் இருக்கும்படியாக எடுக்கப்படும் வளர்ச்சிசார்ந்த யுக்திகளைக் குறித்து அமெரிக்கத் திருச்சபை கவனமாக இருக்க வேண்டும். கைம்பெண்கள் மற்றும் பிள்ளைகளைப் பாதுகாக்கும் சமுதாயம் சார்ந்த ஊழியங்கள் எப்போதுமே சில பிரச்சினைகளை ஏற்படுத்துபவையாக இருக்கும். ஏனென்றால் நிதி நிர்வாகம் செய்பவர்கள் தவறு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒரு இடத்தில் செய்யப்படும் சுவிசேஷம் சார்ந்த நடைமுறையில் வளர்ச்சி தேவைப்பட்டால் அங்கிருக்கும் திருச்சபைகள் பார்த்துக்கொள்ளும்படியான அளவில் அந்தப் பணி இருக்க வேண்டும். அமெரிக்கத் திருச்சபைகள் அதில் நேரடியாக ஈடுபடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். சுவிசேஷம் அந்தச் சூழல் சார்ந்ததாகவும் உள்ளூர் மக்களுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பெரும்பாலான இடங்களில் வெளிநாட்டவர் வரும்போது சுவிசேஷம் பரப்பப்படுவது பாதிக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக சுவிசேஷத்தை அறிவிப்பது செல்வத்தைப் பெற்றிருப்பதோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இப்படி நிகழ்கிறது. ஏனென்றால் அந்த இடங்களில் செல்வம் சற்றுக் குறைந்து காணப்படலாம்.

இந்த வழியானது வறுமை, கைவிடப்படுதல் அல்லது ஒடுக்கப்படுதலைச் சார்ந்த அமைப்புகளை மாற்றாது. நாம் எல்லா கைம்பெண்களுக்கும் உதவி செய்ய முடியாவிட்டாலும் இயேசுவைப் போன்ற வாழ்க்கை முறையை உள்ளூர் திருச்சபைகள் ஏற்றுக்கொள்ளும்போது, மூன்று அல்லது நான்கு அல்லது ஐம்பது கைம்பெண்கள் கூட உதவி பெறலாம். சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது!

ஒன்பதாவது, நம்முடைய நாட்டிலிருந்து உலகத்திற்குச் செல்லும் மிஷனரிகளை அமெரிக்கத் திருச்சபைகள் தொடர்ந்து ஆதரித்து அனுப்ப வேண்டும். ஆனால் நாம் தேவன் திருச்சபையை வடிவமைத்தப்படி அதைப் புரிந்துகொள்பவர்களாகவும், தலைமைத்துவம் அதற்குள் எப்படிச் செயல்பட வேண்டும் என்று அறிந்தவர்களாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக மற்றவர்களைச் செயல்படச் செய்து, எல்லா வேலைகளையும் தாங்களே செய்யாதவர்களாகவும் அனுபவத்தினால் காண்பித்திருக்கும் நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கவனிக்கும் இருதயத்தையும், கீழ்ப்படிதலைக் கொண்ட சித்தத்தையும் பெற்றிருக்கும் சில இளம் வயதினரையும் நாம் அனுப்பலாம். அனுபவம் மிக்கவர்களைக் கொண்ட அணியில் இருந்து ஒழுக்கப்படுத்தப்படுவதைக் காட்டிலும் சிறப்பான இடம் வேறு எதுவும் கிடையாது. அவர்கள் பிற்காலத்தில் எப்படிப்பட்ட ஊழியம் செய்தாலும் பரவாயில்லை. இந்த அனுபவம் தேவன் அவர்களை எங்கு

அழைத்துச் சென்றாலும் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக அவர்கள் இருக்கும்போது மிகவும் உதவியாக இருக்கும்.

கடைசியாக, அமெரிக்கத் திருச்சபைகள் தங்களுடைய வெளிநாட்டு பங்காளர்களையும், அவர்களிடம் அனுப்பும் மிஷனரிகளையும் கணக்குக்கொடுப்பவர்களாக வைத்திருக்க வேண்டும். நம்முடைய உள்ளூர் திருச்சபைகளில் நாம் செய்வதைப் போல நாம் ஏற்கெனவே விவாதித்தக் காரியங்களை நாம் நம்முடைய வெளியூர் கூட்டுப் பங்காண்மைத் திருச்சபையிடமிருந்தும் எதிர்பார்க்க வேண்டும்: வேதாகமரீதியான ஐந்து தொடக்கநிலை மதிப்பீடுகளில் மக்கள் வளருகிறார்களா? தேவன் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் எல்லா இடங்களிலும் இந்த மதிப்பீடுகளை வாழ்ந்து காண்பிக்கிறார்களா? திருச்சபையானது தான் பொறுப்பேற்றிருக்கும் இடத்தில் மதிப்பீடு செய்ய முடிந்த அளவிற்குத் தாக்கம் ஏற்படுத்துகிறதா? மக்கள் விசுவாசத்திற்குள் வருவதை நாம் பார்க்கிறோமா?

நாம் நம்முடைய பங்காளர்களையும், மிஷனரிகளையும் பொறுப்புணர்வோடு இருக்கும்படியாகக் கணக்குக்கேட்பதைப் போல நாமும் அதே காரியங்களுக்குக் கணக்குக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கென்று ஒரு மதிப்பீட்டை வைத்துக்கொண்டு வேண்டுமென்றே நமக்கு அதைச் செய்யாமல் இருப்பது நேர்மையற்ற நிலையாகும்.

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் எல்லாம் அமெரிக்கத் திருச்சபையின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடாது. ஆனால் வருங்காலங்களில் ஆரோக்கியமான வழியில் அனுப்புதல், செல்லுதல் மற்றும் வளருதல் நிகழும்படியாக அனுமதிக்கும்.

# குறிப்புகள்

**முன்னுரை**

1. நான் எழுதிய புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் காணொலிகள் www.spcglobal.org என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். இது எல்லையெங்கிலும் சபைகளை ஸ்தாபித்தல் நிறுவனத்தின் இணையதள முகவரியாகும்.

**அறிமுகம்**

1. தேவனோடு உறவு மற்றும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதைக் குறித்து இன்னும் ஆழமான சிந்தனைகளைப் பெறுவதற்கு *Divine Design: In the Beginning* (http://scpglobal.org/resources/) என்ற புத்தகத்தை வாசியுங்கள்.

**அத்தியாயம் 1: நாம் நம்முடைய தேசத்தின் வரலாற்றை எழுதுகிறோம்**

1. இந்த எண்ணிக்கைகளைக் குறித்த ஆதாரங்களை நான் குறிப்பாக பெற்றிருக்காவிட்டாலும் தனிப்பட்ட முறையில் நான் இந்தத் திருச்சபை வளர்ச்சியில் ஒரு பங்காக இருந்திருக்கிறேன். இது சரியானதுதான் என்று விசுவாசிக்கும் பலருள் நானும் ஒருவனாக இருக்கிறேன். 1990களில் *Operation World* என்ற புத்தகத்தை எழுதிய பேட்ரிக் ஜாண்ஸ்டோன் 2000ஆம் வருடத்திற்குள் இந்தியாவில் 200,000 புதிய திருச்சபைகள் இருக்கும் என்று கூறியிருந்தார். திருச்சபையானது ஒரு வருடத்திற்குச் சராசரியாக 15 சதவீதம் பெருகிக்கொண்டிருக்கிறது. இன்றும் அந்த மதிப்பீடு எந்தக் குறைவும் இல்லாமல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.
2. *I'm Gonna Let It Shine: 10 Million Lighthouses to Go* (Pasadena, CA: William Carey Library, 2001), ஜிம் மாண்ட்கோமெரி எழுதியது. "DAWN பிலிப்பீன்ஸ் இல் தான் இது 1974ஆம் ஆண்டு துவங்கியது. 2000ஆண்டின் முடிவில் 5000 சபைகளிலிருந்து 50000 சபைகளாக வேண்டும் என்ற அதனுடைய இலக்கை அடைந்திருக்கிறது.
3. கெல்லி ஹாட்டக், "7 Startling Facts: An Up Close Look at Church Attendance in America," December 29, 2015, ChurchLeaders, http://churchleaders.com/pastors/pastorarticles/139575-7-startling-facts-an-up-close-lookat-church-attendance-in-america.html (accessed June 5, 2017).
4. டெல் டாக்கெட், "What's a Christian Worldview?" Focus on the Family, http://www.focusonthefamily.com/faith/christian-worldview/whats-a-christianworldview/whats-a-worldview-anyway (accessed June 5, 2017).

**அத்தியாயம் 3: திருச்சபையானது தன்னுடைய வெற்றியை எப்படி அளவீடு செய்ய வேண்டும்?**

1. *A Mind Awake: An Anthology of C. S. Lewis* (London: Geoffrey Bles, 1968), 130.

**அத்தியாயம் 6: திருச்சபைத் தலைமைத்துவத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்**

1. டி. ஏ. கார்சன், *The Gospel According to John, Pillar New Testament Commentary* (Leicester, England: Inter-Varsity Press, 1991), 521.
2. மெரில் சி. டென்னி, *John: The Gospel of Belief: An Analytic Study of the Text* (Grand Rapids: Eerdmans, 1976), 31–32.
3. தலைமைத்துவத்தின் ஐந்து செயல்பாடுகளைக் குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கு எப். எப். புரூஸ் எழுதிய இரண்டு புத்தகங்களான *The Pauline Circle and Men and Movements inthe Primitive Church: Studies in Early Non-Pauline Christianity* பார்க்கவும். இவை வெறுமனே உள்ளூர் திருச்சபைகளுக்காக மட்டுமல்லாமல் பெரிய அளவிலான திருச்சபைகளுக்கும் பொருந்தும்.

**பிற்சேர்க்கை 1: தேவன் தம்முடைய திருச்சபையைக் குறித்துக் கொண்டிருக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துதல்.**

1. *SCP Journey* மற்றும் *SCP Reader* மற்றும் பிற ஆதாரங்களைக் கொண்டு நீங்கள் தேவன் மக்களுக்குள் மற்றும் மக்களின் மூலமாகக் கொடுக்கும் இரட்சிப்பைக் குறித்துப் புரிந்துகொள்ளுவதற்கும் செயல்படுத்துவதற்கும் என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.